கல்கி

ஸ்வீட்டா...ஸ்டைலா...ஸ்மார்ட்டா...

இந்த இதழுடன்
கல்கி ஷோகேஸ்
பகுதியில்
**நல்லது செய்யும்
நல்லி**
- 32 பக்க இணைப்பு





விலை ரூ.55/-
கூரியரில் பெற ரூ.15/-
சேர்த்து அனுப்பவும்
(DD/MO மட்டும்)
படிக்க...
பாதுகாக்க...
பரிசளிக்க...
கல்கியில்
வேளுக்குடி ஸ்ரீ க்ருஷ்ணன் சுவாமிகள்
எழுதிய
'கண்ணனைத் தேடி...'
புத்தகமாகத் தயாராகிக் கொண்டிருக்கிறது
முன் பதிவு மற்றும் விவரங்களுக்கு :
ஜெயா ஸ்ரீனிவாசன், 'சந்தா பிரிவு',
பரதன் பப்ளிகேஷன்ஸ், கல்கி பில்டிங்ஸ்,
47, ஜவாஹர்லால் நேரு சாலை, ஈக்காடுதாங்கல்,
சென்னை - 32. தொலைபேசி : 044 - 4343 8888
கண்ணனைத் தேடி...
வேளுக்குடி ஸ்ரீ க்ருஷ்ணன் சுவாமிகள்



விதையும் விருட்சமும்!

சின்னத் திரையில் தொடர்ந்து சமயச் சொற்பொழிவு மூலம் பலரின் கவனத்தை ஈர்த்துவரும் வாரியாரின் சிஷ்யை மங்கையர்க்கரசியைச் சந்தித்து உரையாடியதிலிருந்து...

''என் வாழ்க்கைப் பயணம் பக்தியோடு பின்னப்பட்டது என்ற முடிவோடு நான் சிறுவயதிலேயே சமயச் சொற்பொழிவுத் துறைக்கு வந்துவிட்டதால் இளமையின் சந்தோஷங்கள் எதையும் இழந்துவிட்டதாக நினைக்கவில்லை. நடக்கும் அனைத்து விஷயங்களையும் அதன் போக்கிலேயே மகிழ்வுடன் ஏற்றுக் கொள்கிறேன். கல்லூரிகளுக்குச் சென்று மாணவர்களிடையே சொற்பொழிவு செய்வதன் மூலம் இன்றைய இளைய தலைமுறையைப் பற்றியும் என்னால் அறிந்துகொள்ள முடிகிறது.

எனக்குப் பெயர் வைத்ததே வாரியார் சுவாமிகள்தான். சிறு குழந்தையிலிருந்தே அவரின் நிகழ்ச்சிகள் அனைத்திலும் அவர் அருகிலேயே இருப்பேன். எனக்கு ஆறு வயதாகும்போது ஒருமுறை சுவாமிகள் மதுரை மீனாட்சியம்மன் கோயிலின் ஆடி வீதியில் சொற்பொழிவு செய்து கொண்டிருந்தார். திடீரென பக்தர்களைப் பார்த்து 'மீனாட்சியைத் தரிசனம் செய்த நீங்கள் இப்போது மீனாட்சி அம்மன் பேசி கேட்கப் போகிறீர்கள்' என்று என்னைப் பேசும்படி சொன்னார். திருக்குறளும் இதிகாசமும் என்ற தலைப்பில் நாற்பத்தைந்து நிமிடங்கள் பேசினேன். இதுதான் எனது முதல் சொற்பொழிவு அரங்கேற்றம். என்னைச் சுவாமிகள் சிஷ்யையாக ஏற்றுக்கொண்ட சம்பவமாக இதை நினைக்கிறேன். அந்த ஆன்மிக விருட்சத்தின் புகழ் பரப்பும் விதை நான்.

எனக்கு சைவம், வைணவம் என்ற வேறுபாடெல்லாம் கிடையாது. சொற்பொழிவு மேடைகளில் சைவம், வைணவம் - இரண்டையும் மேற்கோள் காட்டிப் பேசுகிறேன். திருக்குறள், திருப்புகழ், இராமாயணம் - மூன்றும் எனக்கு மிகவும் பிடித்த இலக்கியங்கள்.

மதங்களின் பெயரால் நடந்து கொண்டிருக்கும் பழக்கவழக்கங்கள் அனைத்துமே மூடத்தனமானவை என்று சொல்ல முடியாது. வாசலில் கோலம் போடுவது, எண்ணெய் தேய்த்துக் குளிப்பது, விரதம் இருப்பது, காது குத்துதல் போன்ற எத்தனையோ சமயம் சார்ந்த பழக்க வழக்கங்கள், ஆரோக்கியத்தை, வாழ்வின்

தத்துவத்தை மையமாகக் கொண்டவை.

இன்று பெரும்பான்மையானவர்கள் ஆன்மிகத்தை உற்றுநோக்குவதால், நிறைய சேனல்கள் பக்தியைப் பற்றிப் பேசுவதால், வியாபாரம் போல் தோற்றம் தந்தாலும் இது ஆரோக்கியமான விஷயம்தான். மேடைச் சொற்பொழிவு மூலம் மதம் பற்றிய புத்துணர்ச்சி நூற்றுக்கணக்கான மக்களைச் சென்றடைந்தால், டெலிவிஷன் மூலம் கோடிக்கணக்கான மக்களை அடைய முடியும். அதன்மூலம் ஆன்மிக அறிதலும், இறைவனை உணரும் பாதையும் அறியக் கிடைக்கும்தானே! சரியான முறையில் இவை நடந்தால் நல்லதொரு சமுதாயம் தானாகவே உருவாகிவிடும்.''

- ராகவ்குமார்

❋ மங்கையர்க்கரசி



கல்கி

பரதன் பப்ளிகேஷன்ஸ் பிரைவேட் லிமிடெட்டிற்காக பரதன் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடுபவர்:
லக்ஷ்மி நடராஜன்

ஆசிரியர் : **சீதா ரவி**

உதவி ஆசிரியர்கள் :
கதிர்பாரதி, அமிர்தம் சூர்யா

வடிவமைப்பு :
எஸ்.ஸ்டீஃபன், எம்.மோகன், பா.கோபால்

தொலைபேசி : **044 - 4343 8888**
தொலைநகல் : **044 - 4343 8899**

ஆசிரியர் குழு :
044 - 4343 8822
kalki@kalkiweekly.com

விளம்பரப் பிரிவு :
044 - 4343 8811
marketing@kalkiweekly.com

சந்தா பிரிவு :
044 - 4343 8833
subscription@kalkiweekly.com

விற்பனை பிரிவு :
044 - 4343 8844
sales@kalkiweekly.com

இன்டர்நெட் முகவரி :
www.kalkionline.com

இணையதளத்தில்...
வாங்கி, வாசித்து, மகிழ...
www.sangapalagai.com

சந்தா விவரம் (ஒரு வருடம்) :
உள்நாடு : ரூ.500/-
வெளிநாடு : ரூ.3,800/-

கல்கி பில்டிங்ஸ்,
47-NP, ஜவாஹர்லால் நேரு சாலை,
ஈக்காட்டுதாங்கல், சென்னை - 32

இதழில் வெளியாகும் விளம்பரங்களின் உண்மைத் தன்மைக்கு கல்கி நிர்வாகம் பொறுப்பல்ல.

அலங்காரமே... ஆத்ம திருப்தி!

''சுவாமிக்கு அலங்காரம் பண்ணணுமா? அதுவும் சூப்பரா பண்ணணுமா? கூப்பிடுங்கள் திருச்சி கணேஷ் குருக்களை. அவரு இதுக்குன்னே ரொம்ப அக்கறை எடுத்துப் பண்றவர்!'' இதுதான் கோயில் வட்டாரத்துல நிலவி வரும் பேச்சு. ஒவ்வொரு பக்தரும் ஒரு நிமிடமோ அஞ்சு நிமிடமோ அல்லது அதிகபட்சமா பத்து நிமிடமோ நின்னு தரிசனம் பண்ற, சுவாமியின் திருவுருவங்களை அலங்கரிக்க, கணேஷ் குருக்கள் குழுவினர் எடுத்துக் கொள்ளும் அக்கறை மகத்தானது. அவரது அனுபவங்கள்:



* சோளமுத்து அலங்காரம்



* கணேஷ் குருக்கள்

''கார்த்திகை மாத அஞ்சு சோமவாரத்துல ஒவ்வொரு தடவையும் ஒரு அலங்காரம்னு செய்வாரு என் அப்பா கண்ணன் குருக்கள். காலப்போக்கில் பைரவருக்கு அவரு செய்யாத அலங்காரமே இல்லைன்னு ஆகிடுச்சு. என்னோட பதிமூணு வயசில அவரு பக்கத்துலேருந்து நுணுக்கமா ஒவ்வொண்ணா உணர்ந்து கத்துக்க ஆரம்பிச்சேன். அப்பா என்கிட்டே சொல்வாரு: திருச்சி பெரிய கடை வீதியிலிருக்கும் பைரவரே தன்னை ஒவ்வொரு சுவாமியா அலங்காரம் பண்ணிப் பாருன்னு சொல்லுமாம். சுவாமி அலங்காரத் துறையில அந்த பைரவர்தான் என் அப்பாவையும் என்னையும் புகழடையச் செய்தார்.

கடந்த இருபத்திரண்டு வருஷமா இந்தப் பணியைச் செய்து வர்றேன். தமிழகம், இந்தியான்னு இல்லாம கனடா, லண்டன், சிங்கப்பூர், மலேசியா, இலங்கை யாழ்ப்பாணம்னு அந்தப் பட்டியல் தொடருது. சுவாமி அலங்காரங்கள் நிறைய வகை இருக்கு... நாலு மணி நேரத்துல நிறைவு பெற்ற அலங்காரமும் இருக்கு. ஒரு நாள் முழுக்க செய்யற அலங்காரமும் உண்டு.

ஆஞ்சநேய சுவாமிக்கு வடை மாலை சார்த்திப் பார்த்திருப்பீங்க. அம்பாளுக்கு வளையல் அலங்காரம் செஞ்சு பார்த்திருக்கீங்களா? முகம் நீங்கலா, உச்சி முதல் பாதம் வரை **வளையல் அலங்காரம்**. ஒரு முறை மாரியம்மனுக்கு வளை அலங்காரம். சின்னச் சின்ன இரும்புக் கம்பிகள்ல துணியைச் சுத்திக்கணும். அந்தத் துணி உருளைகள்ல வளையல் கோக்கணும். வளையல் கோக்க ஆறு பேர், அந்த வளையல் மாலைகளை அம்பாள் திருவுருவ பாகங்களுக்கு ஏத்தாப் போல அதன் மீது சார்த்தி அலங்கரிக்க



நாலு பேர். மொத்தம் பத்து பேர். பத்தாயிரம் வளையல்கள். பெரும்பாலும் கண்ணாடி வளையல்கள். இந்த அலங்காரம் செஞ்சு முடிக்க குறைஞ்சது ஏழெட்டு மணி நேரம் ஆகும். சுவாமிக்கு அலங்காரம் பண்ணின அந்த வளையல்களை அப்புறம் என்ன செய்றாங்க? ஆஞ்சநேய சுவாமி வடை மாலையில் உள்ள வடைகளைப் பக்தர்களுக்குப் பிரசாதமா தர்ற மாதிரி, சுவாமி தரிசனம் முடிஞ்ச மறுநாள், அந்த வளையல்களை, கோயிலுக்கு வர்ற பெண்களுக்குப் பிரசாதமா பகிர்ந்து கொடுத்திடுறாங்க. குழந்தைப் பேறு வேண்டி பிரார்த்தனை பண்றவங்க, அந்த வளையல்களை ரொம்ப ஆர்வமா ரொம்ப பக்தியா வாங்கிப் போடுவாங்க.



சுவாமி திருவுருவ பாகங்களை அட்டையில அளவு எடுத்துக்கணும். அதுல வர்ணம் அடிக்கணும். அது மேல ஃபெவிகால் தடவி சங்கு சிப்பிகளை ஒட்டணும். அந்த அட்டைகளை சுவாமி மேல அலங்காரமா பதிக்கணும். பார்க்கறவங்களுக்கு சிம்பிளா தோணும். ஆனா இந்த சங்கு சிப்பி அலங்காரம் செஞ்சு முடிக்க பத்து மணி நேரம் பிடிக்கும். சோளமுத்து அலங்காரம்னு ஒண்ணு. கதிர்லேருந்து சோள முத்துக்களை உதிர்த்து அட்டையில ஒட்டணும். அப்புறமா அலங்காரம்

*** சந்தனக் காப்பு அலங்காரம்**
- முத்துஸ்வாமி தீக்ஷிதர்

❋ சங்கு சிப்பி அலங்காரம்



பண்ணணும். இந்த அலங்காரத்துக்கும் பத்து மணி நேரம் ஆகும்.

கனடா, டொரண்டோ துர்க்கை அம்மன் கோயில் கும்பாபிஷேகத்துக்குப் போயிருந்தோம். துர்க்கைக்கு **சந்தனக் காப்பு அலங்காரம்**. அப்புறம் அங்கேயே ரெண்டு மாசம் தங்கிட்டோம். நாப்பத்தெட்டு நாள் மண்டலாபிஷேகம். உற்சவ துர்க்கை அம்மனுக்கு அந்த ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு விதமா சந்தனக் காப்பு அலங்காரம். காமாட்சி, மீனாட்சி, விசாலாட்சி அப்படினு தொடர்ந்து செஞ்சோம். வெளிநாடு வாழ் இந்தியர்களுக்கு அந்த அலங்காரங்கள் ரொம்பப் பிடிச்சுப் போனது.



❋ மஹா சதாசிவமூர்த்தி

பெங்களூரு கன்னிகா பரமேஸ்வரி கோயில்ல அமர்ந்த நிலையில் விநாயகர். அந்த விநாயகரை பல வடிவங்கள்ல சந்தனக் காப்பு அலங்காரம் பண்ணியிருக்கோம். நர்த்தன விநாயகராக, சயன விநாயகர், பஞ்சமுக விநாயகர், நிற்கும் நிலை விநாயகர், தவழும் பால விநாயகர். மூன்று மணி நேரம் ஆகும் இந்த வகை சந்தனக் காப்பு அலங்காரத்துக்கு.

மஹா சதாசிவ மூர்த்தி அலங்காரம் குறிப்பிடத்தக்கது. சிவனுக்கு ஒரு முகம். சதாசிவத்துக்கு ஐந்து முகம். சிவபெருமானின் அவதாரம் இருபத்தைந்து. அதனால் மஹா சதாசிவ மூர்த்திக்கு இருபத்தைந்து முகம். சிவன் பார்வதி அமர்ந்த திருக்கோலத்தில் சிவனாகிய மஹா சதாசிவ மூர்த்திக்கு இருபத்தைந்து முகம், ஐம்பது திருக்கரங்களுடன் சந்தனக் காப்பு அலங்காரம் செய்வித்தோம். பன்னிரண்டு அடி உயரம். ஒன்பது அடி அகலம். எங்கள் குழுவினர் இதனை நிறைவு செய்ய மூன்று நாட்கள் ஆகின.

ரொம்ப வருடங்களாகவே எனக்குள் ஒரு மனக்குறை. சங்கீத மும்மூர்த்திகளை சந்தனக் காப்பு அலங்காரம் செய்து அழகு பார்க்க முடியலையே என்று. திருச்சி, மங்களம் மஹாலில் பாலமுரளி கிருஷ்ணா பாட்டுக் கச்சேரியில் அந்த மனக்குறையும் பத்து வருஷங்களுக்கு முன்பு தீர்ந்தது.

அதைப் பார்த்துப் பரவசப்பட்ட பெரியவர் ஒருவர், என் கரங்களைப் பற்றி அவர்தம் கண்களில் ஒற்றிக் கொண்டார். அந்த நிமிடம் எனக்குள் நிறைந்த ஆத்ம திருப்திக்கு ஈடு இணை ஏதுமில்லை!'' எனச் சொல்கிறார் திருச்சி பி.எஸ்.கே.கணேஷ் குருக்கள்.

செய்தி, படங்கள்:
ஸ்ரீரங்கம் திருநாவுக்கரசு



உத்திரவாதமான மேனிப் பராமரிப்பு தலைமுறை தலைமுறையாக

50 ஆண்டுகளுக்கும் மேலாக, மேனிப் பராமரிப்பில் ஸிந்த்தால் நம்பகமான சோப் என்று தொன்றுதொட்டு பெயர் பெற்றுள்ளது. ஸிந்த்தால் சோப் மேனியின் எழிலை மேம்படுத்துகிறது. இதன் ஒப்பற்ற நறுமணம் நாள் முழுவதும் நீடித்து உங்களை புத்துணர்வுடன் வைக்கும். எனவே ஸிந்த்தால் பல தலைமுறைகளாக விசுவாசமான வாடிக்கையாளர்களை உருவாக்கியதில் ஆச்சரியமில்லை.



மேனிப் பராமரிப்பு என்றென்றும்

Orchard B GCPMSOCN 1167/08

விஜயகாந்த் விறு விறு!



மீனவர் பிரச்னை தொடர்பாக டில்லியில் உண்ணாவிரதப் போராட்டத்துக்கான ஏற்பாடுகளில் பிஸியாக இருந்த விஜயகாந்தை அவரது கட்சி அலுவலகத்தில் சந்தித்தோம். அந்தப் பச்சை மிளகாய் சந்திப்பிலிருந்து...

கடந்த நான்கு வருடங்களில் தே.மு.தி.க. தமிழக அரசியலில் ஏற்படுத்திய தாக்கம்?

''மக்களையும் கடவுளையும் நம்பித்தான் கட்சியைத் தொடங்கினேன். அவர்கள் என்னைக் கைவிடவில்லை. தி.மு.க.வுக்கும் அ.தி.மு.க.வுக்கும் மாற்றாக தே.மு.தி.க. இருக்கும் என்பதே மக்கள் மத்தியில் நான் உருவாக்கிய நம்பிக்கை. அந்த நம்பிக்கையைக் காப்பாற்றும் விதத்தில் தனித்தே களங்களைச் சந்தித்து வருகிறேன். 2006 சட்டமன்றத் தேர்தலில் தே.மு.தி.க. பெற்றது எட்டு சதவிகித வோட்டுகள். இப்போது ஐந்து இடைத் தேர்தல்களிலும் சேர்த்து 23 சதவிகிதம். சட்டமன்றத்தில் எங்களுக்குக் கணிசமான இடங்கள் இல்லாமல் இருக்கலாம். ஆனால் மக்கள் தங்கள் மனத்தில் எங்களுக்கு சிம்மாசனம் போட்டு வருகிறார்கள். இந்தக் காலகட்டத்தில் உழைப்போடு இழப்பையும் சந்தித்தேன். ஆனால், ஈடுகட்டும் விதமாக என்னைப் புத்துணர்வு பெற வைப்பவர்கள் லட்சக்கணக்கான எங்கள் தொண்டர்கள்தான்.''

ஆனால், கு.ப.கிருஷ்ணன், ஏ.ஐ.சம்பத், பொடா நாகராஜன் போன்றோர் உங்களைவிட்டு விலகியிருக்கிறார்களே?

''இவர்கள் இடையில் வந்தவர்கள். எதையோ எதிர்பார்த்து வந்தார்கள். கிடைக்கவில்லை; ஓடிவிட்டார்கள். அவர்களால் கட்சிக்கொன்றும் லாபமில்லை. அவர்கள் விலகிய பின்னரே அவர்களது ஏரியாக்களில் தே.மு.தி.க. அதிக வோட்டு வாங்கியிருக்கிறது.''

பாராளுமன்றத் தேர்தலில் நீங்கள் காங்கிரஸுடன் கூட்டுச் சேருவது கிட்டத்தட்ட முடிவாகி பின்னர் முறிந்து போனதா?

''உண்மைதான். நமது கூட்டணியில் தி.மு.க.வும் இருக்கும் என்றார்கள். அது எங்களுக்குச் சரிப்பட்டு வராது என்று நாங்கள் ஒதுங்கிக் கொண்டோம்!''

தி.மு.க. அல்லது அ.தி.மு.க.வுடன் எதிர்காலத்தில் கூட்டு வைப்பீர்களா?

''இன்னொரு தலைமையின் கீழ் போய் கூட்டு சேர வேண்டிய அவசியம் எனக்கில்லை. என்னை நம்பி கட்சிகள் வந்தால் என் தலைமையில் கூட்டணி அமையும். நான் ஆரம்பத்திலிருந்தே சொல்லி வருகிறேன். இந்தக் கூட்டணி பிஸினஸ் எல்லாம் வேண்டாம். தனித்தனியே நிற்கத் தயாரா? என்னை யாரும் விலைக்கு வாங்க முடியாது.''

விலை பேசினார்களா?

''சில தலைவர்களின் மனசாட்சியைத்



"எனக்கு விலை பேசினார்கள்..."

படாமல் எதிர்க்கட்சி செயல்பட வேண்டும். அன்று அண்ணா மிட்டா, மிராசுகளை எதிர்த்துக் கட்சி நடத்தி ஆட்சியைப் பிடித்தார். இன்று புதிய மிட்டா மிராசாக உருவாகியிருக்கும் கருணாநிதியின் குடும்ப அரசியலை எதிர்த்து மக்களைத் திரட்டி வெற்றி பெற வேண்டும். தினமும் சாதனை, சாதனை என்று குரல் கொடுக்கிறாரே கருணாநிதி. எல்லாம் வெத்துவேட்டு. சாதனை செய்திருந்தால் காசு கொடுத்து ஏன் வோட்டு வாங்குகிறார்? காவல் துறையிடம் புகார் கொடுத்தால் 'நீங்களும் கொடுங்களேன்' என்று சொல்கிறார்கள். கேவலமாக இருக்கிறது!''

இந்த மூன்று வருடங்களில் தி.மு.க. அரசு மீது பெரிய ஊழல் குற்றச்சாட்டு இல்லையே?

''எதில் ஊழல் இல்லை? ஊழலை இப்போது ஒரு கார்ப்பரேட் பாணியில் ஒழுங்குபடுத்திவிட்டார்கள். மணலில் ஆரம்பித்து டாஸ்மாக், நெடுஞ்சாலை, பால், என சொட்டு நீர்ப் பாசனம் வரை ஊழல் நீள்கிறது. அரசு அலுவலகங்களுக்குப் பொதுமக்கள் போனாலும், கையூட்டு இல்லாமல் காரியங்கள் நடக்கிறதா? லஞ்ச ஊழல் துறை இப்போது புரட்டியதெல்லாம் பனிமலையின் நுனியைத்தான். ஆட்சியில் உள்ளவர்களுக்கு வசூல் செய்து கொடுப்பதே அதிகாரிகளின்

தட்டினால் உங்கள் கேள்விக்கு விடை கிடைக்கும்.''

திருமங்கலத்துக்குப் பிறகு இடைத் தேர்தல்கள் கேலிக்கூத்தான நிலையில் ஜெ. செய்ததுபோல, சமீபத்திய இடைத் தேர்தலைப் புறக்கணிக்கும் எண்ணம் உங்களுக்கு ஏற்பட்டதா?

''ஏன் நிராகரிக்க வேண்டும்? ஜனநாயகத்தில் வெற்றி தோல்வி பற்றிக் கவலைப்



முக்கிய வேலை ஆகிவிட்டது. இப்படிக் கொள்ளையடிப்பதால்தான் இடைத் தேர்தல்களில் வோட்டு வாங்க பணத்தை அள்ளிவிட முடிகிறது.''

பெயரில் 'திராவிடர்' என்று வைத்துக் கொண்டிருக்கும் தே.மு.தி.க., அண்ணா நூற்றாண்டு விழாவை ஏன் கொண்டாட வில்லை?

''நூற்றாண்டு விழா தொடக்கத்திலேயே நாங்கள் கொண்டாடிவிட்டோம். ஆனால் கருணாநிதி, அண்ணா நூற்றாண்டு விழாவைக் காரண மாக வைத்து எல்லோரையும் தமது புகழ் பாட வைக்கிறார். தம் சட்டமன்றப் பொன் விழாவை சோனியா, பிரதமர் என்று கூப்பிட்டு பிரமாண்டமாக நடத்திய கருணாநிதி, அண்ணா விழாவை அரங்கத்துக் குள் நடத்தி, மத்திய நிதி அமைச்சரை மட்டும் கூப்பிடுவது ஏன்? அவர், அண்ணாவைவிட தம்மை முன் னிறுத்திக் கொள்கிறார். அந்த விழா மேடையைப் பார்த்தால் 'கழகம் ஒரு குடும்பம்' என்பதும் தெரிகிறது.''



❝ என்ன சொல்றீங்க! எதில் ஊழல் இல்லை? ஊழலை இப்போது கார்ப்பரேட் பாணியில் ஒழுங்குபடுத்திவிட்டார்கள். ❞

தமிழக இளைஞர்களை டார்கெட் செய்கிறாரே ராகுல்...

''காங்கிரஸ்காரர்கள் இளைஞர்களைத் தேடிப் போகிறார்கள். ஆனால் இளைஞர் கள் எங்களைத்தேடி வருகிறார்கள். மூன்று நாள் சுற்றுப் பயணத்தில் தமிழ்நாட்டுக்கு என்னென்ன செய்யப் போகிறார் என்று ராகுல் சொன்னாரா? ஊழலையும், வறுமை யையும் ஒழிக்க என்ன செயல் திட்டங்கள் வைத்திருக்கிறார்? இன்று இலங்கைப் பிரச்னையில் இறுதி நிலையாக, லட்சக் கணக்கான தமிழர்கள் மறுவாழ்வு முகாம் களில் அழிந்து போய்க்கொண்டிருக்கிறார் களே. இதற்கு மத்திய மாநில அரசுகள் பொறுப்பில்லையா? நாளும், பொழுதும், நமது மீனவர்கள் இலங்கை கடற்படை யால் தாக்கப்பட்டு, கடத்தப்படுகிறார்களே! இதற்கு மத்திய அரசின் நடவடிக்கை என்ன? இந்தக் கேள்விகளுக்கெல்லாம் பதிலில்லாத நிலையில் இளைஞர்களை எப்படி கவர முடியும்?''

பனையூர் இரட்டைக் கொலை வழக்கில் தகவல்களைத் தரச் சொல்லி காவல்துறை உங்களுக்கு சம்மன் தந்ததே?

''என் வாயை முடக்க முயற்சி செய்தார்கள். அது நடக்காது. கிடைத்த தகவல்களைச் சொல் வது ஒரு எதிர்க்கட்சித் தலைவரின் கடமை. முன்பு பால் கமிஷன் அறிக்கையை அரசு வெளி யிடும் முன் கருணாநிதி வெளி யிட்டாரே... அதை எந்த உணர்வில் செய்தாரோ, அதே போன்ற உணர்வில்தான் எனக்கு வரும் தகவல்களைச் சொல்கிறேன்.''

- ப்ரியன்

BLB வழங்கும் மற்றுமொரு பெரிய மனைப்பிரிவு

ஸ்ரீ பாண்டுரங்கா நகர்

மேல்மருவத்தூர்

(APPL No. 5/2008)

BLB
PLEDGED TO ETHICS

மிகக் குறைந்த விலையில்.

நெடுஞ்சாலைக்கு அருகில் (NH45).



பிரதான பகுதியில் பட்ஜெட் மனைகளில் முதலீடு

செய்ய விரும்புவோருக்கு BLBயின் புதிய திட்டமான ஸ்ரீ பாண்டுரங்கா நகர் உண்மையிலேயே ஒரு வரப்பிரசாதம்தான். உங்கள் முதலீடு பன்மடங்கு பெருக ஸ்ரீ பாண்டுரங்கா நகர் ஓர் அற்புதமான வாய்ப்பு.



சிறப்பம்சங்கள்

- எக்ஸ்பிரஸ் ஹைவே 6 வழிப்பாதையில் விரைவான பயணம்
- GST சாலையில் இருந்து 5 நிமிட தூரம்
- GST சாலை மற்றும் ECRக்கு இடையில் உள்ளது.
- TVS-பிரேக்ஸ் இந்தியா தொழிற்சாலைக்கு அருகில் உள்ளது
- பேருந்து - ரயில் வசதிகள் அடிக்கடி உண்டு.
- செய்யூரில் மெகா மின் சக்தி திட்டமும் மற்றும் மினி போர்ட் ஆகியவை நிர்மாணிக்கப்பட உள்ளன.
- மேல்மருவத்தூரில் மருத்துவ, பொறியியல், கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள், தரமான பள்ளிகள்.
- 20' ஆழத்தில் குடிநீர்
- சுற்றிலும் நன்கு வேலியிடப்பட்டுள்ளது.
- தார் சாலைகள்
- கட்டுமானத்திற்கு தயார் நிலை
- 5 ஆண்டு கால மனைப் பாதுகாப்பு சேவை

மனையை பார்வையிட அழைக்கவும்: **2834 5104/05/06**

BLB ESTATES PRIVATE LIMITED

"SREE AUDISESHA BHAVAN", New No. 21, Chinnaiah Street, T.Nagar, Chennai - 600 017.
E-Mail: enquiry@blbestates.com Website: **www.blbestates.com**

நன்மதிப்பில் முதலீடு

ஆயுள் முழுக்க

● **அ.யாழினி பர்வதம், சென்னை**

உங்களுக்கு ஓவியம் வரையத் தெரியுமாமே. எங்களுக்கு ஒரு ஓவியம் வரைந்து காட்ட முடியுமா?

எனது மாற்றான் தோட்டத்தில் மணம் வீசும் ஓவியர் மணியம் செல்வனின் தந்தையார் மணியன் அவர்களால் மந்திரிக்கப்பட்டு ஓவியன் ஆனவன் அடியேன். அனுமன் ஓவியமும் அதற்கான வெண்பாவும் கீழே....



* கிரேஸி வரைந்த அனுமன்

''அனுமந்த ராயா அசகாய சூரா
தினம்உந்தன் பாதம்
தொழுவேன் - எனையிந்த
பாழும் மனமென்ற ஆழியைத்
தாண்டிட
தோழா கொடுத்திடு தோள்''

● **லலிதா, சென்னை**

அமரர் தென்கச்சி சுவாமிநாதனுக்கு உங்கள் அஞ்சலி?

யாம் அறிந்து இரண்டு கலைவாணிகள் உண்டு. ஒருத்தி, ஆய கலைகள் அறுபத்து நான்கினை ஆளும் நாம் அறிந்த வாணி. இன்னொருத்தி ஹாஸ்யக் கலையை மட்டும் அள்ளி வழங்கும் ஆகாச வாணி. இந்த 'ஆஹாஸ்ய வாணி'யின் ஒரே வாரிசு 'தினம் ஒரு தகவல்' ஆல் இந்தியா ரேடியோவில் தந்த தென்கச்சியார். இவர் வாழ்க்கைக்குப் பகைச்சுவையான எதிர்க்கட்சிகளை, நகைச்சுவையால் ஆளும் தென்-கட்சியார். படிப்பவர்கள் ரசனை மேம்படும் அளவுக்கு, சிரிப்பின் படம் வரைந்து அதன் பாகங்களைக் காட்டியிருக்கிறார் பேராசிரியர் தென்கச்சியார். Humour is the salt of the life என்பார்கள். வாழ்க்கைக்குத் தேவையான உப்பு சிரிப்பு. தென்கச்சியாரின் சிரிப்பு என்கிற இந்த உப்பு அதிகமாக ஆக நம் B.P குறையும். யாரையும் கரிக்காத இவரது சிரி-உப்பு, டயாபடீஸை போக்க வல்ல இனிப்பு. ஆம், இன்ஸுலின் போல 'இன்-சொலின்' இவரது வைத்தியம். ஜோஸ்யத்தை நம்புவதைவிட கைராசிக்காரரான இந்த டாக்டரின் ஹாஸ்யத்தை நம்பலாம். இவரது எழுத்தைப் படிப்பது இம்மை சுகம் என்றால், மேடையில் இவர் பேச்சைக் கேட்பது மறுமை மோட்சம். ஆரோக அவரோகணத்தோடு இவர் நகைச்சுவையாகப் பேசுவதைக் கேட்கும்போது, சங்கீதக் கச்சேரி கேட்பது போல பரம சௌக்கியமாக இருக்கும். கேட்கும் ஆடியன்ஸை காமெடியன்ஸாக மாற்ற வல்ல ரசவாதி. ஹாஸ்யம், ஹ்யூமர், ஜோக்,

கிரேஸியைக் கேளுங்கள்



காமெடி என்று நகைச்சுவைக்குப் பல பெயர்கள் உண்டு. பேரைச் சொல்லும் நாம், நகைச்சுவைக்கு ஊரைச் சொல்லப் போனால் அது தென்கச்சியாகத்தான் இருக்கும். தமிழ் இலக்கணத்தில் 'உயர்வு-நவிற்சியணி' என்று ஒன்று உண்டு. தென்கச்சியாரின் நகைச்சுவை 'உயர்வு - நகைச்சுவையணி...'

● **மைத்ரேயி, கோவை**

கேட்க முடியாத கேள்விக்கு, சொல்ல முடியாத பதில் என்னவோ?

பிரியா 'விடை!'

● **டி.வி.ராமமூர்த்தி, சோழிங்கநல்லூர்**

கிரேசிக்கு இப்போது என்ன 'தசை' நடக்கிறது?

இப்போது என்ன, எப்போதும் நடப்பது கால் 'தசை'தான்!

அட்வைஸ்!

● **ஆர்.அஜிதா, கம்பம்**

கடவுளைக் காண எளிய வழி?

பாரமாகச் செல்லும் குறுக்கு வழி - கர்ம யோகம். பரவசத்தில் கண்கள் ஈரமாகச் செல்லும் சுருக்கு வழி - பக்தி யோகம். வீரமாகச் செல்லும் ஞான முறுக்கு வழி - ஞான யோகம்.

● **என்.எஸ்.மணிமாறன், திருவண்ணாமலை**

விரைவில் திருமணம் செய்து கொள்ள இருக்கும் எனக்கு ஒரு 'அட்வைஸ்' ப்ளீஸ்?

ஆயுள் முழுக்க அட்வைஸ் கேட்டுக் கொண்டிருக்க முடிவு செய்துவிட்டீர். என் அட்வைஸ் எதற்கு விழலுக்கு இறைத்த நீராய்!

● **ஆர்.செண்பகவல்லி, ஸ்ரீவில்லிப்புத்தூர்**

ஆண்டாளுக்குக் கிடைத்த வெற்றி, ராதைக்குக் கிடைக்கவில்லையே?

ஆண்டாள் கண்ணனை வென்றாள்; கண்ணன் ராதையிடம் தோற்றான்.

● **என்.காளிதாஸ், சிதம்பரம்**

கொடுக்கும் தெய்வம் 'கூரையைப்' பிய்த்துக் கொண்டு கொடுக்குமா?

பாஞ்சாலி மானம் காக்க பிய்க்காமல் பேல் பேலாக 'கூறைப் - புடவைகளையும்' கொடுக்கும் தெய்வம்.





கல்கி



2009 அக்டோபர் 4
விரோதி புரட்டாசி 18
மலர் : 68
இதழ் : 10

தமிழ்த்திரு
நாடுதன்னைப் பெற்ற
தாயென்று கும்பிடடி
பாப்பா - பாரதியார்


நீதித்துறைக்கு அபாயம்!

“இன்று நீதித்துறை சந்திக்கும் அபாயம் வெளியிலிருந்து ஏற்படுவது அல்ல; அதன் உள்ளேயே எழுந்துள்ள அச்சுறுத்தல்தான்!'' என்று பேசியிருக்கிறார் மூத்த வழக்கறிஞர் ஸோலி ஸோரப்ஜி. நீதித்துறை அச்சுறுத்தப்படுகிறபோது ஜனநாயகமும் அச்சுறுத்தலுக் குள்ளாகிறது என்பதைச் சொல்லத் தேவையில்லை.

நீதிபதி தினகரன் குறித்த சர்ச்சையையொட்டியே இவ்வாறு பேசியுள்ளார் ஸோரப்ஜி எனக் கருதலாம். அவரும் வேறு பல மூத்த நீதித்துறை வல்லுனர்களும் (வி.ஆர்.கிருஷ்ணா அய்யர், அனில் திவன்) நீதிபதி நியமனத்துக்குப் பரிந்துரைக்கப்படுபவர் எந்தவித சந்தேகத் துக்கும் அப்பாற்பட்டவராக இருக்க வேண்டும் என்று வலியுறுத்திக் கூறியுள்ளனர். இவ்வாறெல்லாம் வலியுறுத்த அவசியமின்றி, பொதுவாழ்வில் நேர்மையும் ஒழுங்கும் நிலவிய காலம் ஒன்று இருந்தது. துரதிர்ஷ்டவசமாக, இன்று நிலைமை அவ்வாறு இல்லை. ஆகவே, நீதிபதிகள் நியமனத்தில் சம்பந்தப்பட்டவர்களின் பொறுப்பு மிக அதிகம். நீதிபதிகளின் சொத்து விவரங்களை வெளியிடுவதில் நிலவிய ரகசியக் காப்பு முறை பலத்த சர்ச்சைக்கு உள்ளாகி, ஒருவாறு கைவிடப்பட்டுள்ளது. நீதிபதி நியமனங்களையும் ஒவ்வொரு கட்டத்திலும் திறந்த புத்தகமாக்க வேண்டும் என்ற சிந்தனையும் கோரிக்கையும் எழுந்துள்ளன!

இந்தச் சூழலில், நீதிபதி தினகரனை உச்சநீதிமன்றத்துக்கு நிய மிக்கலாமா என ஆராய ஒரு குழுவை நியமித்திருப்பது ஏற்புடைய தல்ல. நீதிபதி தினகரன் பேரில் கூறப்பட்டுள்ள குற்றச்சாட்டுகள்





உண்மையானவையா என்பதைக் காட்டிலும், அவர் குற்றச்சாட்டுகளுக்கு அப்பாற்பட்டவராக இருக்கிறாரா என்பதே முக்கியம். ''நீதிபதி பொறுப்புக்கு வருவோர் நேர்மையாளர்களாகப் புகழ்பெற்றிருக்க வேண்டும்'' என்று வேறொரு வழக்கில் நீதிபதி பகவதி குறிப்பிட்டது இங்கே நினைவு கூரத்தக்கது.

மேலும், நீதிபதி தினகரன் பேரில் கூறப்பட்டுள்ள நிலம் கைப்பற்றுதல், சொத்துக் குவிப்பு போன்ற குற்றச்சாட்டுகள் அறியாப் பிழைகள் அல்ல; திட்டமிட்ட முறைகேடுகள், ஒழுங்கீனங்கள். அக் குற்றங்களைச் சுமத்தியிருப்பவர்களோ, நாட்டின் மூத்த, மதிக்கத்தக்க வழக்கறிஞர்கள். ''குற்றச்சாட்டுகளை மறுத்தாலும், நான் நிரபராதி என்று நிரூபணமாகிறவரையில் பதவி விலகுகிறேன்'' என்று நீதிபதி தினகரனே கூறியிருந்தால் அது உன்னதமாக இருந்திருக்கும். ''உங்கள் பேரில் சில குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டிருப்பதால், அவை குறித்த முடிவு தெரியும் வரை நீங்கள் பதவி விலகி இருப்பது நல்லது,'' என்று உச்சநீதிமன்ற தலைமை நீதிபதி கூறியிருந்தால் அது உத்தமமாக இருந்திருக்கும்.

இவ்விரண்டுமே நிகழவில்லை என்பதுடன் நீதிபதி தினகரன் நிகழ்த்தியதாகக் கூறப்படும் நில அபகரிப்பு அக்கிரமத்தை எதிர்த்து கம்யூனிஸ்டுகள், விவசாயச் சங்க உறுப்பினர்கள் போராடுவதை தமிழக அரசு அனுமதிக்க மறுக்கிறது; அவர்களைக் கைது செய்கிறது. தினகரன் ஒடுக்கப்பட்ட வகுப்பைச் சேர்ந்தவர் என்பதால் பிரச்னைக்கு ஜாதி சாயம் வேறு பூசப்படுகிறது! ஒடுக்கப்பட்ட வகுப்பினர் என்பதாலேயே ஒருவர் மீது சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுகளை ஒதுக்கிவிட்டு அவருக்கு உச்சநீதிமன்ற நீதிபதி பதவியை வழங்கிவிட முடியாது.

ராமபிரானின் கோதண்டத்துக்கு அடியில் சிக்கிக் கொண்ட தவளை, 'ராமனே தவறிழைத்தால் நான் யாரிடம் முறையிடுவேன்?' என்று அழுததாம்! அந்தத் தவளையின் நிலைக்கு இந்தியக் குடிமகனைத் தாழ்த்திவிடக் கூடாது.

●

வட்டமேஜை

காதுகள் சமர்ப்பணம்!



வண்ணத்தூரிகையில் 'பரிசல்துறை பிள்ளையார்!', கல்கியின் எழுத்தோவியங்கள், எத்தனை காலம் ஆனாலும், வண்ணம் மாறாத அஜந்தா ஓவியங்கள் என்று பறைசாற்றினார்!

- பி.ஆர்.மயிலப்பன், ஈரோடு

சான்றிதழ் வாங்காவிட்டாலும் உழைப்பாலும் ஈடுபாட்டாலும் புகழ் அடைய முடியும் என்பதற்கு இஞ்சிக்குடி சுப்பிரமணியனே சான்று!

- பி.ராகவன், குரோம்பேட்டை

'**ச**ங்கராபுரம்' தொடரில் 'இயற்கையை ஒட்டியே மனிதன் வாழப் பழகிக் கொள்ள வேண்டும். அதனை மதிக்கத் தவறியதே அவனுடைய பிரச்னைகளுக்கு மூல காரணம்' என்ற வரிகள் அருமை!

- டி.கே.ராமமூர்த்தி, சோழிங்கநல்லூர்

கல்கி விழா குறித்த கட்டுரை - 'காற்றினிலே வந்த கீதம்', நாதம் குறித்த சுநாதம்.

- சி.என்.ஸ்ரீனிவாசன், சென்னை - 40

நதிநீர் இணைப்பு பற்றிய கட்டுரை பல்வேறு சந்தேகங்களுக்குப் பதிலளித்தது.

- ஆர். ராமசுப்ரமணி, திருவாரூர்

கி.ராவின் பேட்டி 'பொங்கலுக்கு உப்பு போடலாமா?', சர்க்கரைப் பொங்கல் போல் சுவையும், சூடும் பதமாக இணைந்த தித்திப்பு!

- ஜே.துரைராஜ், சென்னை - 87

'**வெ**ள்ளித் திரையில் பள்ளிப் பாடம்' - படித்தேன். ரசித்தேன். 'கற்றலில் இனிமை' இதுதானோ...?

- ப.கோபிபச்சமுத்து, கிருஷ்ணகிரி-1

தனித்துப் போட்டியிடுவோமெனப் பல்லவி பாடும் தமிழக காங்கிரஸ், கல்கியின் தலையங்கத்தைப் பின்பற்றினால், வெற்றிக்கனி பறிப்பது சர்வ நிச்சயம்!

- எஸ்.கே.மூர்த்தி, கும்பகோணம்

சும்மா காதுல பூ சுத்தாம, ஜிமிக்கி போட்டு அழகு பார்த்த கல்கிக்கே எங்கள் காதுகள் சமர்ப்பணம்!

- என்.சீத்தாலட்சுமி, அண்ணாநகர்

நடுப்பக்க ஜோக்ஸும் அவற்றுக்குப் பொருத்தமாய் அமைந்த ஒரே படமும் சூப்பர்!

- தெ.சு.ரா.மூர்த்தி, கடலூர்

துப்பறிய வாங்க போட்டி - 12 முடிவு

சரியான விடையை எழுதியவர்களுள் குலுக்கல் மூலம் தலா ரூ.200/- பரிசு பெறுவோர்:

1. **வி.சி. வெங்கடேஷ், திருச்சி - 02**
2. **வி.என்.கோபால், சென்னை - 91**
3. **எஸ். அபிராமிஸ்ரீ, ஈரோடு.**
4. **சி.ஆர். நாகராஜன், பொள்ளாச்சி**
5. **ச.ஸ்ரீதர வித்யாசங்கர், சென்னை - 28**

சனிப் பெயர்ச்சி பலன்கள்

26.9.2009 லிருந்து 21.12.2011 வரை

(சென்ற வாரத் தொடர்ச்சி...)

துணிச்சல் மிகுந்த துலாம் ராசிக்காரர்களே, உங்கள் ராசிக்குக் கன்னி ராசி விரைய ஸ்தானம் ஆகிறது. உங்களுக்கு ஏழரை சனி ஆரம்பம் ஆகிறது. விரைய ஸ்தானம் என்றவுடன் பயந்து விடாதீர்கள். சிலருக்கு வீடு வாசல் வாங்கும் யோகம் அமையும். வாகன யோகம் கிட்டும். இருக்கும் வீட்டைச் சீர்திருத்த நேரிடும். எதிலும் எச்சரிக்கையுடன் இருப்பது நல்லது. சில நபர்களுக்குப் பிரயாணம், வைத்தியச் செலவு பண்ண வேண்டியிருக்கும். பிரார்த்தனை செய்துவர வைத்தியச் செலவு இல்லாமல் போகும். சுற்றத்தார், நண்பர்களால் செலவு வந்து



துலாம்

சேரும். சிலருக்குக் கால் பாகத்தில் திடீர் வலி ஏற்பட்டு மருத்துவச் செலவு செய்ய நேரிடும். வியாபாரத்தில் வரவுக்கு மீறிய செலவு இருக்கும். மாணவர்கள் படிப்பில் அக்கறை செலுத்தவும். மறதி ஏற்படும். வீடு மாற்றம் ஏற்படும். திடீர் பணவரவு ஏற்படும். அரசியல்வாதிகளுக்குச் சில பின்னடைவுகள் ஏற்படும். விளையாட்டு வீரர்களுக்கு நல்ல வாய்ப்புகள் வந்து சேரும். சமூக சேவைகளில் நல்ல பெயர் ஏற்படும். வியாபாரங்களில் சற்று அகலக் கால் வைக்காமல் இருந்தால் தப்பித்துக் கொள்ளலாம். வயதான பெண்டிர் ஆரோக்கியத்தில் கவனம் செலுத்துங்கள். ஏற்றுமதி வியாபாரம் நன்றாக இருக்கும். கணவன்-மனைவி உறவு நன்றாக இருக்கும். நல்லவர் உதவி கிட்டும். வியாபாரத்தில் இருந்து வந்த சுணக்கம் மாறும். சிக்கனத்தைக் கடைப்பிடித்து வரவும்.

சனிக்கிழமைதோறும் ஆஞ்சநேயர் கோயிலுக்குச் சென்று துளசி மாலை சாற்றி நெய் தீபம் ஏற்றிவர நற்பலன் பெருகும். சங்கடங்கள் விலகும்.

• • •

எளிமையாகப் பழகும் விருச்சிக ராசிக்காரர்களே, உங்களது ராசிக்கு 11ம் இடம் என்று சொல்லக்கூடிய லாபஸ்தானத்துக்கு



தஞ்சை பரத்வாஜ்



விருச்சிகம்

வருகிறார். கடந்த காலத்தில் ஏற்பட்ட இன்னல்கள் எல்லாம் மறைந்து புத்துணர்வான வாழ்வை அளிக்கப் போகிறார். பொருளாதார ரீதியாக நல்ல ஏற்றம் ஏற்படும். புதிய தொழில் முயற்சி பலன் அளிக்கும். பூர்வீகச் சொத்து வந்து சேரும். நண்பர், உறவினர்களால் அனுகூலம் ஏற்படும். உடல் ஆரோக்கியம் சீராகும். வழக்கு வெற்றி அளிக்கும். மனக் குழப்பம் தீரும். கல்வியில் அதிக மதிப்பெண்கள் கிட்டும். தடைகள் விலகி திருமணம் கைகூடும். புதிய சொத்து சுகம் வாங்க நேரிடும். உத்தியோகஸ்தர்களுக்கு உயர்வு ஏற்படும். புதிய வேலை வாய்ப்பு வந்து சேரும். ஏற்றுமதி, இறக்குமதி தொழில் செய்ய நல்ல லாபம் கிட்டும். விளையாட்டு வீரர்களுக்கு நல்ல வாய்ப்புகள் வந்து சேரும். கணவன் - மனைவி உறவு நன்றாக இருக்கும். உத்தியோகத்தில் உயர்வு, இடமாற்றம் ஏற்படும். மனைவியின் உடல்நிலை சீராகும். சிலருக்குத் தூரதேச பிரயாணம் வந்து சேரும். வெளிநாட்டில் போய் வேலை பார்க்கும் சூழ்நிலை உருவாகும். மொத்தத்தில் அதிகப்படியான நற்பலன்கள் அடைய நேரிடும். பரிகாரம் தேவை இல்லை.

● ● ●

நேர்மைக்குத் தலை வணங்கும் தனுசு ராசிக்காரர்களே, உங்களுக்கு சனி பகவான் 9ம் இடத்திலிருந்து 10ம் இடத்துக்கு பெயர்ச்சி ஆகிறார். பத்தாம் இடம் என்பது ஜீவனம், தொழில், கர்மம் ஸ்தானம் ஆகும். பதவி உயர்வு வந்து சேரும். பணப் பிரச்னை இருக்காது. வேலையில் முன்னேற்றம் உண்டாகும். புதிய வேலை வாய்ப்பு வந்து சேரும். சிலருக்கு வாகனம், வீடு வாங்கும் யோகம் கிட்டும். சிலர் ஆலய தரிசனம் செய்ய நேரிடும். தரித்திரமும், பீடையும் போகும். மாணவர்கள் கல்வியில் நல்ல மதிப்பெண் பெற நேரிடும். குடும்பப் பெண்களுக்குப் பொறுப்புகள் அதிகரிக்கும். நிர்வாகத்தில் உள்ளவர்களுக்கு வேலைப் பளு அதிகரிக்கும். அதற்கு ஏற்ற ஊதியமும் கிட்டும். உடல் ஆரோக்கியம் பாதிக்காது. சுபச்செலவு கூடி வரும். கடன் சுமை குறையும். மனைவி வழியில் நல்ல மேன்மை உண்டாகும். ஏற்றுமதி - இறக்குமதி தொழில் நன்றாகப் பலன் கொடுக்கும். சிலர் பதவியிலிருந்து விடுபட நேரிடும். தற்காலிகச் செலவு ஏற்படும். சமூக சேவகர்களுக்கு நல்ல மதிப்பும் மரியாதையும் பெருகும். விளையாட்டு வீரர்களுக்கு விருதுகள் கிட்டும். புதிய வீடு, மனை வாங்கிடும் யோகம் கிட்டும்.


சனிக்கிழமைதோறும் சனீஸ்வர பகவானை, தீபம் ஏற்றி பிரதட்சணம் செய்துவர சங்கடங்கள் தீரும். நன்மைகள் பெருகும்.



தனுசு

● ● ●

லட்சியத்தோடு நடைபோடும் மகர ராசிக்காரர்களே, இதுவரை 8ம் இடத்தில் இருந்து பல இன்னல்களைக் கொடுத்து வந்த சனி பகவான், தற்போது 9ம் இடம் என்று சொல்லக்கூடிய பாக்கிய ஸ்தானத்தில் சஞ்சரிக்கப் போகிறார். இதனால் இந்த ராசிக்காரர்களுக்கு அதிர்ஷ்டக் காற்று வீசப் போகிறது. முதலில் பொருளாதாரக் கஷ்டம், கடன் தொல்லை, ஆரோக்யத் தொல்லை ஆகியவற்றிலிருந்து காப்பாற்றி நல்லது செய்யப் போகிறார். மதிப்பு, மரியாதை, நாணயம் உயரும். கல்வி வளம் மேம்படும். தேர்வுகளில் நல்ல மதிப்பெண்கள் கிட்டும். உயர்கல்வி கற்க மேல்நாடு



மகரம்

செல்லக்கூடிய சூழ்நிலை உருவாகும். தடைகள் விலகி திருமணம் கைகூடும். கணவன் - மனைவிக்குள் இருந்து வந்த மனக்கசப்பு விலகி குடும்பம் ஒன்றுபடும். உடல்நிலை சரியாகும். வழக்கு பிரச்னைகள் சாதகமாகும். மனத்தில் உற்சாகம் பிறக்கும். உடன்பிறப்புகளால் அனுகூலம் ஏற்படும். எதிர்ப்புகள் விலகும். வியாபாரத்தில் அபரிமிதமான லாபம் கிட்டும். தந்தை வழி சொத்துகள் வந்து சேரும். புண்ணிய ஸ்தலம் செல்ல நேரிடும். மனக்கிலேசம் தீரும். ஏற்றுமதி இறக்குமதி தொழிலில் நல்ல லாபம் கிட்டும். பணப் பிரச்னை இருக்காது. செலவுகள் கட்டுக்குள் இருக்கும். சொத்து சுகம் வந்து சேரும். பரிகாரம் தேவையில்லை.

• • •



கும்பம்

துடுக்காகப் பேசும் கும்ப ராசி நேயர்களாகிய உங்களுக்குச் சனி பகவான் 7லிருந்து 8ம் இடம் என்று சொல்லக்கூடிய அஷ்டம ஸ்தானத்துக்குப் பெயர்ச்சி ஆகிறார். அஷ்டமத்துச் சனி ஆயிற்றே என்று பயப்படத் தேவையில்லை. 'கெட்டவன் எட்டில் இருந்தால் கிட்டிடும் ராஜயோகம்' என்று சொல்வார்கள். அதுபோல கெட்ட கிரஹமான சனி பகவான் எட்டாம் இடத்தில் இருந்து விபரீத மான ராஜ யோகத்தை அளிப்பார். தன ஸ்தானத்தில் இருப்பதால் பணக் கஷ்டத்தைப் போக்குவார். தொழில் இடமாற்றம் ஏற்படும். பூர்வீகச் சொத்து கைக்கு வந்து சேரும். உடல் ஆரோக்கியம் பற்றிக் கவலைப்படத் தேவையில்லை. கடன் தொல்லை தீரும். படிப்பில் அக்கறை எடுத்துப் படித்து வருவது நல்லது. யாருக்கும் ஜாமீன் போடக்கூடாது. உடன்பிறந்தவர்களால் செலவு ஏற்படும்.

சனிக்கிழமைதோறும் ஆஞ்சநேயர் வழிபாடு செய்துவர நற்பலன் கிட்டும். சனி காயத்ரி 9 முறை படித்துவர நன்மை அளிக்கும். திருநள்ளாறு சென்று சனி ப்ரீதி செய்து வந்தால் சனி பீடை விலகி நற்பலன் அதிகரிக்கும்.

• • •




மீனம்

இனிமையாகப் பேசும் மீன ராசிக் காரர்களே, உங்களுக்கு 6ம் இடத்திலிருந்து 7ம் இடம் என்று சொல்லக் கூடிய களத்திர ஸ்தானத்துக்குப் பெயர்ச்சி ஆகி வருகிறார். 7ம் இடம் மனைவி ஸ்தானம் என்பதால் மனைவிக்கு ஆரோக்கியத்தில் தொல்லை ஏற்படலாம். கணவன் மனைவிக்குள் பிரிவினை ஏற்படும். சொந்த வீட்டை விட்டு வாடகை வீட்டுக்குப் போக நேரிடும். வியாபாரத்தில் அபிவிருத்தி செய்து ஏற்றம் காண்பீர்கள். தாயின் ஆரோக்கியம் பாதிக்கும். புண்ணிய ஸ்தலம் செல்ல நேரிடும். உடல் ஆரோக்கியம் சீராகும். வழக்குகள் முடிவுக்கு வரும். சினிமா கலைஞர்களுக்கு விருதுகள் கிட்டும். பணக் கஷ்டம் தீரும். மாணவ மாணவிகள் நல்ல மதிப்பெண்கள் பெற்று முன்னேற்றம் பெறுவர்.

சனிக்கிழமை தோறும் ஆஞ்சநேய சுவாமிக்கு துளசி மாலை சாற்றி, நெய் தீபம் ஏற்றி வழிபட, சங்கடங்கள் விலகி நற்பலன் உண்டாகும். ●

‘மெய்தான் அடங்கி விதிர்விதிர்த்து...’ என்று மனமொடுங்கி நின்றதும் பக்திதான். ‘நட்ட கல்லும் பேசுமோ நாதன் உள்ளிருக்கையில்...?’ என்று கேள்வி எழுப்பியதும் ஒரு வகை பக்திதான். பக்தி குறித்த பார்வை காலத்துக்குக் காலம் மாற்றமடைந்து வந்திருக்கிறது. நமது வாசகர்கள் பார்வையில்...



திவ்யா, பி.சி.ஏ., இரண்டாம் ஆண்டு, ஸ்ரீரங்கம்:

“இன்னைக்கு எல்லா கோயில்லயும் கும்பல் அதிகமாகிட்டே இருக்குது. அப்போ பக்தி அதிகமாகிடுச்சுனு அர்த்தமா? இல்லே... பக்திக்கு அளவே கிடையாது. சுவாமி கும்பிடப்போற பக்தர்களுக்குப் பிரச்னைகள் அதிகமாகிடுச்சுனு அர்த்தம்.



லதா சேகர், சமஸ்கிருத ஆசிரியை, இராமேஸ்வரம்:

“கடவுளை மட்டுமே நினைத்து மனம் உருக வேண்டுவதுதான் உண்மையான பக்தி. எல்லார்க்கும் அதனைச் சாத்தியப்பட



பக்தின்னா என்னங்க?

- மக்கள் பேட்டி

அதான்
கோயிலுக்குப் போய்,
எனக்கு அதைச் செய்
இதைச் செய்னு க்யூவுல
நின்னு சுவாமிகிட்டே
அப்ளிகேஷன் போடுறாங்க. இது
பக்தி ஆகாது. இந்த
அப்ளிகேஷன் போடுற
வேலையெல்லாம் எனக்குப்
பிடிக்காது.''



கலைச் செல்வன், பி.எஸ்.சி., இரண்டாம் ஆண்டு, ஆத்தூர், சேலம்:

''**ப**க்தியை இப்ப ரொம்ப பேரு தப்பா பயன்படுத்தறாங்க.

அவங்க பக்தர்களும் கிடையாது. அவங்ககிட்ட பக்தியும் கிடையாது. அந்த வேடதாரி பக்தர்கள் ஒரு பக்கம்னா, என் வயசொத்த ஆண்களும் பெண்களும் தங்களோட காதலை வளர்க்கத் தகுந்த இடமா தேர்வு செய்யறது கோயில்களைத்தாங்க. காதலர்கள் கோயிலைத் தவிர்த்து வேற இடங்களில் தங்கள் காதலை வளர்த்துக்கட்டும். வேணாம்னு சொல்லலை. மனத் தூய்மையோட இறைவனை வழிபடுவதுதாங்க உண்மையான பக்தி.''

வைப்பதுதான் ஆன்மிகம். கடவுள்கிட்ட சிலர் வந்து தனக்கு நல்லது செய்யணும்னு வேண்டிக்கிறாங்க. வேறு சிலரோ தனக்கு வேண்டாதவங்களை நினைச்சு 'கடவுளே நீயே அவங்களுக்குக் கூலி கொடு'ன்னு வேண்டிக்கிறாங்க. இந்த ரெண்டு விதமான வேண்டுதல்களிலும் பக்தி இல்லேங்கறதுதான் என் கருத்து.''

கலைச்செல்வி, ஆசிரியை, அரசு பெண்கள் மேல்நிலைப் பள்ளி, மண்ணச்சநல்லூர்:

''**பா**ர்க்கும்போது மட்டுமல்ல, நினைத்தவுடனே நெஞ்சு பொங்கி, தோள் தளர்ந்து, மேனி சிலிர்த்து, உணர்வெல்லாம் குளிர்ந்து, உயிரெல்லாம் உருகி கரைகின்ற உணர்வுதான் பக்தி. நாம் நினைத்துக் கொண்டிக்கும் பக்திக்கும், உண்மையான பக்திக்கும் பெரும்பாலும் சம்பந்தம் இருப்பதில்லை. எந்த வேண்டுதலும் எந்த நிபந்தனையும் வைக்காமல் சாதாரணமாக சுவாமிக்குச் செய்வதே மிகச் சிறந்த பக்தி. 'இந்த வினாடி வரை சுவாசிக்க என்னை அனுமதித்திருக்கும் இறைவா, உமக்கு மிகுந்த நன்றி' என உணர்ந்து வேண்டுவதே உண்மை பக்தி.''





சரண்யா, தாம்பரம்:

"கடவுள் மேல வச்சிருக்கிற நம்பிக்கைதான் பக்தி. என்னோட ஆத்மார்த்த கடவுள் ஸ்ரீ அன்னை. நான் எந்தக் காரியம் செய்யறதா இருந்தாலும் அன்னை முன்னாடி நின்னு சொல்லிட்டுதான் ஆரமபிப்பேன். அதனோட முடிவு பத்தி நான் கவலைப்படறது இல்லை. ஏன்னா அந்த அன்னை அதைப் பார்த்துப்பா. இன்றைய தினம் வரை எனது அன்றாட வாழ்க்கையில் இப்படித்தான் செயல்பட்டு வருகிறேன். என்னைப் பொறுத்தவரைக்கும் இதுதான் பக்தி."

பெ.விஜயகுமார், யோகா மாஸ்டர், திருச்சி:




"திருப்பதி லட்டுக்கே காப்புரிமை பெற்று, அதனைக் காப்பாற்றிக் கொள்ள வேண்டிய நவீன கால கட்டத்தில் நாம் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். பக்தின்னா என்னன்னு ரொம்ப சுலபமா இப்படி அணுகலாம். முதல்ல அம்மா மீது பக்தி. அடுத்து அப்பா மீது. அதற்கடுத்து குரு மீது. சங்கிலித் தொடர் போல இது மூணும் இணைந்து வந்தாலே, அடுத்து இறை மீது இயற்கையாகவே நமக்குள் பக்தி பொங்கி எழும். இந்த நாலுக்கும் அடுத்து, நமக்கு ரொம்ப அவசியமா தேவைப்படுறது தேச பக்தி. இந்த அஞ்சும் ஒரு நபர்கிட்டே நெறைஞ்சு இருந்தாலே, முகம் தெரியாத மனுஷங்க மீது ஒருவித பக்தி வந்துடும். அதுதாங்க அதீத பக்தி. வலைத்தளத்துல பதிவு செஞ்சு, சுவாமி பிரசாதத்தை கூரியர் தபால் மூலமா வீட்டு வாசலுக்கு வர வழைக்கிறதெல்லாம் பக்தி இல்லீங்க!"


- ஸ்ரீரங்கம் திருநாவுக்கரசு



ஏ.வித்யா, ஐ.டி.பி.டெக், செயின்ட் ஜோசப் பொறியியல் கல்லூரி, சென்னை:

"தன்னம்பிக்கையை வளர்த்து, கோபத்தைப் போக்கி, அன்பை வளர்க்கும் விஷயமாகவும், தன்னை அறிதலின் தூண்டுகோலாகவும் அமைவதுதான் பக்தி."





''இதுக்கே பிரமிச்சா எப்படி? இன்னும் உங்களை ஆச்சரியப் படுத்த நிறைய விஷயம் இருக்கு இங்கே!''

குறும்பு தெறிக்கச் சொன்னார் ஜோஸஃப். அதனால், சுயநிலை மீண்ட பூரணி வியப்பு விலகாம லேயே பேசினாள்:

''நிஜமா இப்படி ஒரு கோயிலை இங்கே எதிர்பார்க்கவே இல்லை. என்ன அரவிந்த்?''

''ட்ரு ட்ரு'' என்ற அரவிந்தன் தொடர்ந்தான்:

''ஏதோ ஒரு நகரம் அப்படின்னு

சங்கராபுரம்



தான் நினைச்சு வந்தோம்!''

அவன் தொடரும் முன்பு குறுக்கிட்டார் ஜோஸஃப்

''நகரம்தான். ஐடியல் நகரம். நவீனத்தை எப்படி நடைமுறை வாழ்க்கைக்குப் பயன்படுத்தணும்னு தெரிஞ்சுக்க வேண்டிய நகரம் இது!'' என்றபடியே தொடர்ந்தார்:

''வாங்க போகலாம்!''

மீண்டும் கார் நகர்ந்தது.

''இது வேத பாடசாலை; நாலு வேதங்களும் இங்கே கற்பிக்கிறாங்க. அடுத்து இசைப்பள்ளி. இசைப்பள்ளின்ன உடனே கர்நாடிக் மியூசிக் மட்டும்னு நினைச்சுக்க வேண்டாம். தமிழிசை, திருமுறைப் பயிற்சிப் பள்ளி எல்லாமே அதோட சேர்ந்தது. அடுத்தது கோசாலை...''

ஜோஸஃப் சொல்லச் சொல்ல இருவரும் அசந்து போனார்கள்.

ஒவ்வொன்றும் பெரிய அமைப்பில் இருந்தன. கோசாலையில் 300 பசுக்களுக்கு மேல் இருந்தன. அதைத் தொடர்ந்து சங்கரா மேல்நிலைப் பள்ளி, சங்கரா கலை மற்றும் அறிவியல் கல்லூரி, சங்கரா மருத்துவமனை, சங்கரா ஆயுர்வேத ஆராய்ச்சி மற்றும் மருத்துவமனை, சங்கரா சித்த வைத்திய சாலை... என்று போர்டுகள் தென்பட்டன.

உள்ளேச் செல்லச் செல்ல நகரம் மேலும் வளர்ந்துகொண்டே போவது போல் தோன்றியது இருவருக்கும்.

சுற்றிலும் மரங்கள், பூச்செடிகள் என்று

டால்மியாபுரம் கணேசன்



பசுமையும் நிழலும் தழையச் செய்தன. சற்றுத் தள்ளி, வயல்வெளியில் வாழை மற்றும் தென்னந்தோப்புகளும் தென்பட்டன.

நேராகச் சென்றுகொண்டிருந்த சோலார் கார் இடதுபுறமாகத் திரும்பியது. அங்கே சங்கரா வாட்டர் பிளாண்ட், சங்கரா சாஃப்ட்வேர் சொல்யூஷன்ஸ், சங்கரா நூலகம், சங்கரா திறந்தவெளி கலையரங்கு, சங்கரா மியூசியம் என்று அடுத்தடுத்து கட்டடங்கள்.

'இவ்வளவுபேரும் தங்குவது எங்கே? இவ்வளவு கட்டடத்துக்கும் கரண்ட் எங்கே இருந்து கிடைக்கும்? தண்ணீர் வசதி எப்படி?' என்று அடுக்கடுக்கான கேள்விகள் இருவருக்குள்ளும் எழுந்து பரவின. அதை புரிந்துகொண்டதுபோல பேசினார் ஜோஸஃப்.

''மலைக்கு மேல எவ்வளவு காத்தாடி இருக்கு பாத்தீங்களா? அதோட அந்த மூலைல பாருங்க. மலையில இருந்து அருவி விழுது. போதாக் குறைக்கு எல்லா கட்டடத்திலயும் சூரிய சக்தியைச் சேமிக்க பேட்டரி இருக்கு. இந்த மூன்று வகை மின் சாரம் தவிர, ஆந்திர அரசும் மின் சாரம் சப்ளை பண்ணுது.

குடிதண்ணீருக்கு அருவி நீரைத் தேக்கி அணைகட்டியிருக்கிறோம். கழிவு நீரைச் சுத்தம் பண்ணி பயன் பாட்டுத் தண்ணீரா மாத்தற ட்ரீட் மெண்ட் ப்ளான்ட்டும் இருக்கு.

இங்கே வேலை பாக்கறவங்க, படிக்கறவங்க யாரும் வெளில இருந்து வரல. எல்லாருக்கும் இங்கே தங்குமிடம் இருக்கு. அத்தனை தேவையையும் இந்த சங்கராபுரம் தானாகவே அமைச்சிக்கிட்டிருக்கு.

மாணவர்கள்னா சுமார் 3000 பேர்; ஆசிரியர்கள், மருத்துவர்கள், உதவியாளர்கள், பணியாளர்கள்னு பார்த்தா மொத்தம் 10,000 பேர் இந்த சங்கராபுரத்தில் இருக்கோம். யாரும் எதுக்காகவும் வெளில போக வேண்டாம். எல்லாம் இங்கே கிடைக்கும்.

கல்யாணம் போன்ற விழா நடத்தறதுக்கு கம்யூனிடி ஹால், அதுவும் இலவசமா கிடைக்கும், யார் வந்தாலும்! அவங்க கேட்கிற நேரத்துக்கு யாரும் புக் பண்ணாம இருக்கணும். அவ்வளவுதான்!''

10

இயற்கையைச் சிதைக்காமல், அதன் தன்மையோடு தன்னையும் சங்கராபுரம் பிணைத்துக் கொண்டிருப்பதைப் புரிந்து கொண்டாள் பூரணி.

பிரமாண்டமான கட்டடங்கள் எழுந்திருந்த போதும், காற்றோட்டமும், காற்றில் குளிர்ச்சியும் தென்பட்டன. அதைவிட ஆச்சர்யம்,

குற்றுமரம் அளவுக்கு எங்கு பார்த்தாலும் மதாளித்துக் கிடந்த துளசிச் செடிகள்! பேசாமல், துளசிவனம் என்றே பெயர் வைத்திருக்கலாம் என்றும் தோன்றியது, அவளுக்கு.

அதை வாய்விட்டுக் கேட்கவும் செய்தாள்.

''அதுவா? துளசிக்கு அபூர்வமான சக்தி உண்டு. காற்றையும், சுற்றுச்சூழலையும் தூய்மைப்படுத்தற தன்மை துளசிக்கு உண்டுன்னு விஞ்ஞானிகள் சொல்லியிருக்காங்க. ஏசி, ஃப்ரிட்ஜ், கெமிக்கல் தொழிற்சாலைன்னு ஏகப்பட்ட நச்சுகளை காத்துல தினமும் கலக்கிறோம். எப்படி அந்தக் காத்தைத் தூய்மைப்படுத்தறது? இந்த துளசிக்காடுதான். தாஜ்மஹாலைச் சுத்தியே வளர்க்கப்போறாங்க தெரியுமா?''

ஜோஸஃப் சொல்லி முடித்ததும், இருவருமே அசந்து போனார்கள்.

''புதுசை அப்படியே ஒத்துக்கறதும் தப்பு; பழசுன்னு அப்படியே ஒதுக்கறதும் தப்பு'ம்பாரு பெரியவர். அவரோட யோசனைதான் இது. நிகழ்கால வசதிகள் எல்லாம் இருக்கு; கடந்த காலத்தோட தூய்மையும் தெளிவும் அதனால மறக்கப்படலை! எனக்குப் புரிஞ்சதைச் சொல்லிட்டேன். வாங்க ஐயாவைப் பாத்துடலாம்.''

சொல்லி முடித்த ஜோஸஃப் வண்டியைத் திருப்பினார்.

''இதுக்குள்ளே அவர் சாயங்கால பூஜையை முடிச்சுத் தயாரா இருப்பார்.''

ஜோஸஃப் சொன்னது உண்மைதான்.

குடிசைக்குள் நுழைந்தபோது பளிச்சென்று திருநீறு துலங்க அமர்ந்திருந்தார் கிருஷ்ணமூர்த்தி. உள்ளே ஊதுவத்தியின் நறுமணம். பெரியவரின் படத்தின்மீது புதிதாகச் சாத்தப்பட்டிருந்த மாலை, ஒளிர்ந்து கொண்டிருந்த தீபம்... என்று தெய்வீகம் ததும்பிய சூழல்!

ஒரு ஞானியின் சன்னிதியில் பிரவேசிக்கிற மனநிலை ஏற்பட்டது இருவருக்கும்!

''வாங்கோ, சுத்திப் பாத்தேளா?''

முறுவல் ததும்ப வரவேற்றார் கிருஷ்ணமூர்த்தி.

''பி....பிரமிப்பா இருக்கு. என்ன ப்ளான்? என்ன வொர்க்? உங்களைத் தவிர வேற யாராலும் இதைச் சாதித்திருக்க முடியாது.''

அரவிந்தன் முடித்ததும், நெருப்பு தீண்டிய மாதிரி 'ஆ' என்றார் கிருஷ்ணமூர்த்தி. ஒரு கணம் திடுக்கிட்டுப் போனார்கள் இருவரும்.

''நானாவது? சாதிக்கிறதாவது? அபசாரம்! அபசாரம்! மனசால கூட அப்படி

ஒரு பிரபுவிடம் இரண்டு வேலைக்காரர்கள் இருக்கிறார்கள். ஒருவன் வேலை எதுவும் செய்யாமல் அந்தப் பிரபுவை ஸ்தோத்திரம் செய்துகொண்டே இருக்கிறான். இன்னொருவன் வெகு நேர்த்தியாக வேலை செய்கிறான். என்றாலும் அந்தப் பிரபுவிடம் துளிக்கூட அன்போ பாசமோ காட்டாமல், வேலையை மட்டும் கவனிக்கிறான். சாதாரணமாகப் பார்க்கிறவர்களுக்கு அருகில் ஸ்தோத்திரம் பண்ணுகிறவன்தான் பிரபுவின் பிரீதிக்குப் பாத்திரமாக முடியும் என்று தோன்றும். பிரபு அசடாக இருந்தால் இப்படியே நடப்பான். ஈஸ்வரன் அசட்டுப் பிரபு இல்லை. தன்னை ஸ்தோத்திரம் பூஜை செய்கிறான் என்பதால் மட்டும் ஒருவனுக்கு அவன் அனுக்கிரஹம் செய்துவிட மாட்டான். தான் விதித்த கர்மங்களைச் செய்கிறவர்களிடமே அதிக பிரீதி கொள்வான். ஆனாலும், 'இது பகவான் செய்த லோகம். சர்வலோக ராஜாவான அவனே நம் அம்மையும் அப்பனும். நாம் அத்தனை பேரும் அவனுடைய குழந்தைகள். இத்தனை குழந்தைகளும் இருக்கிற ஜன சமூக குடும்பம் ஒற்றுமையாக சௌஜன்யமாக வாழவேண்டும் என்றே நமக்கு வேத தர்மம் வெவ்வேறு காரியங்களைப் பிரித்துக் கொடுத்திருக்கிறது. அவற்றை நம்முடைய சொந்த

நினைக்கப்படாது. அதோ.. எதிர்த்தாப்லே அனுக்ரஹம் பண்ணிண்டு இருக்காரே... அவரோட ஸங்கல்பம்! நான் முன்னமே சொன்னேனே... நான் வெறும் கருவி! பண்ணிண்டு இருக்கறதெல்லாம் அவர் தான். அதுல எந்தச் சந்தேகமும் வேண்டாம்.''

தொண்டை கமறப் பேச்சைத் தொடர்ந்தார் கிருஷ்ணமூர்த்தி.

''தத்துவத்துல பூனைக்குட்டி, குரங்குக் குட்டின்னு உதாரணம் சொல்வா. குரங்குக்குட்டி தாய் போற இடத்துக்கெல்லாம் தானும் போகும். எப்படி? அம்மாவோட வயத்தைக் கட்டிக்கும்! அதுவரைக்கும்தான் அதோட வேலை. மிச்சத்தை அம்மா பார்த்துக்கும்.

பூனைக்குட்டிக்கு அதுவும் இல்லை. தாய்ப் பூனையே தன் வாயாலே கவ்வி, தூக்கிண்டு போய் வைச்சுடும். இதுலே நான் பூனைக்குட்டி ரகம்! ஏன்னா, என்னோட பிரயாசை இதுல எதுவும் இல்லை. அவர் என்னை எங்கெங்கே கொண்டு வெச்சாரோ, அங்கங்கே இருக்கேன். எங்கே கொண்டு சேர்ப்பாரோ அங்கே சேர்றேன். எனக்குன்னு எந்த ஆசையும் கிடையாது. இப்ப உங்களுக்கு ஒரு கேள்வி வந்திருக்கணுமே? எந்த ஆசையும் இல்லேன்னு சொன்னா, இந்தப் பேட்டிக்கு ஏன் சம்மதிச்சேன்னு தோணறதா?''

சரேலென்று எழுந்த அந்தக் கேள்வி அரவிந்தனை உலுக்கியது. அப்படியொரு கேள்வி, அவனுக்குள் இப்போதுதான் முளைவிட்டிருந்தது. அதை உடனே அவர் கேட்டதால், ஒரளவு திணறித்தான் போனான் அவன்.

அதைப் புரிந்துகொண்டும், தெரியாதது போலப் பேசினார் கிருஷ்ணமூர்த்தி.

''முக்கியமான ஒரு காரணம் இருக்கு.

இந்த சங்கராபுரம் எழும்பினதோ, அதுக்கு பெரியவாளோட ஸங்கல்பம் காரணம்கிறதோ இல்லை. பெரியவாளோட சக்திக்கு முன்னால, இதெல்லாம் ரொம்ப ரொம்பச் சின்ன விஷயம்? அவரைப் பத்திப் பேசணும்னா, சொல்லணும்னா நிறையச் சொல்லலாம். நானென்ன சொல்றது? நிறைய பேர் இருக்கா! அதனால, பெரியவாளைப் பெருமைப்படுத்த நானெல்லாம் அவசியமில்லை. வேற என்னதான் காரணம்?!

நாடு ரொம்ப மோசமான திசையை நோக்கிப் போயிண்டு இருக்கு. மனுஷ



ஆசைகள், லாபங்களை நினைக்காமல் செய்து குடும்பம் ஒழுங்காக நடக்கச் செய்வதே நம் கடமை' என்ற உணர்ச்சி உண்டானால்தான் நாம் செய்கிற கர்மம் துளிக்கூட குறைவு ஒழுங்கீனம் இல்லாமல் சரியாக இருக்கும். இந்த உணர்ச்சி வருகிறபோது அதிலேயே ஈஸ்வர பக்தியும் உட்புகுந்து நிற்கும். இப்படி பக்தி உணர்வோடு கர்மம் செய்தாலே பகவத் கிருபையை பூரணமாகக் கிரகிக்க முடியும்.

– ஜகத்குரு காஞ்சி காமகோடி ஸ்ரீ சந்திரசேகரேந்திர சரஸ்வதி சங்கராச்சார்ய சுவாமிகள்

மனசுல விகாரங்கள் கூடிண்டே இருக்கு. இது நல்லதுக்கு இல்லை.

வருமானம் வேணும்; வசதிகள் வேணும்; ஆனா, மனுஷனா இருக்கணும். மனுஷனை, மிருகமா, குணக்கேடா மாத்தற எதுவுமே வளர்ச்சி இல்லே.

கல்விக்கு, வித்யைன்னு பேரு. வித்யைக்கு லக்ஷணம் சொல்லும்போது, 'வித்யா ததாதி விநயம்'னு சொல்வா. வித்யை அடக்கத்தைத் தரணும். கர்வத்தைத் தரக்கூடாது.

ஆனா, இப்ப பாக்கற எல்லாத்துலயும் ஆர்ப்பாட்டம்தான் இருக்கு. அடக்கம் இல்லை. அதுதான் மனசுக்குக் கவலையா இருக்கு.

இந்த சங்கராபுரம் தோன்றினதுக்குக் காரணம் இந்தக் கவலைதான்; இந்தத் தாபம்தான்! ஜனங்கள் சிநேகிதமா, ஆதரவா, அனுசரணையா வாழணும்; பரஸ்பர நம்பிக்கையும், உதவியும் பெருகணும்; பொறாமையும், துவேஷமும் விலகணும்; அன்பாலயும் இன்சொல்லாலயும் ஒண்ணாயிருக்கணும். சகல ஜீவ ராசிகளும் சந்தோஷமாயிருக்கணும். வேதத்தோட உட்பொருள் இதுதான்.

அந்த நிலையை நாம உண்டாக்கலைன்னா, வேற எந்த தேசமும் உருவாக்க முடியாது. அந்த ஞானத்துக்காகவே அமைஞ்ச பூமி இந்த சங்கராபுரம்!

அதைச் சொல்லிண்டே இருந்தவர்தான் அந்த மஹாபெரியவர்!

இதைச் சொல்லத்தான் நான் பேட்டிக்கே ஒத்துண்டேன். இந்தச் செய்தி தான் மக்களுக்குப் போய்ச் சேர வேண்டிய செய்தி!'' என்ற கிருஷ்ணமூர்த்தி எழுந்தார்:

பெரியவா படத்தின் முன் நிவேதித்திருந்த பழங்களையும், கல்கண்டையும் எடுத்து அவர்களிடம் நீட்டினார். வாங்கிக் கொள்ளுமுன் சரேலென்று வணங்கினார்கள் இருவரும்!

''மங்களானி பவந்து!''

ஆசிர்வதித்த பெரியவர் சொன்னார்:

''சொன்னா தப்பா எடுத்துக்காதிங்கோ. பத்திரிகா தர்மம்கிறது ஜனங்களுக்கு நல்லதை எடுத்துச் சொல்றது. லாபம் கூடணும்கிறதுக்காக அரிசில கல்லு கலக்கறமாதிரி, சொல்ற விஷயத்துல விஷத்தைக் கலந்துடக் கூடாது. உலகத்துக்கு நன்மை தரக்கூடியது தர்மம்தான்! அந்தப் பாதைல எல்லாருமே நடந்தா, இந்த லோகமே சங்கராபுரமா ஆகும்! ஆகணும்!! இதை யாரும் காயப்படாம புரிய வெச்சுடுங்கோ. அப்புறம் அவர் பார்த்துப்பார்.''



உலகத்துக்கு நன்மை தரக்கூடியது தர்மம்தான்! அந்தப் பாதைல எல்லாருமே நடந்தா, இந்த லோகமே சங்கராபுரமா ஆகும்!

சொன்னபடியே, பெரியவாளின் படத்தைக் காட்டினார் கிருஷ்ணமூர்த்தி.

''அப்படியே ஆகட்டும்!''

அரவிந்தனும் பூரணியும் மீண்டும் அவரை நமஸ்கரித்தார்கள்.

(முற்றும்)



நமது வேர் பக்தியாலானது!

தூரதேசத்துக்குப் போனவர்களின் வாழ்வு மாறிப்போகும் என்று யார் சொன்னது? கென்ஸ்ட்டர் சிட்டியில் மிட் வெஸ்ட் பகுதியில் ஆண், பெண்களுக்கு திங்கள் முதல் வெள்ளி வரை அலுவலகம், வார இறுதியில் ஓய்வு என்றாலும், சமீபத்தில் வித்தியாசமாக அமைந்தது ஒரு வார இறுதி. வெள்ளி இரவு கண் விழித்து சீர்முறுக்கு, பருப்பு தேங்காய் என பாரம்பரிய உணவுகளைச் செய்து முடித்தனர். சனி, ஞாயிறு உற்சாகமான ராதா கல்யாணம். பாரம்பரிய ஆட்டம், பக்திப் பாட்டு, கலாசாரக் கொண்டாட்டம், மடிசார் புடைவை என ராதா கல்யாணம் அமர்க்களப்பட்டது. இந்த மாதிரி விழா நடத்துதல் அமெரிக்காவில் இப்போது வியாதி மாதிரி பரவுகிறதாம்.

"எந்தச் சூழ்நிலையிலும் நமது வேர்களை நாம் இழந்து விடக்கூடாது. இறைவன் மீதான பக்தி நம்மிடமிருந்து இடம்பெயராமல் இருந்தால் போதும்; எல்லா யுகங்களிலும் நம் கலாசாரம், பண்பாடு நீடித்து நிற்கும். நமது வேர் பக்தியால் ஆனது'' என்கிறார் சமீபத்தில் அமெரிக்கா சென்று திரும்பிய சமூக ஆர்வலர் ஸ்ரீமதி ஜெகன்னாதன்.

செய்தி : **ஆர்.பாலா**



ஆயிரம் கண் போதாது!

அந்த இடத்தில் கொந்தளிப்பு என்பதே இல்லாமல் தண்ணீர்ப் பரப்பு தகடு போல இருந்தது. படகை வெகு சுலபமாகத் தள்ளிக்கொண்டு போய்க் கரையில் இறங்கினோம். கரையோரமாகச் சிறிது தூரம் நடந்து சென்ற பிறகு வசதியான ஓர் இடத்தில் குன்றின் மீது ஏறினோம். குன்றின் உயரம் அதிகம் இல்லை. சுமார் ஐந்நூறு அல்லது அறுநூறு அடிதான் இருக்கலாம். என்றாலும் சரியான பாதை இல்லாதபடியால் ஏறுவதற்குச் சிரமமாகவே இருந்தது. மண்டி வளர்ந்திருந்த செடிகள் கொடிகளுக்குள்ளே புகுந்து அவற்றைக் கையால் ஆங்காங்கே விலக்கிவிட்டுக் கொண்டு ஏற வேண்டியிருந்தது. ''முன்னே நான் பார்த்ததற்கு இப்போது காடு அதிகமாக மண்டி விட்டது'' என்றார் கப்பல் நாயகர். நல்ல வேளையாக அப்படி மண்டியிருந்த செடிகள் முட்செடிகள் அல்ல. ஆகையால் அரை மணி நேரத்துக்குள் குன்றின் உச்சிக்குப் போய்ச் சேர்ந்தோம்.

சூரியன் மறையும் தருணம். மஞ்சள் வெயிலின் கிரணங்கள் இன்னமும் அந்தப் பச்சைத் தீவின் உச்சிச் சிகரத்தின் மீது விழுந்து அதற்குப் பொன் மகுடம் சூட்டிக் கொண்டிருந்தன.

''அதோ பாருங்கள்!'' என்றார் கப்பல் நாயகர்.

அவர் சுட்டிக்காட்டிய திசையை நோக்கினோம். பார்த்த கண்கள் பார்த்தபடியே அசைவின்றி நின்றோம். 'திகைத்தோம்', 'ஸ்தம்பித்தோம்', 'ஆச்சரியக் கடலில் மூழ்கினோம்' என்றெல்லாம் சொன்னாலும், உள்ளபடி சொன்னதாகாது. இந்த உலகத்தை விட்டு வேறோர் அற்புதமான சொப்பன லோகத்துக்குப் போய்விட்டோம் என்று சொன்னால் ஒருவேளை பொருத்தமாயிருக்கலாம். வரிசை வரிசையாக விஸ்தாரமான மணி மண்டபங்களும், கோயில் கோபுரங்களும், ஸ்தூபங்களும், விமானங்களும் கண்ணுக்கு எட்டிய தூரம் காட்சி அளித்தன. பர்மாவில் உள்ளவை போன்ற புத்த



அமரர் கல்கி

விஹாரங்கள், தமிழகத்தில் உள்ளவை போன்ற விஸ்தாரமான பிராகார மதில்களுடன் கூடிய கோயில்கள், வானளாவிய கோபுரங்கள், தேர்களைப் போலும், ரதங்களைப் போலும் குன்றுகளைக் குடைந்து அமைத்த ஆலயங்கள், ஆயிரங்கால் மண்டபங்கள், ஸ்தூபி வைத்த விமானங்கள், ஸ்தூபியில்லாத மாடங்கள், பாறைகளில் செதுக்கிய அபூர்வமான சிற்பங்கள், நெடிய பெரிய சிலைகள், ஆகா! அவ்வளவையும் பார்ப்பதற்கு ஆண்டவன் இரண்டே கண்களைக் கொடுத்திருப்பது எவ்வளவு பெரிய அநியாயம் என்று தோன்றியது.

- 'மோகினித் தீவு' நெடுங்கதையில்...



தெரியாமத்தான் கேட்கிறேன்

''சோதனைகள் புதிதல்ல; அவற்றைச் சாதனைகளாக மாற்றிக் காட்டுவோம்.''

- ஜெயலலிதா

''மாத்தின பிறகு சொல்லி யனுப்புங்க''ன்னு கழகக் கண் ம்ணிகள் கிளம்ப ஆரம்பிச்சுட் டாங்களோ?

கருணாநிதியின் இலக்கிய வாரிசாக கனிமொழி திகழ்கிறார்.

- அன்பழகன்

அரசியல் வாரிசா யார் திகழ் கிறார்ன்றதையும் இதேமாதிரி ஓப் பனா சொல்வீங்களா?

சென்னை மாநகராட்சி கவுன்ஸிலர்களுக் கான விளையாட்டுப் போட்டிகள். ஓட்டப் பந்தயத்தில் மேயர் முதல் பரிசு பெற்றார்.

சென்னைல இருக்கற கொசுக்களைக் கொஞ்சம் ஓட்டுங்களேன்... பார்ப்போம்?

மாயாவதியிடம் 90,500 கோடி மதிப் புக்குச் சொத்துக்கள் உள்ளன. கடந்த இரண்டு ஆண்டுகளில் மட்டும் 40,000 கோடி சேர்த்துள்ளார்.

- சமாஜ்வாதி கட்சி

எப்படி சேர்த்தார்ன்றதையும் எதிர்கால உபயோகத்துக்காக 'ஸ்டடி' பண்ணி வைச்சுக் கிட்டிருப்பீங்களே...?

வாடகைக்குக் குடியிருப்பவர்களிடம் அதிக மின்கட்டணம் கேட் டால் இணைப்பு துண்டிக்கப் படும்.

- ஆற்காடு வீராசாமி

முதன்முதல்ல இணைப்பு கொடுக்கறதுக்கே கூடுதல் 'கட்டணம்' கேட்கற டிப்பார்ட்மென்ட் ஆளுங்களோட 'பவரை' யார் துண்டிக்கறதாம்?

இந்தியாவின் அனைத்து காவல் நிலை யங்களும் இரண்டாயிரம் கோடி ரூபாய் செலவில் ஒருங்கிணைக்கப்படும்.

- ப.சிதம்பரம்

பைசா செலவில்லாம அதுங்க லஞ்ச ஊழல்ல ஒருங்கிணைஞ்சிருக்கே, போதாதா?

சமூகச் சிந்தனையோடு ஹோட்டல் உணவுப் பண்டங்களின் விலையைக் குறை யுங்கள்.

- அமைச்சர் எ.வ.வேலு

இதே சமூகச் சிந்தனை என்ஜினீயரிங் காலேஜ் ஃபீஸு கேக்கறப்போ இருக்கத் தேவலையா?



சுருளிப்பட்டி தைலா


அஸ்ட்ராலஜி டூரிஸம்

நளினி சம்பத்குமார்

ஜப்பானில் உள்ள மிஸிக்கேடாவுக்கும் அவரது தர்மபத்னியாம் ஹக்குராவுக்கும், அவர்களது நண்பர் வீட்டுக்கு 'தேநீர் விருந்து' (ஜப்பான் மொழியில், சா-னோ-யூ) போய் விட்டு வந்ததிலிருந்தே 'அஸ்ட்ராலஜி டூரிஸம்' பேக்கேஜில் எப்படியாவது இந்தியா சென்று, 'பரிகார பிரபு'வைப் பார்த்து விட வேண்டுமென்று ஆசை. அடித்துப் பிடித்து 'அஸ்ட்ராலஜி டூரிஸம்' புண்ணியத்தில் பரிகார பிரபு வீட்டு வாசலில் வந்து இறங்கினார்கள்.

ஏற்கெனவே ஈ மெயிலில், இரண்டு நாட்கள் இந்த ஜப்பான் தம்பதியரோடு அஸ்ட்ராலஜி டூரிஸத்துக்கு அப்பாயிண்ட்மெண்ட் கொடுத்ததால் பரிகார பிரபு, பரிபூர்ணமாக அவர்களுக்கு முதலில் ஜாதக கரணம் அதாவது ஜாதகம் குறிக்க ஆரம்பித்தார். ''போங்கோ நன்னா உட்கார்ந்திருக்கு புதன்'' என பிரபு போட்ட முதல் போடில், உட்காரலாமா, கூடாதா என பயந்து நடுங்கியபடியே உட்கார்ந்திருந்த ஜப்பான் தம்பதி டோக்கியோவில் ஏற்பட்ட திடீர் பூகம்ப விளைவு போல வாரிச் சுருட்டி கொண்டு எழுந்தனர்.

''உட்காருங்கோ..உட்காருங்கோ. உங்க ஜாதகத்துல நீச்சமா உட்கார்ந்திருக்கிற புதன், உச்சத்துல போய் உட்காரணும்னா, முதல்ல நீங்க பச்சை உணவுகளைத்தான் சாப்பிடணும்'' என பரிகார பிரபு செப்ப, ''நாங்க ஏற்கெனவே எங்க நாட்ல அதைத் தானே பண்ணிண்டு இருக்கோம்.. மனுஷாளைத் தவிர ஓட்றது, நிக்கறது, ஊர்றதுன்னு எல்லா வித உயிரினங்களையும் பச்சை பச்சையாதானே சாப்பிட்டுக்கிட்டு இருக்கோம் ஸ்வாமி'' என அப்பாவிகளாய், சாப்பிட்ட அப்பிராணிகளை நினைவு கூர்ந்தனர். ''நான் சொல்றது பச்சை கலர்ல இருக்குற உணவு



வகைகள.. கீரை, பச்சைப் பட்டாணி, பச்சைப் பயறு என எல்லாவற்றையும் சமைத்து வாழை இலைலதான் ஒரு மாதம் சாப்பிடணும்'' என பரிகாரர் கொடுத்த பிரசாரத்தை ஜப்பானியில் மொழி பெயர்த்து மொழிபெயர்ப்பாளர் சொன்னதைக் கேட்டு, 'பே, பே' என ஏதோ பேயைக் கண்டதைப் போல ஜப்பான் தம்பதி பேந்தப் பேந்த முழித்தனர்.

இலையையும், தழையையும் தழையத் தழைய மடிசார் புடைவை கட்டிண்டு, மாமி பரிகாரத்தில் சொன்னபடியே கீரை சாதம், பட்டாணி சுண்டல் எனப் பரிமாற... ஜப்பான் தம்பதிக்கு புதன் உச்சம் பெற்றானோ இல்லையோ, திடீரென ஜுரம் உச்சம் பெற்று விட்டது. ''அடுத்து இப்படி திடீர் திடீர்னு உடம்பு சுடறது சரியில்ல. உங்ககிட்ட சந்திரன் ரொம்ப கோச்சிண்டு இருக்கார்.... அதுக்கு என்ன பண்ணனும்னா, ராத்திரி 10 மணிக்கு ஆகாசத்தைப் பார்த்து 11 தடவை நான் எழுதிக் கொடுக்கும் இந்த மந்திரத்தை உச்சரிக்கணும்'' என பரிகாரர் ட்ரில் மாஸ்டர் ஆனார். பத்து மணிக்கு டாணென்று மொட்டை மாடிக்குப் போய், மந்திரம் சொல்லித் தரும் அஸிஸ்டெண்டின் அஸிஸ்டென்ஸோடு ஆகாசத்தில் வீற்றிருந்த முழுமதியை முழு மதிப்போடும், மரியாதையோடும் பார்த்து மந்திரம் சொன்ன மிஸ்டர் - மிஸஸ் மஸிக்கேடாவுக்கு, மனசில் உள்ள ப்ராப்ளம் தீர்ந்ததோ இல்லையோ ஆனால் மஸிலில் ப்ராப்ளம் பிடித்துக் கொண்டது.

''அச்சச்சோ... இப்படி கண்டம் விட்டு கண்டம் வந்தவாளுக்கு கழுத்துல கண்டம் பிடிக்கலாமோ... ஏழரை நாட்டுச் சனி, எந்த நாட்டு மனுஷாளையுமே விடாது... அதுவும் உங்களுக்கு கண்ட சனி வேற.... இருங்கோ நீங்க பண்ண பாவம் கழிய 'பாம்' கொண்டு வரச்சொல்றேன்...'' என பரிகார பிரபு தைலம் தேய்ப்பதில் எக்ஸ்பர்ட்டான வைத்தியைக் கூப்பிட, அவரும், பாவம்... ராத்திரி 11 மணி என்று கூடப் பார்க்காமல், தைலமும் கையுமாக வந்து தமக்குத் தெரிந்த (தைல) கை வைத்தியத்தை ஜோராக நடத்தி முடித்த வைத்தார். நெகிழ்ந்து கண்கலங்கினார்கள் ஜப்பான் தம்பதி. ''ஏன், என்ன ஆச்சு?'' என வைத்தி புரியாமல் பார்க்க, பதிலுக்கு வைத்தியின் கையில் ஜப்பானிய யென் (yen) கொடுத்து,' ''என்னவோ எங்களால ஆனது இந்த யென்னை பெரிய மனசு பண்ணி ஏத்துக்கோங்கோ'' என சைகை மொழியிலேயே ஜப்பானிய தம்பதி கண்களில் கண்ணீர் முட்ட வழி அனுப்பினார்கள்.

முதல் நாள் அஸ்ட்ராலஜி ஸெஷன் ஒரு மாதிரியாக நடந்தேறியது. அடுத்த நாள் தெருவில் கத்திய (குரைத்த) நாய்களின் சத்தம் துரத்த, போதாக்குறைக்கு இடைவிடாது காதோரம் இசை அமைத்த கொசுக்களின் ரீங்காரமும் ஒன்று சேர,



தங்களது குட்டித் தூக்கத்தை அப்படியே குறைத்துக் கொண்டு எழுந்தனர் அஸ்ட்ராலஜி (வ)விருந்தினர்கள். ''அடடா, கழுத்து வலி போயே போச்சே... என்ன அதிசயம்..என்ன ஆச்சரியம்... நம்ம ஊர் ரோபோவாலகூட இப்படி ஒரு அதிசயத்தை ஓவர் நைட்ல செய்யவே முடியாது'' என முதல் வேலையாக, தங்களது ஜப்பான் தோழர் தோழிகளுக்கு அடி ஆத்தாடி கணக்காக ஐ.எஸ்.டி. போட்டுத் தெரிவித்தனர் மிஸிக்கேடா தம்பதி.

இரண்டாம் நாள் ஸெஷன் சுட்ச்சுட டிகிரி காப்பியோடு ஆரம்பமானது. ''உங்க கைல மொத்தமா இருக்கற 10 விரல்கள்ல ஒரு விரலை மட்டும் போனா போறதுன்னு விட்டுட்டு சட்டுபுட்டுன்னு இந்த நவரத்ன மோதிரங்களைப் போட்டுக்கோங்கோ... நல்ல ஹோரரை முடியறதுக்குள்ள போட்டுக்கோங்கோ... ஆஹா... அம்சமா இருக்கு போங்கோ... நவாம்சமும் நன்னா ஜாதகத்துல ஜொலிக்கப் போறது'' என பரிகார பிரபு தம் காலில் அரைத்தூக்கத்தில் 'தொப்' என விழுந்த தம்பதியை ஆசிர்வதித்தார்.

''யார் ஜாதகத்துல எது ஜொலிக்கப் போறது... உங்காத்து ஜானகி மாமி காதுல லேட்டஸ்ட் டிஸைன்ல இன்னும் கொஞ்சம் வைரத்தோடு ஜொலிக்கப் போறது'' என பக்கத்து வீட்டு பட்டாபி, பட்டாசாக வெடித்தார். ''என்னவோ வோய், ஒரு வருஷமா நானும் பார்த்துண்டு இருக்கேன்.... அஸ்ட்ராலஜி டூரிஸம்ங்கற பேர்ல ஃபாரினர்ஸ்லாம் பாவம் அப்பாவியா உங்காத்து வாசல்ல வந்து நிக்கறா.. நீங்க பண்ற பரிகாரமெல்லாம் அவாளுக்கு வொர்க் அவுட் ஆறதோ இல்லையோ.... வாயே திறக்காம அவாவா அவாளோட ஊரைப் பார்த்துண்டு போயிண்டே இருக்கா'' என பட்டாபி உஸ்புஸ் என புஸ்வாணமாகச் சீறி எழுந்து பரிகார பிரபுவைப் பரிகாசம் செய்தார்.



"நீச்சமா உட்கார்ந்திருக்கிற புதன், உச்சத்துல போய் உட்காரணும்னா, முதல்ல நீங்க பச்சை உணவுகளைத்தான் சாப்பிடணும்"

''நான் எல்லாம் நல்லதுதான் பண்ணிண்டு இருக்கேன். என்கிட்ட வந்துட்டுப் போனப்பறம் எல்லாரும் சுத்த சைவமா மாறிடறா.. அதனால எப்பவும் ஸத் குணத்தோட எப்பவும் நல்லதை மட்டுமே நினைச்சுண்டு இருக்கா... இங்க வந்துட்டுப் போனதுக்கப்பறம் 'விவாகரத்து' செய்யற எண்ணமே அவாளுக்கு வர்றதே இல்லை.. குடும்பத்துல ஒற்றுமை ஜாஸ்தியாகிடுது... அதனால எல்லா நன்மைகளும் அவாளுக்கு நடக்கறது... நம்ம ஊர்லயும் படிச்சுட்டு வேலை இல்லாமல் இருக்கற எத்தனையோ இளைஞர்களுக்கு ஒரு சின்ன வேலை வாய்ப்பு அஸ்ட்ராலஜி டூரிஸம் மூலம் வாங்கித் தர்றேன்...'' என பரிகார பிரபு லிஸ்ட் போட்டுக் கொண்டே போக, அவரது அப்பாயின்ட்மென்ட் கேட்டு வந்த ஈ மெயில் லிஸ்ட் மட்டுமின்றி, பி.பி.ஓ., ஈ.பி.ஓ போல ஜே. பி.ஓ (ஜோசியம் ப்ராசசிங் அவுட்சோர்ஸிங்) டை அப் வைத்து கொள்ளலாமா எனக் கேட்டு வேறு ஏகப்பட்ட ஈ மெயில்கள் குவிந்து கொண்டே இருப்பதாகக் கேள்வி!

சரேலென்று காற்றைக் கிழித்தபடி சீறி வருகின்றன அந்தக் கணைகள்.

எடுப்பதோ, தொடுப்பதோ தெரியாத வேகம். தொய்வறாமல் விழும் அருவியின் புனலைப் போல, அடுத்தடுத்து பாய்ந்து கொண்டே இருக்கின்றன கணைகள்.

இராவணன் அயர்ந்து போனான்.

'என்ன வேகம்? எவ்வளவு லாவகம்? எத்தனை வலிமை? எவ்வளவு துல்லியம்? இவன் மனிதன்தானா? இவ்வளவு ஆற்றலுடன் ஒரு மனிதனால் போர் புரிய முடியுமா? அதுவும் என்னை எதிர்கொள்ள முடியுமா?'

திசைகளையெல்லாம் கலங்க வைத்த அசுர வேந்தனான இராவணனே மலைத்துப் போகும் அளவுக்கு, இலக்குவனின் கணைகள் சீறிப் பாய்கின்றன. அவனுக்குத் துணையாக அனுமன், சுக்ரீவன், அங்கதன்.. உள்ளிட்ட வானர வீரர்கள் போரிட்டுக் கொண்டிருக்கிறார்கள்.

இருபுறத்திலும் வீரர்கள் வீழ்ந்து கொண்டே இருக்கிறார்கள்.



சொன்னது நீதானே?

கே.ஆர். ஸ்ரீனிவாஸ ராகவன்


அதனால் உண்டான மரண ஓலமும், போர்க் கூச்சலும் திசைகளை அதிர வைக்கின்றன.

அந்தப் பேரொலியாலும், இவ்வளவு அழிவுக்கும் காரணமானவன் எதிரே இருக்கிறான் என்கிற சினத்தாலும் மட்டுமல்ல; 'மாமன்னன் ஜனகனின் மகள்; சக்கரவர்த்தி தசரதனின் மருமகள்; அன்பே வடிவான ஸ்ரீராமனின் தேவி... அப்படிப்பட்ட பிராட்டி, அசோக வனத்தில், துன்புறக் காரணமானவன் இவன்தான்!' என்று பொங்கிய சீற்றத்தாலும் எரிமலையாய் இருந்தான் இலக்குவன்.

அதுதான் இலக்குவனின் கணைவீச்சில் கனலாகப் பொரிந்து கொண்டிருந்தது. அதை உணர்ந்து கொண்டான் இராவணன்.

'சாதாரண அஸ்திரங்களும், ஆயுதங்களும் மற்றவர்களை வீழ்த்தப் பயன்படலாம். இவனுக்கு அவையெல்லாம் பயன்படா. நாம் பெற்ற திவ்யாஸ்திரங்களே இப்போது உதவும்' என்று தீர்மானித்தான்.

அசுர குலத்தில் பிறந்த போதிலும், தர்மத்தில் வழுவாதவனும், நீதி நூல்களில் தேர்ச்சி மிக்கவனும், தூய குணங்களைக் கொண்டவனுமான விபீஷணன், இராவணனின் முக மாறுதலைக் கண்டான்.



அதை உணர்த்துவது போல அமைந்தது, அடுத்து அவன் பேசிய பேச்சு!

''தம்பி, இராவணன் சினங்கொண்டு விட்டான். அவனுடைய சினத்தை எதிர்கொள்ள முடியாமல் தேவர்களே நடுங்கிப் போவார்கள். சூரியனையும் சுட்டெரிக்கும் ஆற்றல் கொண்டது அவனது சினம். தன்னுடைய முழுப் பலத்தையும் அவன் பிரயோகிப்பான்...''

அவன் சொல்லிக் கொண்டிருக்கும் போதே, சரேலென்று பாய்ந்து வந்தது இராவணன் அனுப்பிய கணை. அதைக் கண்ட விபீஷணன் அலறினான்:

''லக்ஷ்மணா! மோகப்படையைச் செலுத்தியிருக்கிறான் இராவணன். அதை வீழ்த்தா விட்டால், நாம் அனைவரும் வீழ்ந்து போவது நிச்சயம். ஆழிப்படையை விரைவாய்ச் செலுத்து. அதைத் தவிர, வேறு எதனாலும் மோகப்படையை வீழ்த்த முடியாது.''

மறுகணம், இலக்குவனின் வில்லிலிருந்து சீறிக் கிளம்பியது ஆழிப்படை. பாய்ந்து வந்து கொண்டிருந்த மோகப் படையைச் சிதறடித்தது.

அதைக் கவனித்த இராவணன் அதிர்ந்தான். அடுத்தடுத்து, வெவ்வேறு அஸ்திரங்கள் அவனால் செலுத்தப்படுகின்றன. என்றாலும், அனைத்தையும் முறியடிக்கின்றன இலக்குவனின் அம்புகள்.

'அடேயப்பா, அசாதாரணமான ஆற்றல் இது! இதை எதிர்கொள்வது அனைவராலும் இயலாது. கயிலையை அசைத்த நான்; இந்திரனைச் சிறைப்பிடித்த என்

வீர மைந்தன் இந்திரஜித்; பஞ்சவடியில் இருந்த என் சகோதரர்களான கர, துஷணர்களை வீழ்த்திய இவன் தமையனான ராமன், ஆகிய நாங்கள் மூவர் மட்டுமே இவனை எதிர்கொள்ள முடியும். வேறு எவராலும் இயலாது.'

'மனுஷரைக் கண்டு அஞ்சினாய்' என்று, விபீஷணனைக் கண்டு எள்ளி நகையாடிய அசுர வேந்தன், இப்போது ஆச்சர்யத்தில் அயர்ந்து நிற்கிறான்.

தலைக்குள் ஏறி நர்த்தனம் ஆடிய ஆணவம், சற்றே அடங்கி யோசிக்கிறது.

'என்னுடைய ஆற்றலை அனாயாசமாக எதிர்கொள்ளும் இவனைப் பார்க்கும்

விழுந்து கிடக்கும் ஒவ்வொரு
இறகிலும் ஒட்டிக்கொண்டிருக்கிறது
ஏதோவோர் பறவையின் வலி!

- க.ஆனந்த்



போது, ஆச்சர்யம் பொங்குகிறது; கோபம் பீறிடுகிறது. தன்னை எதிர்க்கும் வீரனின் ஆற்றலைக் கண்டு மகிழலாம்; பாராட்டலாம்; வியக்கலாம். அதற்காகப் போரிடாமல் விடமுடியுமா என்ன?

இலக்குவனை வெல்வது கடினம்; பிறகெப்படி கொல்வது? அவனுடைய ஆற்றலைவிட ஆபத்து, அவனருகே நிற்கும் விபீஷணன். அசுரகுலத்தில் பிறந்த அந்த கோடரிக்காம்பு, நம் எதிரிக்கே துணைபோகிறது. நாம் செலுத்தும் கணைகள் எவை; அவற்றை எதிர்கொள்வது எப்படி என்று இலக்குவனுக்குச் சொல்லிக் கொடுப்பவன் அவன்தான். முதலில் அவனை வீழ்த்த வேண்டும்.'

சிந்தனை ஓடிய வேகத்தில், வேலை எடுத்தான் ராவணன். அதைப் பார்த்த உடனேயே புரிந்தது விபீஷணனுக்கு, 'அது தனக்கானது' என்று!

காரணம், அது மயன் அளித்த மகட்கொடை!

தன்னுடைய மகள் மண்டோதரியை, இராவணனுக்குத் திருமணம் செய்தளித்த போது, மயன் அளித்த திருமணப் பரிசு அது! ஆபத்தான சமயத்தில் தன் மருமகனின் உயிரைக் காக்கட்டும் என்றெண்ணி, மயன் அளித்திருந்த வேலை எடுத்து வீசினான் இராவணன்.

''இலக்குவ, இந்த வேல் மயன் அளித்தது. வேறு எந்தப் படையாலும் இதை எதிர்கொள்ள முடியாது. என் வாழ்க்கை இத்தோடு முடிந்தது.''

விபீஷணன் சொன்னான். அதைக் கேட்ட இலக்குவன் மட்டுமல்ல; அனைவருமே கலங்கிப் போனார்கள். 'விபீஷணனை எப்படிக் காப்பது?' என்றும், 'எப்படியும் காப்பாற்றியே ஆகவேண்டும்' என்றும் தீர்மானித்தார்கள். என்றாலும், அதற்கான வழி தெரியாமல் தவித்தார்கள்.

ஆனால், இலக்குவனுக்கு எந்தக் குழப்பமுமில்லை.

'அந்த வேலுக்கு ஒரு இலக்கு நிச்சயம். இருக்கட்டும்; அந்த இலக்காய் நான் இருக்கிறேன். அந்த வேல் என்னை வீழ்த்தி விட்டுப் போகட்டும். அதனால் விபீஷணன் காப்பாற்றப்படுவான்.'

நினைத்த மாத்திரத்தில், பறந்து வந்து கொண்டிருந்த வேலை நோக்கி ஓடினான் இலக்குவன். அவன் ஓடுவதன் காரணத்தைப் புரிந்து கொண்ட அனுமன், முன்னே பாய்ந்தான்; அவனைத் தொடர்ந்து சுக்ரீவனும், அங்கதனும் ஓடினார்கள். ஆனால், இலக்குவனைத் தடுக்க முடியவில்லை.

'லக்ஷ்மணா, காடு செல்லும் உனக்கு ராமனே தசரதர்; சீதையே நான்! நீ

தொண்டனாகச் செல்கிறாய்; தம்பியாக அல்ல என்பதை நினைவு வைத்துக் கொள். அவர்கள் வந்தால் நீ வா. இல்லையென்றால், அவர்களுக்கு முன் உயிர் துறந்துவிடு.

இராமன் தர்மத்திலிருந்து பிறழமாட்டான். அவன் நினைப்புதான், செயல்தான் தர்மம்; அதிலிருந்து நீயும் பிறழாதே! ராமனின் தர்மம்தான் உனது தர்மம் என்பது, உன் நினைவில் இருக்கட்டும்.'



வனவாசம் புறப்படும்போது, சுமித்திரை சொன்ன வார்த்தைகள் இலக்குவனின் செவியில் ஒலித்தன. அதனாலோ என்னவோ, அவன் வேகம் அபரிமிதமாயிருந்தது. அனுமனும், சுக்ரீவனும் நெருங்குமுன், அது நடந்துவிட்டது...

ஆம்; ராவணன் எறிந்த வேல் தாக்கி வீழ்ந்தான் இலக்குவன்!

அதைக் கண்ட, விபீஷணன் நடுங்கிப் போனான்; அனுமனும், சுக்ரீவனும் அரண்டு போனார்கள்; அங்கதன் பதறினான்; வானரப் படை கதிகலங்கியது; செய்தியறிந்த ஸ்ரீராமன் நிலைகுலைந்தான்.

“ அண்ணா! ‘அடைக்கலம் என்று வந்தவர்களை காக்கும் பொருட்டு உயிரை இழப்பதும் மேலானது. அதுவே என் தர்மம்’ என்று தாங்கள்தானே சொன்னீர்கள். ”

தசகண்ட இராவணன் ஆர்ப்பரித்தான்:

''இனி இலக்குவன் எழப்போவதுமில்லை; அவனைப் பிரிந்து இராமன் வாழப் போவதும் இல்லை. இவர்களுக்காக கடல்கடந்து வந்த வானரங்கள் மாண்டதுதான் கண்ட பயன். மைதிலி இனி எனக்கே உரியவள்!''

ஆரவாரமாகப் பேசியபடியே அரண்மனைக்குத் திரும்பினான் இராவணன்.

அப்படிப்பட்ட சூழலிலும் தெளிவாகச் சொன்னான் கரடிராஜனான ஜாம்பவான்:

''வாயு மைந்தா! வடக்கே உள்ள சஞ்சீவி மலையில் விசல்ய கரணி, சந்தான கரணி, அமிர்த சஞ்சீவி... ஆகிய மூலிகைகள் உள்ளன. இறந்தவர்களையும் உயிர்ப்பிக்கக் கூடிய அந்த மூலிகைகளைக் கொண்டு வா. இளையவரை எழுப்பிவிடலாம்.''

மறுகணம், காற்றில் எழும்பிய வாயு குமாரன் சஞ்சீவி மலையையே சுமந்து வந்தான். அந்த மூலிகைகள் இலக்குவனை உயிர்ப்பித்தன.

கண்விழித்து எழுந்த இலக்குவனிடம் கேட்டான் இராமன்:

''தம்பி, என்ன காரியம் செய்துவிட்டாய்? நீ இன்றி நான் ஏது?''

கண்கலங்கப் பேசிய இராமனிடம், பணிவு ததும்பச் சொன்னான் இலக்குவன்:


''அண்ணா! 'அடைக்கலம் என்று வந்தவர்களைக் காக்கும் பொருட்டு, உயிரை இழப்பதும் மேலானது. அதுவே என் தர்மம்' என்று தாங்கள் தானே சொன்னீர்கள். உங்கள் தர்மத்தைக் காப்பதும் என் கடமைதானே?!''

அதற்குமேல் இலக்குவனால் பேச முடியவில்லை. இராமனின் முரட்டு அணைப்புக்குள் புதைந்திருந்தான் அவன்.

கண்ணீர் பெருகத் தழுவி நின்ற அந்த அபூர்வ சகோதரர்களைக் கண்டு மனம் நெகிழ்ந்த வானர வீரர்கள், 'ஜெய் ஸ்ரீராம்' என்று பேரொலி எழுப்பினார்கள். அதைக் கேட்ட இராவணனுக்கு, மார்பு துடித்தது; அசோகவனத்தில் இருந்த சீதைக்கு, இடதுகண் துடித்தது. ●

"என்னை ஓவர் ஆக்ட் செய்ய வேண்டாம்னு சொல்றீங்க... அப்படித்தானே...?" என சிவாஜி நேரடியாகவே கேட்டுவிட்டார். பிறகு பரதனின் எண்ணப்படி நடித்துக் கொடுத்து ஆச்சர்யப்படுத்தினார்.

சிவாஜி இப்படியென்றால், கமல் வேறொரு வகையில் ஆச்சர்யம் தந்தார். 'தேவர் மகன்' படத்தில் இடம் பெறும்



UNDERWATER அட்வெஞ்சர்

மிக பிரமாண்டமான தேர்த் திருவிழா காட்சி. அந்தக் காட்சிக்காக இரண்டாயிரம் பேர் கொண்ட மக்கள் கூட்டம் வேண்டும் என்று டைரக்டர் பரதனும், ஒளிப்பதிவாளர் பி.சி.யும் சொல்லியிருந்தார்கள். திருவிழாக் காட்சியை எடுக்க வேண்டிய தினத்தன்று காலையில், கமல் ஸ்பாட்டுக்கு வந்தார்.

"இங்கே ஆயிரம்பேர்கூட இருக்க மாட்டாங்க போல இருக்கே. இன்னும் இரண்டு மணி நேரத்தில் இரண்டாயிரம் பேரைத் திரட்டிக்கொண்டு வர முடியுமா?" என்று புரொடக்ஷன் மானேஜரைக் கேட்டார். அவர் கையைப் பிசைந்துகொண்டு நிற்க, "இன்னிக்கு ஷூட்டிங் வேணாம்! நாளைக்குக் காலையில நீங்கள் என்ன செய்வீர்களோ தெரியாது! இரண்டாயிரம் பேர் இங்கே இருக்கணும்" என்று கண்டிப்பான குரலில் சொல்லிவிட்டு, புறப்பட்டுப் போய்விட்டார்.

படத்தின் தயாரிப்பாளர் என்ற முறையில் கமல் நினைத்திருந்தால், 'இருக்கிறவர்களை வைத்து அட்ஜஸ்ட் செய்து கொள்ளலாம்' என்று சொல்லி இருக்கலாம். ஆனால், முதல் நாள் வந்தவர்களுக்கு, ஷூட்டிங் நடக்காது போனாலும் பணத்தைக் கொடுத்து அனுப்பிவிட்டு, மறுநாள் இன்னும் அதிக எண்ணிக்கையில் மக்களைத் திரட்டி, காட்சியை தத்ரூபமாக எடுக்க ஏற்பாடு செய்தார். எதைச் செய்

ஸ்டார்ட்... கேமரா... ஆனந்த்!



தாலும் சிறப்பாகச் செய்யும் மனிதர் அவர் என்பதை உணர்த்திய சம்பவம் இது.

'தேவர் மகன்' படத்தில் ஏரி உடைந்து, பல குடிசைகள் தண்ணீரில் மூழ்கிவிடுவதாக ஒரு காட்சி இடம் பெறும். ஒரு ஏரியில் நிஜமான வெள்ளக் காடு போலவே செட் போட்டுப் படம் பிடித்தோம். இயக்குநர் பரதன் நல்ல ஓவியர். சினிமாவில் ஆர்ட் டைரக்டராகவும் இருந்திருக்கிறார். படத்துக்கு அஷோக் என்ற ஆர்ட் டைரக்டர் இருந்தாலும், ஏரியை ஒட்டியே ஒரு கூடாரம் அடித்து, அங்கே இரவு பகலாகத் தங்கி, தாமே மேற்பார்வையிட்டு, ஐம்பது ஆட்களை வைத்து வேலை வாங்கி செட் அமைத்தார் பரதன். அவரது டெடிகேஷனைப் பார்த்து வியந்து போனேன்.

இன்னொரு சுவாரசியமான விஷயம். அந்தக் காட்சியில் திடீரென்று தண்ணீர் வெள்ளமாகப் பெருக்கெடுத்து வரச் செய்வதற்காக, ஐ.ஐ.டி. பேராசிரியர் ஒருவரிடம் ஆலோசனை கேட்டு, ஒரு பிரமாண்டமான தொட்டியைக் கட்டி, அதில் தண்ணீரை நிரப்பி, சரியான தருணத்தில் அதிலிருந்து தண்ணீரை வெளியேறச் செய்து, அந்தக் காட்சி மிகவும் ரியலிஸ்டிக்காக இருக்கும்படி செய்தார் கமல்.



நான்கு படங்களில் ஒரு டெக்னீஷியனுக்குக் கிடைக்கும் அனுபவம், மணிரத்னத்துடன் ஒரு படத்தில் வொர்க் பண்ணினாலே கிடைத்துவிடும். எனக்கு அப்படிப்பட்ட அனுபவம் 'திருடா திருடா' படத்தில் கிடைத்தது.

படத்துக்கு ஒளிப்பதிவு பி.சி.சார், கர்நாடகாவில் மலைப் பகுதியில், காட்டுக்குள் சக்லேஸ்வர் என்ற ஏரியாவில், ஓடுகிற ரயிலின் கூரை மீது ஒரு சண்டைக் காட்சி எடுத்தோம். அந்த ரயில் எங்களையும், கிரேன், கேமரா போன்ற உபகரணங்கள், சாப்பாடு, தண்ணீர் என்று சகலத்தையும் ஏற்றிக் கொண்டு காலை ஆறு மணிக்குப் புறப்பட்டு சுமார் 40 கி.மீ தூரம் உள்ளே போய் விடும்.

ரயிலுக்கு எக்கச்சக்க கட்டணம் என்பதால் அரை மணி நேரம்கூட வீணாக்காமல்

வேலை நடக்கும். ஒரு கட்டத்தில் சாப்பிடுவதற்காகக்கூட நேரம் செலவழிக்க வேண்டாம் என முடிவு செய்து, மெஸ் ஊழியர்கள், தட்டுகளில் வேகவைத்த முட்டை, பிரெட், சாண்ட்விச் போன்றவற்றை எடுத்துக்கொண்டு வலம் வர, ஆளாளுக்குத் தேவையானதை எடுத்துச் சாப்பிட்டபடியே வேலையைப் பார்க்க ஆரம்பித்தோம். இப்படி ஒன்பது நாட்கள் காட்டுக்குள் அந்த சண்டைக் காட்சியைப் படம் பிடித்தோம். திரையில் அந்தக் காட்சியைப் பார்க்கிறபோது, நாங்கள் பட்ட கஷ்டத்துக்கு நல்ல ரிசல்ட் கிடைத்திருந்தது.



நாலடி ஆழ தண்ணீரில் நிற்கும் நண்பர்களை, 360° கோணத்தில் ட்ராலி ஷாட்டில் தண்ணீரின் மேல் படம் பிடிக்க வேண்டும். எப்படி?

இன்னொரு காட்சியில், ஓர் அருவியில் பிரஷாந்தும், ஆனந்தும் மார்பளவு தண்ணீரில் குளித்துக் கொண்டிருப்பார்கள். ஆனந்த், ஹீராவைக் காதலிக்கிறார் என்பது தெரியாமலேயே, பிரஷாந்த் தான் ஹீராவைக் காதலிக்கும் விஷயத்தை ஆனந்திடம் சொல்வதாக வசனம். இந்தக் காட்சியை பிரஷாந்த், ஆனந்த் இருவரையும் சுற்றி டிராலி போட்டு, 360 டிகிரி கோணத்தில் கேமரா சுற்றி வந்து அவர்களைப் படம் பிடிக்க வேண்டும் என்று மணி ஸாரும், பி.சி.ஸாரும் சொன்னார்கள்.


பி.சி.யின் முதல் அஸிஸ்டன்டான எனக்கு, 'சும்மா நம்மைக் கலாய்க்க இப்படி சொல்கிறார்களா?' என்ற சந்தேகமே வந்துவிட்டது. காரணம், பிரஷாந்தும், ஆனந்தும் நாலடி ஆழ தண்ணீரில் நிற்கிறார்கள். அவர்களை 360 டிகிரி கோணத்தில் டிராலி ஷாட்டில் படம் பிடிக்க வேண்டும் என்றால், தண்ணீருக்குள்ளே தரைமட்டத்தில் தண்டவாளம் போன்ற வட்ட வடிவ டிராக்கைப் பொருத்த வேண்டும். அடுத்து அதன் மீது நகரும் டிராலியையும், டிராலியின் மீது கேமராவுக்கான ஸ்டேண்டையும் நிறுத்தி கேமராவைப் பொருத்த வேண்டும். இத்தனை முன்னேற்பாடுகளுக்கும் பிறகு, டைரக்டர் 'ஸ்டார்ட்' சொன்னவுடன், கேமரா நகர வேண்டும். தானாக எப்படி கேமரா நகரும்? ஒரு உதவியாளர் தண்ணீருக்குள் மூச்சுப் பிடித்துக் கொண்டு மூழ்கி, டிராலியை ஒரே சீராகத் தள்ள வேண்டும்.

ஒருவரால் அதிகபட்சம் ஒன்று அல்லது ஒன்றரை நிமிடத்துக்கு தண்ணீருக்குள் தம் கட்ட முடியும். அதற்குள் இன்னொரு உதவியாளர் ஸ்டேண்டைத் தள்ளுபவருடைய பொசிஷனை எடுத்துக் கொள்ள வேண்டும்.

இப்படி கேமரா முழு வட்டமடித்து முடிக்கும்வரை ஆள் மாறி, மாறி தண்ணீருக்குள் மூழ்கித் தள்ளிக்கொண்டே இருக்க வேண்டும். ஒரு நிமிடம் இந்தக் காட்சி எடுக்கப்பட்ட முறையைக் கற்பனை செய்து பார்த்தால், தண்ணீருக்கடியில் நாங்கள் முயன்று பார்த்த அட்வென்ச்சர் அது என்பது புரியும்.

(ஆக்ஷன் தொடரும்)

எழுத்து வடிவம்: **எஸ். சந்திரமௌலி**



வண்டி நிக்க... விசிலா? பிரேக்கா?
''என்னங்க நமக்கு கல்யாணம் ஆகி 25 வருடம் ஓடிப்போனதே தெரியலைங்க!''
''ம்..ம்.. கொடுத்துவெச்சது அது ஓடிப்போயிடுச்சு!''
- எஸ்.கோபாலன்
''நம் மன்னர் ஏன் கோபத்தின் எல்லையில் இருக்கிறார்?''
''அவரின் வீரத்தைப் புகழ்ந்து புலவர் பாடிய பாடலை இந்த ஆண்டின் சிறந்த பொய்யாக தேர்ந்தெடுத்து மெசபடோமியா நாட்டில் பரிசு அறிவித்துள்ளார்களாம்..''
- சாயம் ராஜாராமன்
''யோவ்! என்னய்யா நான் விசில் அடிச்சும் வண்டி நிக்காம போகுது?''
''அடப்போய்யா! நான் பிரேக் அடிச்சே வண்டி நிக்கலே. நீ விசில் அடிச்சா நிக்கப் போகுது!''
- எஸ்.திருமூர்த்தி
''நீ ஏறி ரெண்டு ஸ்டாப் கழிஞ்சிடுச்சுன்னு சொல்றே. இன்னும் ஏன் டிக்கட் எடுக்கலே?''
''காசு கம்மியாதான் இருக்கு. இன்னும் ரெண்டு ஸ்டாப் தள்ளி டிக்கட் எடுக்கிறேன்!''
- கு.அருணாசலம்

கிரேஸி மோகன்



முனிவர்கள் கூடி மௌனம் காத்திட
தனி ஆவர்த்தனம் நந்தி முழங்கிட
பனி மலை வாசன் பார்வதி யுடனிம்
மனிதனில் தாண்டவம் ஆட வருகவே...

முகார விந்தம் முறுவல் பூத்திட
அகார, உகார, மகார அம்பிகை
அகோர மூர்த்தியை அணைத்து என்மன
விஹாரில் தாண்டவம் ஆட வருகவே...

துந்துபி முழங்க டமருகம் ஒலிக்க
கந்தன் கணபதி கைகட்டி நிற்க
எந்தையும் தாயும் மகிழ்ந்து குலாவியென்
சிந்தையில் தாண்டவம் ஆட வருகவே...

மாலவன் சங்க நாதம் ஊதிட
நாலு முகன் நல்வேதம் ஓதிட
ஞால அன்னையும் அப்பனும் எந்தன்
மூளையில் தாண்டவம் ஆட வருகவே...

யாழில் பாரதி ஏழிசை சுரக்க
வாழிய கோஷம் வைதேஹி போட
ஊழி முதல்வனும் உமையும் எந்தன்
தோளில் தாண்டவம் ஆட வருகவே...

பாக்கு வெற்றிலை போன்று இணைந்த
தேக்கு மேனியரும் தளிர் இடையாளும்
பாக்கள் பூக்களாய்ப் புலர்ந்திட எந்தன்
வாக்கில் தாண்டவம் ஆட வருகவே...



ஆட வருகவே...

பாஸியும் நீருமாய்ப் பிணைந்த இருவரும்
தூசி தோஷங்கள் தொல்லை இராது
வாசிவாசியென சுவாசிக்க எந்தன்
நாசியில் தாண்டவம் ஆட வருகவே...

தென்னாடுடையான் தன்தேவியுடன்
பெண்ணாடுடலொடு பாவியேன் நானுனை
மன்றாடுதலால் மனமிசைந்(து) எந்தன்
முன்னால் தாண்டவம் ஆட வருகவே...

வேத புராண இதிகாசங்கள்
பாதச் சிலம்பில் பதிந்திடவே திரு
வாதிரையான் தன் வாமியுடன் என்
காதில் தாண்டவம் ஆட வருகவே...

வாடிய பயிரென் வாழ்க்கையிலே நீர்
ஆடிய பாதராய் அழகுமையாளை
கூடிய வண்ணம் சேர்ந்தென் முன்னால்
ஜோடியாய் தாண்டவம் ஆட வருகவே...

மிஷன் 2012

அண்மையில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட தம் தொகுதியின் பகுதிகளுக்குச் சென்றார், அந்த சமாஜ்வாதி கட்சியின் எம்.பி., மாட்டு வண்டியில் பயணம் செய்த அந்த பெண் எம்.பி., இன்னும் தண்ணீர் வடியாத சில பகுதிகளுக்குப் படகிலும் சென்று, வெள்ளத்தால் மக்களுக்கு ஏற்பட்ட பாதிப்புகளைப் பார்த்துக் கண்கலங்கிப் போய்விட்டார். உடனடியாக அனைத்து நிவாரண நடவடிக்கைகளையும் எடுப்பதாக உறுதியளித்தவர், பத்திரிகையாளர்களைச் சந்தித்தபோது, ''இயற்கை இந்த ஏழை மக்களிடம் எவ்வளவு கொடூர



மாக நடந்துகொண்டிருக்கிறது?'' என்று தத்துவ மழை பொழிந்தார். அவர் நடிகை ஜெயப்பிரதாதான்!

(பாதிக்கப்பட்ட மக்கள் உங்க பேச்சை நடிப்புன்னு நெனைச்சிடலையே மேடம்?)

போன வருடம் தம் பிறந்த நாளுக்காக கட்சியின் பெரிய புள்ளிகளுக்கு மாயாவதி இலக்கு நிர்ணயிக்க, ஆனாளுக்கு வசூல் ராஜா ஆனார்கள். ஒரு பி.எஸ்.பி. எம்.எல்.ஏ. பணம் தர மறுத்த ஒரு என்ஜினீயரைக் கொலை செய்ததாகக் கூட குற்றச்சாட்டு எழுந்தது. இந்தத் தடவை, ''நோ வசூல் வேட்டை!'' என்று கண்டிப்பாகச் சொல்லிவிட்டாராம் மாயாவதி. அதற்குப் பதிலாக கட்சியின் உறுப்பினர் கட்டணத்தை 20 ரூபாயிலிருந்து 40 ரூபாயாக உயர்த்தி, அடுத்த மூன்று மாதங்களுக்கு உறுப்பினர் சேர்க்கைக்கு டார்கெட் நிர்ணயித்துவிட்டாராம்.

(மாயாஜி! உங்களுக்கு உடன் பிறவா சகோதரி யாரும் இல்லீங்களா?)



போலி அடையாள அட்டையை வைத்துக் கொண்டு, அரசாங்கத்தை ஏமாற்றி முதியோர் பென்ஷன் வாங்கிக் கொண்டிருப்பதாகச் சொல்லி, உ.பி.மாநிலம், சிதாபூர் மாவட்டத்தில் ஐயாயிரம் பேர் மீது எஃப்.ஐ.ஆர். போடப்பட்டுள்ளது. மெயின்புரி மாவட்டத்தில் இருநூறு பேர் மீது எஃப்.ஐ.ஆர். அதேபோல அரசாங்கம் மாணவ, மாணவிகளுக்கு அளிக்கும் உதவித் தொகையிலும் போலிகள் புகுந்திருக்கிறார்கள். அண்மையில் இவர்கள் மீது உடனடியாக விசாரணை நடத்தி கடும் தண்டனை வழங்க முதலமைச்சர் மாயாவதி உத்தரவிட்டிருக்கிறார்.

(அதிகாரிகள், போலின்னு தெரிஞ்சே

கொடுத்தாங்களா? உண்மையைச் சரியா தெரிஞ்சுக்காம கொடுத்தாங்களா?)

ஒரு தலித் பெண்மணியை அவரது கணவரே விற்க முயல, அதை ஒரு ஆங்கில டீ.வி. சேனல் ரகசியமாகப் படம் பிடித்து, ஒளிபரப்பி, உ.பி.யில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தி விட்டது. தொடர்ந்து எதிர்க்கட்சிகளும், மீடியாவும் மாயாவதியிடம் இதுபற்றிக் கேள்வி எழுப்ப, அதிரடியாக நடவடிக்கை எடுத்தார். இப்போது அந்த விஷயத்தை வெளிச்சத்துக்குக் கொண்டுவந்த டீ.வி. சேனலின் நிருபர் மீது தலித்கள் மீதான வன்முறைக்கு எதிரான சட்டம் பாய்ந்திருக்கிறது.

(சுப்ரீம் கோர்ட்டுக்கே சவால் விடும் சூப்பர் கோர்ட்டாச்சே அவங்க!)

உ.பி.யில் அடுத்து ஆட்சியைப் பிடிக்க ராகுல் காந்தி தீட்டி இருக்கும் திட்டம் 'மிஷன் 2012'. கட்சிக்காரர்களுக்கு, ''கிராமம் கிராமமாகச் சென்று மக்களைச் சந்தியுங்கள்; உள்ளூர்ப் பிரச்னைகளைக் கையில் எடுத்துக் கொண்டு போராட்டம் நடத்துங்கள். மாயாவதியின் மக்கள் விரோத ஆட்சியின் பாதிப்புகளை பாமர மக்களுக்கு எடுத்துச் சொல்லிப் புரிய வையுங்கள். அதற்கும் மேலாக கட்சிக்காரர்கள், ஊரில் உள்ள மக்களின் குடும்பத்தில் ஒரு நல்லது, கெட்டது என்றால் தவறாமல் கலந்துகொள்ளுங்கள்'' என்று அறிவுறுத்தி இருக்கிறார்.

(மாநில காங்கிரஸ்காரங்களுக்கு நாக்கு நீளுதே! அதையும் கொஞ்சம் அடக்கி வையுங்க பாஸ்!)

''**நா**ங்கள் மீண்டும் ஆட்சிக்கு வந்ததும், ஊர் முழுக்க மாயாவதி வைத்த சிலைகளை புல்டோசர் கொண்டு தகர்த்து விடுவோம்; மக்கள் பணத்தை இப்படியா வீணடிப்பது?'' என்று காரசாரமாக விமர்சித்திருக்கிறார் முலாயம் சிங்.

(இடிக்கறதுக்கும் மக்கள் பணத்தைத் தான் செலவு பண்ணுவீங்களா முலாயம்ஜி?)

- பரத்ராம்






முன்னவனே நீ
முன் நின்றால்...
S.Bhushan
வாரண


டியாதது ஒன்றில்லை
ஆதலால் அதிவேகமதாகவே
மூகவா துணைவருவாய்
அருள்வாய் தயவாய்...



* எஸ்.பூஷன்

என் இலக்கு கடவுள்தான்!

முன்பக்கத்தில் இடம் பெற்றிருக்கும் முதற் கடவுளின் கோட்டோவியங்களை வரைந்தவர் ஓவியர் எஸ்.பூஷன். 75 வயதாகும் இவர் 15 வயதில் சிவகாசி பட்டாசுகளில் இருக்கும் சாமி படங்களைப் பார்த்து வரையத் தொடங்கியவர். தீராத இவரின் ஓவிய தாகம், கடற்கரை உழைப்பாளர் சிலையைச் செதுக்கிய சிற்பி ராய் சௌத்ரியின் மாணவராக்கியது. சுதேசமித்திரன், கல்கி, ஆனந்தவிகடன், கலைமகள், அமுதசுரபி, தினமணிகதிர் என பல்வேறு இதழ்களில் கொடிகட்டிய பூஷனின் உரையாடலிலிருந்து...

விநாயகரின் உருவமே மாடர்ன்தான். இதை இன்னும் எதற்கு மாடர்ன் விஷுவலுக்கு மாத்தணும்? இப்படியான படங்களால பக்தி வருமா?

''நேரில் பார்த்ததுமாதிரி, எங்களில் ஒருவராக வரைவது தப்பில்லை. இதுவரை 100 மாடல்களில் விநாயகரை வரைந்திருக்கிறேன். பக்தி என்பது அவரவர் மனநிலை சார்ந்தது. கண்ணாடி உடைந்த, சட்டம் உடைந்த சாமி படத்தை வெளியே வீசிடும்போது அது வெறும் படம்... அவ்வளவுதான். வீட்டுக்குள் வந்துவிட்டால் அது அவனைக் காக்கும் கடவுள்.''

நீங்கள் வரையும் ஓவியத்துக்கு ஆதார சக்தி எது?

''என்னை வரைய வைப்பதே அந்த சக்திதான். ஓவியங்களை வரைவது நானில்லை. நான் வெறும் காரணி. இதை உணர்ந்தே சொல்கிறேன்.''

ஐம்புலன்களும் ஒரு செயலில் ஐக்கியமாகும்போது அது இறையுணர் தருணமாக அமையும் என்கிறார்கள். ஓவியத்தின்போது உங்களுக்கு இம்மாதிரி அனுபவம் சாத்தியப்பட்டுள்ளதா?

''நிச்சயமாக! அதை வார்த்தையால் விவரிக்க இயலாது. நான் மட்டுமல்ல கர்மயோகத்தோடு (அந்தத் தெளிவான புரிதலில்!) சமையலில் ஈடுபடும் ஒரு பெண்ணுக்குக் கூட அந்த இறையுணர்வு தருணம் சாத்தியமே.''

கடவுள் பற்றி...?

''என் கனவில் வருவது பெரும்பாலும் விநாயகரே! மேற்கு மாம்பலத்தில் 1954ல் வறுமையில், விரக்தியில் இருந்தபோது கனவுக்கும் விழிப்புக்குமான இடைப்பட்ட நிலையில் பராசக்தி தரிசனம் எனக்குக் கிடைத்தது. ஏதோ ஒரு வெளிச்ச சக்தி என்னுள் பாய்ந்தது. பரவசத்தில், சலனமின்றி அழுதபடியே அமர்ந்திருந்தேன். அன்றிலிருந்து எனக்கும் ஓவியத்துக்கும் ஏறுமுகம்தான்.''




உங்கள் இலக்கு?

''நான் கடவுளைப் பார்த்துவிட்டேன். இனி கடவுளை அடைவது தான் என் இலக்கு.''


- அமிர்தா

நடிப்புன்னா எனக்கு உயிர்!

அரூர்.மு.மதிவாணன்



பி.பாலாஜி கணேஷ்






அசோகவனம் இன்று...

வியாபார விஷயமாக இலங்கைக்குச் செல்லும் சூழல் அமைந்து விமானத்தில் அமர்ந்தபோது, ஏனோ புராண காலத்து இலங்கை அதிபதி இலங்கேசுவரன் நினைவில் வந்தான். அவனும்கூட விமானங்களைப் பயன்படுத்தும் அளவுக்கு அறிவு பெற்றிருந்தான். ஆனால், ஒரு வித்தியாசம்! அவனுடைய விமானங்கள் கடத்தல் பணியில் மாத்திரமே பயன்படுத்தப்பட்டிருந்தன.

இராமாயணத்தின் பெரும்பகுதி இலங்கையில்தானே நிகழ்வுற்றது என்ற நினைவினூடாகவே, அந்த நாட்டில் என்னுடைய பணிகள் முடிவுற்றதும், 'இராமாயணம் தொடர்பான எச்சங்கள் அங்கே இன்னும் இருக்கக் கூடுமா? அப்படியிருந்தால் அவற்றைப் பார்வையிட வேண்டும்' என்று எண்ணிக் கொண்டோம்.

விமானத்தில் பயணிக்கும்போது, தமிழ் நாட்டின் பழுப்பு நிறக் கரைகளை விட்டு அகன்று இலங்கையைச் சென்றடைந்ததுமே, திடீரென ஒரு சோலைக்குள் நுழைவது போன்று இருந்தது. இந்தச் செழிப்பு மிக்க நாட்டில் எல்லாவிதமான தட்பவெப்ப நிலைகளையும் இயற்கைக் காட்சிகளையும் காணலாம். தமிழ்நாட்டின் ஐந்து வகை நிலப் பகுதிகளான, நெய்தல், பாலை, மருதம், முல்லை, குறிஞ்சி ஆகியவற்றை இந்தச் சிறிய நாட்டில் பார்க்கலாம். இவற்றில் நமது கொடைக்கானல் போன்ற ஒரு குறிஞ்சி நில நகரம்தான் நுவரஎலியா.



நுவர எலியா நகரம்

இது ஒரு கோடை வாசஸ் தலம். ஆனால், இங்கே நிரந்தரமாக வாழ்பவர்கள்தான் அதிகமானோர். இங்கே உள்ள அசோக வனத்தில்தான் இராவணன் சீதையைச் சிறைவைத்தான் என்று நம்பப்படுகிறது.

கம்பராமாயணம் காட்சிப் படலம், அசோகவனம் இருந்த ஊரின் மரங்களும், கிளைகளும், இலைகளும், அடிமரங்களும், வேர்களும், திரு உயர் சோலைகளும் இராவணனின் தவச் சிறப்பால் பொன்னாலும் மணி

"கோயிலை ஒட்டியவாறு ஓடும் சிற்றாறு சீதையின் பயனுக்காக உருவாக்கப்பட்டது என்று நம்பப்படுகிறது."

இளம் வெயிலில் அந்த ஊரே தங்க நிறத்தில் தகதகத்தது.

சீதை அம்மன் கோயில்

நுவரெலியாவிலிருந்து கிழக்கு திசையில் ஊவா பள்ளத்தாக்கு நோக்கிச் செல்லும் நெடுஞ்சாலையில் இரண்டு கி.மீ தொலைவு சென்றால், அச்சாலையின் ஓரத்திலேயே சீதை அம்மன் கோயிலைக் காணலாம். அடர்ந்த காட்டுப் பகுதி இது. காட்டை ஊடுருவிக்கொண்டு நெடுஞ்சாலை செல்கிறது. இதை ஒட்டினாற்போல் பள்ளத்தில் ஒரு சிற்றாறு ஓடுகிறது. ஆற்றின் மறுபக்கமும் அடர்ந்த காடு. பூக்கள் அடர்ந்த அந்த வனத்தில் அசோக மரங்கள் நிறைந்துள்ளன.

இந்த அசோக மரங்களை இலங்கையில் வேறு எங்கும் காண முடிவதில்லை. சிவப்பு நிறப் பூக்கள் ஒரு குறிப்பிட்ட காலத்தில்தான் இந்த மரங்களில் அடர்த்தியாகப் பூக்குமாம்.

* சிற்றாறு





கட்டுரை, படங்கள் :
தேவமணி ரஃபேல்

யாலும் வேய்ந்தன போன்றிருந்தன என்று கூறுகிறது.

இந்த அழகை நுவர எலியாவில் இன்றும் கூடக் காணலாம். நாம் அங்கு சென்றடைந்ததற்கு முந்தைய நாள் நல்ல மழை பெய்திருந்ததால், தூசும் தும்பும் நீங்கிய நிலையில், செடி கொடிகள், மரங்கள், வீடுகள் எல்லாம் பளபளத்தன. அதிகாலை

சீதை அம்மன் கோயில் ஒரு மாடக் கோயில். தமிழ்நாட்டு மாடக் கோயில்கள் போல் அல்லாது இது மலைச் சரிவுக்கு ஈடு கொடுப்பதற்காக மாடக்கோயில் வடிவில் உருவாகியிருக்கிறது. சிற்றாற்றின் கரையிலிருந்து தூண்களை நெடுஞ்சாலையின் மட்டம் வரை நிலைநிறுத்தி இரண்டு

தளங்களில் கோயிலை உருவாக்கியிருக்கிறார்கள்.

முதல் தளத்தில் உள்ள திருமுன்களில், இராமர், லட்சுமணன், சீதை, அநுமன் ஆகியோரின் இறை உருவங்கள் பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ளன. இந்தத் தளத்திலிருந்து அடித் தளத்துக்குச் செல்லப் படிகள் உள்ளன. அங்கு பாத்திரம் பண்டங்களைப் போட்டு வைத்திருக்கிறார்கள்.

கோயிலை அடைய நெடுஞ்சாலையின் தரைமட்டத்திலிருந்து படிகள் வழியே கீழே இறங்க வேண்டும். இரண்டு திருமுறைகள் உள்ளதால் இரண்டு விமானங்களும், அவற்றின் இடையே மூன்று கோபுரங்களும் உள்ளன. இங்கு பழங்காலத்தில் இருந்த கோயிலை எடுத்து விட்டு இந்தக் கோயில் புதிதாக அமைக்கப்பட்டிருப்பதால், விமானங்களும், கோபுரங்களும் சிற்பியின் விருப்பம் போல் எழுந்துள்ளன.

கோயிலுக்கு அருகே நெடுஞ்சாலை ஓரம் இருக்கும் பெட்டிக் கடையில் அர்ச்சனைப் பொருட்கள் விற்கப்படுகின்றன. தட்டில் நான்கைந்து வகைப் பழங்கள், எலுமிச்சை, ஆரஞ்சு உட்பட, பூக்கள், வெற்றிலை, குங்குமம் ஆகியவை இருந்தன. எலுமிச்சையை தேசிக்காய் என்றும், ஆரஞ்சை தோடம் பழம் என்றும் கடைக்காரர் குறிப்பிட்டார். அந்தத் தட்டை அர்ச்சகரிடம் கொடுத்தபோது, அதை அப்படியே திருமேனிகளுக்குக் காட்டினார். அநுமன் சன்னிதியில் மாத்திரம் தேங்காயை உடைத்து அர்ச்சனை செய்துவிட்டு அந்தத் தட்டை அப்படியே நம்மிடம் திருப்பிக் கொடுத்துவிட்டார். அர்ச்சனை தமிழில்தான் செய்யப்படுகிறது.

கோயிலை ஒட்டியவாறு ஓடும் சிற்றாறு சீதையின் பயனுக்காக உருவாக்கப்பட்டது என்று நம்பப்படுகிறது. படுகையின் நடுவிலிருக்கும் ஒரு பாறையின் பிளவிலிருந்து வலிமையுடன் சிற்றாறு வெளி வருகிறது. மழை சற்று பெய்துவிட்டாலோ சிற்றாறு காட்டாறாக மாறி விடுகிறது. நாம் கோயிலுக்குள் இருந்தவேளை, சடசடவென்று மழை பெய்தது. சற்றைக்கெல்லாம் ஆற்றில் காட்டாற்று வெள்ளம் பெருக்கெடுத்து ஓடியது ஒரு விசேஷ அழகு.





கோயிலில் இருந்து நோக்கும்போது சற்றுத் தொலைவில் ஒரு உயரிய மலை தென்படுகிறது. மூன்று சிகரங்களைக் கொண்டிருக்கும் இந்த மலை அடர்ந்த காட்டின் நடுவே இருக்கிறது. இந்த மலையின் உச்சியில்தான் வான் வழியே வந்த அனுமன் இறங்

கினார் என்று நம்பப்படுகிறது.

அந்த மலையிலிருந்து குதித்த அநுமனின் கால்கள், சீதை இருந்த அசோக வனத்தின் ஊடே சென்ற ஆற்றின் கரையிலிருந்த பாறையில் பதிந்தன. அதனால் ஏற்பட்ட பதிவுகள் இரண்டு குழிகளாக இன்றும் காணப்படுகின்றன. அநுமனின் பாதச்சுவடுகள் என்று வணங்கப்படுகின்றன.

எச்சங்கள்: இராவணன் குடல்!

மழை ஓய்ந்துவிட்டது! கோயிலை விட்டு வெளியே வந்து காரில் ஏறும் போது, தமிழ் பேசும் பள்ளி மாணவர்கள் சிலர் பாதையில் போய்க் கொண்டிருந்தார்கள். அவர்களில் ஒருவன் ''டேய்! குடல் போகுது! மிதித்து விடாதே!'' என்று மற்றவர்களை எச்சரித்தது கேட்டது! ''அது என்ன குடல்?'' நாமும் அருகில் சென்று



...ஆஞ்சநேயர் ஊரையே எரித்ததால் ஏற்பட்ட கரிதான் இந்தக் கரியமண் என்கிறார்கள்...

குனிந்து பார்த்தோம். ஒரு அடி நீளத்தில் ராட்சத மண் புழுக்கள் பாதையில் ஊர்ந்துகொண்டிருந்தன. அந்தப் பையன்களிடம் கேட்டோம், ''இவற்றை ஏன் குடல் என்று சொல்கிறீர்கள்?'' என்று. ''இது இராவணனின் குடல்; சேர். மழை பெய்துவிட்டால் வெளியே வந்துவிடும்'' என்றார்கள்!

''உன்னுடைய பெயர் என்ன?'' என்று கேட்டோம்.

''கல்யாண ராமன்'' என்றான் பையன்!

இராவணன் குகை

நுவரெலியாவிலிருந்து 60 கி.மீ தொலைவு கிழக்கே சென்றால் 'எல்ல' என்ற ஒரு ஊர் இருக்கிறது. தேயிலைத் தோட்டங்கள் நிறைந்துள்ள ஊர். இங்கு ஒரு குன்றின் அடிவாரத்தில் ஒரு மாபெரும் குகை காணப்படுகிறது. அந்தக் குன்றை 'ராவணெல்ல' என்றும் குகையை இராவணன் குகை என்றும் அழைக்கிறார்கள். குகை 30 அடி விட்டம் கொண்டது. கொடிய விலங்கு ஏதாவது இருக்குமோ என்ற அச்சத்தில் இதுவரை யாருமே உள்ளே செல்ல முயன்றதில்லையாம்.

கரிய மண்

நுவரெலியாவில் நாம் பயணித்த போது, நெடுஞ்சாலைகளைப் புதுப்பிக்க வெட்டப்பட்ட மண் சரிவுகளில் ஒரு கரிய மண் அடுக்கு இருந்ததைக் காண முடிந்தது. இந்தக் கரிய மண் ஊர் முழுவதுமே இருந்தது. சில இடங்களில் மேற்பரப்பிலேயே காண முடிந்தது. இராவணன் அநுமனின் வாலில் தீ வைத்ததால், அதைக் கொண்டு ஆஞ்சநேயர் ஊரையே எரித்தார் அல்லவா? அதனால் ஏற்பட்ட கரிதான் இந்த கரியமண் என்கிறார்கள்.

இராமாயணத்தின் எச்சங்களைத் தேடி வந்த நாம், இந்த நாட்டில் இராமாயணம் வாழ்ந்து கொண்டிருப்பதைக் கண்டோம். கோயில்கள், கட்டடங்கள், கதைகள், மக்களின் நம்பிக்கைகள், இயற்கைக் காட்சிகள் இவற்றில் இராமாயணம் ஊடுருவி இருப்பதைப் பார்த்தபோது, நாமும் இராமாயணக் காலத்துக்குச் சென்றுவிட்டு வந்தது போன்ற ஓர் அனுபவத்தோடு ஊர் திரும்ப விமானம் ஏறினோம். ○



இதுதான் ஒரிஜினல் பக்தி!

''ஸார்! 'வாக்குமூலம்' என்ற பேர்ல முப்பது நிமிஷப் படம் எடுத்திருக்கேன். சமீபத்தில் வணிகர் சங்கத் தலைவர் வெள்ளையன், இயற்கை விஞ்ஞானி நம்மாழ்வார் கலந்துக்கிட்டு வெளியிட்டாங்க. அந்தப் படத்தோட விமர்சனம் கல்கியில் வந்தா பெருமையாயிருக்கும். நேரில் வந்து கொடுக்கட்டுமா?''

''உங்க பேரு?''

''க.சுப்பு''

''சுப்பு ஸார்! இந்த வார கல்கி பக்தி ஸ்பெஷலா வருது. பக்தி செய்திங்க கூடுதலா இருக்கணும். அடுத்த வாரங்கள்ல பார்ப்போம்.''

''இதுவும் பக்திப் படம்தான் ஸார்!''

''இந்த மாடர்ன் காலத்திலேயா? எவ்வளவு செலவாச்சு?''

''சி.டி.யா உருவாகி கைக்கு வர ஒரு லட்சம் ஆச்சு ஸார்!''

''பக்தின்னா எந்த மாதிரி?''

''மண் பக்தி - தொழில் பக்தி - தேச பக்தி இப்படி மூணுல ஏதாவது ஒரு பேரை வெச்சுக்கலாம். இதுதானே ஸார் ஒவ்வொருத்தருக்கும் இருக்க வேண்டிய ஒரிஜினல் பக்தி?''

உங்க அப்ரோச் ரொம்பப் பிடிச்சிருக்கு என்று சொல்லி சி.டி.யை வாங்கிப் போட்டுப் பார்த்தோம்.

மூன்று விதமான கால கட்டம். ஒவ்வொரு காலகட்டத்திலும் உடை, தோரணை, பேச்சு, பின்னணி என தெளிவாகப் பிரித்திருக்கிறார். 1965ல் நடப்பதாக ஒரு காட்சி. முன்னாள் முதல்வர் பக்தவத்சலம் வீட்டில் எடுக்கப்பட்டிருக்கிறது. அவர் ஆட்சிக் காலத்தில்தான் அமெரிக்கச் சதியோடு இன்று முள்காடாக வளர்ந்து பூமியை வெப்பக் காடாக, தரிசாக மாற்றிய முள்மரங்கள் தமிழகத்தில் பரவின என்பது இயக்குநரின் குற்றச்சாட்டு. அதைப் பற்றிய அதிகாரிகளின் சதி உரையாடல்தான் முதல் காட்சி.

2002ல் இரண்டாவது காட்சி: மரபணு விதைகளை அமெரிக்கா இங்கு அனுப்பி இந்த மண்ணைப் பாழாக்கி, பாரம்பரிய விவசாயத்தைக் கெடுத்து, அவர்கள் சொல்வதை நாம் பயிரிடும்படி ஆக்கி, விதைக்காகக் கையேந்த வைத்த சதிக்கு உடன்படும் அதிகாரிகள், அரசியல்வாதிகளின் உரையாடல். 2007ல் உலகப்



● க.சுப்பு

குறும்படம்





✱ படத்தில் சில காட்சிகள்...

பொருளாதாரமயமாதல் பேசி, பொருளாதார மண்டலம் மூலம் NRI பிரஜை என்ற பெயரில் பெரும்பான்மையான நிலம் அமெரிக்க பினாமியிடம் போய்க் கொண்டிருப்பதைச் சொல்லும் உரையாடல். உயர்சாதி மற்றும் அரசு சலுகையை அனுபவிக்கும் பிற சாதிகளைவிட சலுகைகள் ஏதும் பெறாத தெருவோரப் பிச்சைக்காரனுக்குத்தான் தேசபக்தி அதிகம் என்று சொல்லிச் செல்கிறது இப்படம்.

தொலைபேசி உரையாடல்:

''சுப்பு ஸார்! முதல்ல உங்க கருத்துக்கும் பக்திக்கும் வாழ்த்துகள்! ஆனா இது குறும்படமாவும் இல்ல. விவரணப் படமாவும் இல்ல உரை... உரை... உரையாடல். இதை எந்த வகையில சேர்ப்பது?''

''நீங்க சொல்ற எல்லா வடிவத்தையும் மீறணும்னு நெனைச்சேன். கருத்தியல்தான் முக்கியம்... வடிவமில்லை. அதனாலதான் 200 சி.டி. பிரிண்ட் எடுத்து இலவசமா எல்லா அமைப்புலேயும் கொடுத்து தமிழ் நாடு முழுதும் போடச் சொல்லியிருக்கோம்.''

''போட்டு...''

''மக்களிடையேயும் அரசாங்கத்திடமும் விழிப்பை உண்டாக்கணும். நீர்வளம் குறையுதுன்னு முன்னாள் முதல்வர் ஜெயலலிதா கட்டாய மழைநீர் சேகரிப்புத் திட்டம் கொண்டு வந்தாங்க. உ.பி. முதல்வர் மாயாவதி குண்டு பல்புக்குத் தடை விதிச்சாங்க. பூமி பற்றிய கவலை இருந்தா, தேசபக்தி இருந்தா, முதல்கட்ட முயற்சியா இந்த முள் காடுகளை தி.மு.க. அரசு முன் வந்து அழிக்கணும்.''

''சபாஷ்! உங்க பர்சனல் செல் நம்பர் என்ன?''

''9380435025 ஸார்''

''தேங்க்ஸ் சுப்பு! எங்க வாசகர்களிடம் உங்க கருத்தைக் கடத்துறோம்.''

- அமிர்தா

நலன்புரி மையங்கள்

செந்தீப் பிழம்புகளும் கரும் புகையும் சுருள் சுருளாக சுற்றிலும் எழுந்து வானத்தை அடைத்துக் கொண்டிருக்க, அவளை இழுத்துக் கொண்டு அடர்ந்த காட்டுக்குள் பதைபதைப்புடன் ஓடினான் வசீகரன். இனியும் ஓடுவதற்குக் கால்களில் தெம்பில்லாமல் துவண்டவளை வலுக்கட்டாயமாக இழுத்துக் கொண்டு ஓடினான்.

''வழி தெரியாமல் இந்தக் காட்டுக்குள்ளேயே இப்படிச் சுற்றிச் சுற்றி வந்தால் என்டைக்குப் போய்ச் சேர... இனி என்னால் ஒரு அடி வைக்க இயலாது.''

அவளது முனகலைப் பொருட்படுத்தாமல் எந்தத் திசையில் ஓடுவது என்று தெரியாமல் ஒரு கணம் நிதானித்தான்.

நாற்புறத்திலும் நெருங்கி வரும் சிங்கள இராணுவச் சிப்பாய்களின் துப்பாக்கி முழக்கம். திமுதிமுவென்று மரக் கூட்டங்களுக்கிடையே ஆயுதங்களோடு மறைந்து விரையும் இயக்கக்காரர்களின் சலனம்.

''என்னத்துக்குத்தான் இந்த ஓட்டம் எண்டு தெரியேல... எப்படியும் சாகத்தானே போறோம்... இரண்டு பேரும் ஒண்டாகச் சாகலாம்.''

மூர்க்கமாக அவள் கையைப் பிடித்தவன், ''பேசாமல் வர மாட்டாய்'' என்று உறுமினான்.

வானத்தைக் கிழித்துக்கொண்டு மின்னலென தலைக்கு மேல் பறந்தன இரு போர் விமானங்கள். சிதறித் தெறித்த குண்டுகளின் நெருப்புப் பிழம்பில் மரங்கள் தீப்பற்றிக்கொண்டன. சடசடவென்று முறிந்து விழுந்த கிளைகளிலிருந்து தப்பிக்க அவளோடு வெட்ட வெளியை நோக்கி ஓடினான்.

தாறுமாறாக புகைக்கும், புழுதிக்குமிடையே ஓடியவன், இயக்கத்துக்காரர்கள் வெட்டி வைத்திருந்த பதுங்கு குழிக்குள் அவளோடு போய் விழுந்தான்.

''செல்லடிக்கிறாங்கோ...'' அவன் முகத்தில் தெரிந்த கலவரத்தைப் பார்த்து கலகலவென்று சிரித்தாள். அது அவனுக்கு எரிச்சலை மூட்டியது.

''ஒண்ட சிரிப்பிண்ட அர்த்தம் விளங்கேயில... சாவு நம்ம மெண்டு தின்ன வருது'' வெறுப்புடன் அவளைப் பார்த்தான்.

''எனக்குப் பயம் இல்ல... வாழ வேணும் எண்ட விருப்பம் இருந்தால் தானே பயம்... அப்படி இருந்திருந்தால் கள்ளத் தோணியில் தாய் மண்ணுக்குப் போயிருப்பன்தானே... வெள்ளை வேனில் ஆர்மிக்காரங்கள் ஏற்றிக் கொண்டு போன தமையன் காட்டுக்குள்ள செத்துக் கிடந்தான்... எண்ட கண் முன்னால் தமக்கையைச் சிதைச்சுச் சீரழிச்சுப் போட்டது சிங்கள இராணுவம்... தகப்பனும் தாயும் எந்த முகாமில் இருக்கினுமோ இன்னமும் தெரியேல... உயிரோட இருக்கினுமோ, இல்ல வெசனம் பிடிச்சு திரியுணுமோ அதுவும் தெரியேல... எனக்கு வாழ வேணும் எண்ட ஆசை செத்துப் போச்சுது.''

வறட்சியுடன் வந்த சொற்கள் அவனைக் கலங்கச் செய்தன. அவள் வாயைப் பொத்தியவன் தழுதழுத்த குரலில், ''பிழையாகக் கதைக்கிறாய்

வி.ர.வசந்தன்



அமரர் கல்கி நினைவுச் சிறுகதைப் போட்டியில் பிரசுரத்துக்குத் தேர்வான கதை-7

அன்பரசி... நாம வாழ வேணும்... என்டைக் காவது ஒரு நாள் இந்த மண்ணில் அமைதி வரும்... சமாதானம் வரும்... அப்ப அவிய ளோட சேரலாம் எண்ட நம்பிக்கைதான் எனக்கு.''

அவள் விரக்தியாகச் சிரித்தாள்.

''சமாதானம்... நான் இதுவரை அப்படி யொண்ண காணேயில்ல... அதிண்ட நிறம் வெள்ளை

யெண்டு சொல்லுவினும்... ஆனால், நான் கண்டது எல்லாம் சிவப்புக் குருதியும் கறுப்புச் சாவுந்தான்... இந்த ஓட்டம் வீண் எண்டுதான் எனக்குத் தோன்றுது.''

இன்று காலை அந்த வெள்ளை வண்ணமடித்த இராணுவ வாகனம் 'நலன் புரி மையம்' என்று பெயரிடப்பட்ட நரகத் துக்குள் எம வாகனம் போல நுழைந்தது. இயக்கக்காரர்களோடு தொடர்பிருப்பதாகச் சந்தேகிப்பதாக அன்பரசியைத் தேடியது. விசாரணை என்ற பெயரில் அந்த வெள்ளை வாகனத்தில் கொண்டு செல்லப்பட்ட வர்கள் எவரும் இன்று வரை உயிரோடு திரும்பி வந்ததில்லை.

'அந்த வடிவான பெட்டையக் கொண்டு போய்ச் சீரழிக்கத்தான் இது' - என்று விழிப்படைந்த முகாம்வாசிகள் வாயைத் திறக்கவில்லை. ஆக்ரோஷத்துடன் கூடாரம் கூடாரமாகப் புகுந்து தேடிய சிப்பாய்கள், கையில் கிடைத்தவர்களையெல்லாம் அடித்துத் துவைத்தனர். பயந்து தப்பி யோடிய இரண்டு இளைஞர்களைத் துரத்திப் பிடித்து வேனில் ஏற்றிக் கொண்டு போனார்கள். இனி அவர்கள் மீண்டு வருவார்கள் என்ற உத்தரவாதம் இல்லை.

ஆண்கள், பெண்கள் குழந்தைகள், முதியவர்கள் என்று பேதமின்றி மந்தை போல அடைத்து வைக் கப்பட்டிருக்கும் மறு சித் ரவதை முகாம்களுக்குத் தான் 'நலன்புரி மையங் கள்' என்று பெயர்.

அன்பரசியை ராணுவம் தேடுகிறது என்ற செய்தி கேட்டு, அவளை இழுத்துக் கொண்டு காட்டுக்குள் ஓடி விட்டான் வசீகரன். அந்த அரக் கர்கள் நிச்சயம் மீண்டும் வரு வார்கள். சல்லடையாகச் சலித்து அவளைக் கொண்டுபோய் விடுவார்கள். செத்துச் சீரழியும் இளம் பெண்கள் ஆயிரம் ஆயிரமாய் இருக்க, அன்பரசி மேல் மட்டும் அவனுக்கு என்ன அக்கறை? அன்பா, பாசமா, காதலா...? உயிருக்கு நிச்சயமற்ற மரண விளிம்பில் காதலும் பூக்குமா?

பகல் முழுக்க மறைந்து ஒளிந்து இக்கணம் வரை தப் பித்தாயிற்று உயிருடன்... இனி!



உன்னிடம் பத்து இருக்கா?

எட்டு எட்டா மனுஷ வாழ்வைப் பிரிச்சுக் கோன்னு வைரமுத்து சொன்னாலும், பதினாறும் பெற்று பெருவாழ்வு வாழ்கன்னு பெரியவங்க வாழ்த்தினாலும் மூன்றெழுத்தில் மூச்சு இருக்கும்னு மூச்சு முட்டப் பாடினாலும் பத்து இல்லாவிட்டால் பைசாவுக்குப் பிரயோஜனமில்லைங்க... அதனால தான் 'பத்துடையடியவர்க் கெளியவன்' - என்று திவ்யப் பிரபந்தம் சொல்கிறது.

'பத்துடையீர், ஈசன் பழவடியீர் பாங்குடையீர்' என்று திருவெம்பாவை பாடுகிறது.

சரி... உங்ககிட்ட இருக்கா அந்தப் பத்து?

பத்து என்றால் பக்தி என்று பொருள். இந்தப் பத்து வந்துட்டா இன்னொரு பத்தும் உங்களுக்குக் கிடைக்கும். அது என்ன?

62ம் பக்கம் வந்து பாருங்க...

- அமிர்தா

''நம் மன்னருக்குத் தம் புகழ் பாடுவதைக் கேட்பதில் ஒரே வெறின்னு எப்படிச் சொல்ற?''

''உடம்பு சரியில்லாததால் புலவர் அரசவைக்கு வரல. மன்னரே புலவர் வீட்டுக்குப் போய் தன்னைப் புகழ்ந்து பாடச் சொல்லி கேட்டாராமே!''

- 'சாயம்' ராஜாராமன்



செல்ஃபோனில் யார் யாரிடமோ பேசினான். உதவி கேட்டு இறைஞ்சி மன்றாடினான்; அன்பரசியைத் தப்புவிக்கும்படி. சத்தியனிடமிருந்து வந்த கொஞ்சம் நம்பிக்கைச் சொற்களில் சற்று அமைதியானான்.

வெளியே குண்டு வீச்சு கொஞ்சம் ஓய்ந்தது. துப்பாக்கிகளின் முழக்கமும் தணிந்திருந்தது. பதுங்கு குழிக்குள் கிடந்த இருவரும், மறுகணத்துக்கும் வாழ்க்கை மிச்சமிருக்கிறது என்ற தற்காலிக நிம்மதியால் மூச்சு விட்டனர்.

புகை சூழ்ந்த வானத்தில் முகம் வெளிறிய நிலவு எட்டிப் பார்த்தது. அந்த மங்கிய வெளிச்சத்தில் அவள் முகத்தைப் பார்த்தான் வசீகரன். அவள் கண்களில் நீர்முத்துக்கள் பளபளத்தன.

''போகலாம் வா''

''எனக்கு இதில் விருப்பமில்ல... பின் ஏன் வற்புறுத்தல்?''

அவன் பொறுமையிழந்தான். ''அங்க சத்தியன் நமக்கு வேண்டி காத்துக் கொண்டிருப்பான்... செல்லடிக்கும் ராவுகளும், பெண்டுகளைச் சீரழிக்கும் ஆர்மிக்காரவுகளும் இல்லாத தாய் மண்ணில் கொஞ்சநாள் செண்டு இரு அன்பரசி...''

''அப்படியெண்டால் நீயும் வா...''

''எனக்கும் வர வேண்டுமென்ட ஆசைதான்... ஆனால் எண்ட தாயையும், தகப்பனையும் இஞ்ச விட்டுவிட்டு வர இப்ப இயலாது... இயக்கத்துக் காரங்க விடவும் மாட்டுனும்''

''எண்டால் என்னை மட்டும் விட்டு விடுவாங்களாக்கும்?''

''ஆர்மிக்கும் இயக்கத்துக்காரங்களுக்கும் மறைஞ்சுதான் போக வேணும்... சத்தியன் எல்லாம் சரியா செய்திருப்பான்... இஞ்ச சமாதானம் எண்ட தருணம் வந்தால் நான் வருவேன்... ஒண்ட கையைப் பிடிச்சு இந்த ஈழ மண்ணுக்குத் திரும்ப கூட்டிக் கொண்டு வருவன்.''

அவன் ஓடிய வேகத்துக்கு ஈடு கொடுக்க முடியாமல் திணறிய அன்பரசி விசும்பினாள்.

''இன்னும் கொஞ்ச தூரந்தான்''


''எண்ட மனசுல என்னவோ திரும்பி வர இயலாத நெடுந்தொலைவு எண்டுதான் தோன்றுது.''

அவளைத் தேற்றும் முகமாக என்னவோ சொல்ல வாயெடுத்தான் வசீகரன். அதற்குள் மீண்டும் துப்பாக்கிகளின் முழக்கம் அண்மையில் எழுந்தது. அவன் அவளை இழுத்துக் கொண்டு மறு திசையில் ஓட முயல, ''வசீகரன்''

என்று இருட்டுக்குள்ளிருந்து ஒரு குரல் அவசரமாக அழைத்தது.

அவன் நின்று கண்களை இடுக்கிப் பார்த்தான். ஒரு மரத்தின் மறைவிலிருந்து

பத்து (பக்தி) இருந்தால் தசகாரியம் என்கிற 1) தத்துவ ரூபம், 2) தத்துவ தரிசனம், 3) தத்துவ சுத்தி, 4)ஆன்ம ரூபம், 5) ஆன்ம தரிசனம், 6) ஆன்ம சுத்தி, 7) சிவரூபம், 8) சிவதரிசனம், 9) சிவயோகம், 10) சிவபோகம் - இந்தப் பத்தும் அமையுமாம்.



வெளிப்பட்ட சத்தியன், அவர்களை நோக்கி வந்தான். அவன் தோளில் துப்பாக்கி இருந்தது. இயக்க உடையில் இருந்தவனைப் பார்த்து சற்று மிரண்டு, வசீகரன் நடுங்கும் குரலில் கேட்டான்.

''போட்டு ஆயத்தமாக இருக்குதானே''

''உஷ்'' என்று உதட்டில் விரலை வைத்து எச்சரிக்கை செய்தவன், அவனைத் தனியே அழைத்துப் போய் தணிந்த குரலில் சொன்னான்.

''ஆர்மி நான்கு திசையிலேயும் முன்னேறிக்கொண்டு வருது... அதைத் தடுக்கணும் எண்டுதான் அணையை இயக்கத்துக்காரங்க உடைக்கப் போறாங்கள். இன்னும் கொஞ்ச நேரத்துல இந்த எடமே வெள்ளத்துல மூழ்கிப் போகும்... கடலின்ற பக்கம் இனி போக இயலாது... அன்பரசியைக் காப்பாற்ற வேணும் எண்ட நாட்டந்தானே உனக்கு... அப்படி எண்டால் அதுக்கு ஒரு வழிதான் இருக்கு.''

வசீகரன் என்ன என்று மிரண்ட விழிகளோடு அவனைப் பார்த்தான்.

''சிங்கள ராணுவம் ராடார் வச்சு கடலின்ற ஒவ்வொரு அங்குலத்தையும் சலிச்சு எடுக்குது... கொஞ்சம் அசைவு கண்டாலும் சுட்டுத் தள்ளுவான்... நடுக்கடலில் நிண்ட அன்பரசியைக் காவு கொடுக்க வேண்டாம் வசீகரா.''

அவன் வெளிறிய முகத்தோடு சத்தியனைப் பார்த்தான். ''வேறு வழி இல்ல?'' நாக்கு வறண்டது.

அவன் தோளைத் தட்டிக் கொடுத்தவன் ''இருக்கு'' என்றான், நிதானமாக.

''இவள சிதைச்சு ராணுவம் சீரழிச்சுப் போடும் எண்ட பயம்தானே உனக்கு... ஒரு காரியம் நினைச்சுப் பாரு... இவளைப் போல எத்தனை பெண்டுகள வதைச்சு சிங்கள மிருகம் திண்டது...'' அவன் கண்கள் இருட்டில் நெருப்பு போல் ஜொலித்தன.

பேசாமல் நின்றான் வசீகரன்.

''சொல்லு...''

''.....''

சத்தியன் குரலை உயர்த்தி கழுத்து

நரம்புகள் புடைக்கக் கத்தினான்.

''இதிண்ட முடிவுதான் என்ன..?''

''வர வேணும் சத்தியா... முடிவு எண்ட ஒண்டு வரத்தான் வேணும்.''

''எண்டால் இந்தத் தோக்கப்பிடி... கண்ணில் கிடைச்ச ஆர்மிக்காரனைச் சுட்டுத் தள்ளு... நிண்ட அன்பரசியை அவன் தின்னாமல் வேண்டுமெண்டால், நீ அவனைக் கொல்லு.''

துப்பாக்கியைத் தன் முன்னால் நீட்டிக் கொண்டு நிற்கும் சத்தியனை அதிர்ச்சியுடன் இமை கொட்டாமல் பார்த்துக் கொண்டு நின்ற வசீகரன் அமைதியானான். அவன் தொண்டையிலிருந்து விசித்திரமான ஒலியொன்று வந்தது சற்று இதழ்ச்சியுடன்.

''இந்த ஆயுதத்தைத் தூக்கினதுதான் இந்தச் சாவுக்கெல்லாம் காரணம்... ஆயுதம் தூக்கி நீ அவனைக் கொன்றால், அவன் உன்னைக் கொல்லுவான். வன்மம் வளர்த்ததினால் இவ்வளவு காலம் என்னதான் கண்டாய்? சாவும், அழிவுந்தானே!''

''பேரினவாதம் எண்ட மக்கள நாய்போல பாவித்ததினால்தானே துப்பாக்கியைத் தூக்கினம்... எமது உரிமைகளை மீட்டெடுக்க எமக்கு வேற மார்க்கம் இல்லாமல்... அறியாதது போல் கதைக்கிறாய்.''

சத்தியனின் முகத்தில் குருதி ஏறியிருந்தது.

''நான் ஒரு காரியம் சொல்லட்டே... பிழையாய் எண்ண வேண்டாம்...''

''ம்'' என்று உறுமினான் அவன்.

''ஆயுதத்தைக் கீழ வச்சால்தான் அந்த வழி என்னதென்று தெரியும்... சாத்வீக மார்க்கம் ஒண்டு இருக்கு.''

அவன் சொன்னதைக் கேட்ட சத்தியன், கெட்டவார்த்தையைக் கேட்டவன்போல முகத்தைச் சுழித்து ஆங்காரமாகச் சிரித்தான்.

''இந்த வேதாந்தம் எல்லாம் கேட்கத்தான் நன்றாக இருக்கும்... தோக்க வாங்க இயலுமா, இயலாதா..?''

அவன் மறுத்துத் தலையசைத்தான்.

சத்தியனின் கண்கள் சற்றுத் தொலைவில் நின்ற அன்பரசியை நோக்கின. அவளை நெருங்கிச் சென்றவன், ''இயக்கத்தில் ஒரு சமயம் நீயும் ஆயுதப் பயிற்சி எடுத்தவள்தானே... நிண்ட தமக்கை சிங்களவனிடம் சீரழிஞ்சு செத்ததைப் பார்த்தவள்தானே... இது வாழ்வா! சாவா எண்ட போராட்டம் எமக்கு... தோக்கப்பிடி.''

அவள் சம்மதமின்றி பின் வாங்கினாள். ''ஆர்மிக்காரன நான் சுட்டால் அவண்ட வெறி எண்ட இனத்தக் கொல்லும்... இதெண்ட தீர்வு துப்பாக்கி இல்ல சத்யா.''

இருவரையும் மாறி மாறிப் பார்த்துக் கொண்டு நின்ற சத்தியனின் முகம் இறுகியது.

''அப்படியெண்டால் எமக்கும் வேற வழியில்ல...''

திரும்பி வசீகரனிடம் வந்தவன், சட்டென்று அவன் சட்டைப் பைக்குள் கையை நுழைத்து, செல்ஃபோனைப் பிடுங்கினான். அவனிடமிருந்த கடைசி சொத்து அதுதான். அதைக் கீழே போட்டு, துப்பாக்கியின் பின் கட்டையால் ஓங்கிக் குத்தி உடைத்தான்.

அவன் சமிக்ஞைக் குரலெழுப்ப, திமுதிமுவென்று ஓடிவந்து அவர்கள் இருவரையும் சூழ்ந்து கொண்டனர் இயக்கத்துக்காரர்கள், நீட்டிய துப்பாக்கிகளுடன்.

○



பேரினவாதம் எண்ட மக்கள நாய்போல பாவித்ததினால்தானே துப்பாக்கிய தூக்கினம்

'சிங்கப்பெருமாள் கோயில்' என்று புகழ் பெற்ற பாடலாத்ரி நரஸிம்ஹ சுவாமி கோயில், பழம்பெருமை வாய்ந்த வைணவத் திருத்தலங்களுள் ஒன்று.

இப்போது பேருந்துகளில் 'எஸ்.பி.கோயில்' என்று தலப் பெயரைச் சுருக்கிவிட்டார்கள். ஆனாலும் நெடுஞ் சாலையின் நீல நிறப் பெயர்ப் பலகைகளில் இன்னும் 'சிங்கப் பெருமாள் கோயில்' என்றே எழுதியிருப் பதைக் காண ஆறுதலாக இருக்கிறது.

நெடுஞ்சாலையின் பேருந்து நிறுத்தத்திலிருந்து கிழக்கே போகும் வீதியில் ஓர் அரை கி.மீ நடந்தால் ஆலயத்தின் உயரமான சுற்றுச்சுவர் இடப்புறம் காணப்படும். அதையொட்டி வடக்கில் திரும்பினால் பாடலாத்ரி வந்துவிடும்.

கோயில் உள்ள பகுதிக்குப் பாடலாத்ரி வனம் என்று பெயர். பாடலம் என்றால் சிவப்பு நிறம்; அத்ரி என்றால் மலைக்குன்று.

சுற்றிலும் அடர்ந்த காடாக இருந்த காலத்தைக் கற்பனை செய்து பார்க்கலாம். அப் போது மகரிஷி ஜாபாலி என் பவர் இங்கே தவமிருந் தார். எம்பெருமான் தமக்குக் காட்சி தந்தருள வேண்டும் என்று அவர் பிரார்த்தனை

பிரமாதமான கட்டுமானம் ஒன்றும் இல்லை. ஆயினும் புராதனப் பெருமை வாய்ந்த திருக் கோயில்களுள் இதுவும் ஒன்று. 'நரசிங்க விண் ணகரம்' என்று போற்றப்படும் இந்தத் திருக் கோயிலும், அதனோடு இணைந்த சிறுகுன்றும் ஒரு சுற்றுச்சுவருக்கு உள்ளேயே அடங்கி விடுகின்றன. பல்லவர் காலக் குடைவரை அமைப்பு என்று குறிப் பிடுகிறார்கள். சில கல்வெட்டுகளும் உண்டு.

நரஸிம்மாவதாரம் - இரண்யகசிபு வதைப்படலம் நிகழ்ந்த காலம். அப்போது இந்தச் சிங்கப்பெருமாள்



சுப்ர. பாலன்

செய்தமையை ஏற்று இரணிய வதம் முடித்த கையோடு அவருக்கு உக்ர நரஸிம்மனாகக் காட்சி தந்து அருளினாராம்.

மூலவர் நரசிம்மர், குன்றின் ஒரு பகுதியாகவே குகைக் கருவறையில் இடம்பெற்றிருக்கிறார். பர்வதமே திருமேனியாக அமைந்தவர் என்கிறார்கள். ஆகவே நரசிம்மரை வலம் வருவதானால் பாடலாத்ரிக் குன்றையும் சேர்த்தேதான் வலம் வர வேண்டும். கிரிவலம் இங்கே மிகவும் சிறப்புடையது. அழகான படிகளோடு உள்ள மிகச் சிறிய நடைபாதைதான் கிரிவலப்பாதை. வேம்பு, அசோகம் என்று சில மரங்கள் பசுமை பேசி நிற்கின்றன.

கிரிவலப் பாதை தொடங்குகிற இடத்தில் வலப்புறம் வரிசையாகச் செவ்வரளிச் செடிகள் பூத்துக் குலுங்குகின்றன. அவற்றை அடுத்து குன்றுப்பிளவில் எழுந்து அடர்ந்து வளர்ந்து நிற்கும் அழிஞ்சி மரத்தைக் காணலாம். நாச்சியார் திருமொழி விரிவுரையில் 44ஆம் பாசுரத்தில் இம்மரத்தின் சிறப்பு விளக்கப்பட்டிருக்கிறது.

திருமணம் ஆக வேண்டியவர்களும், மக்கட்பேறு வேண்டுகிறவர்களும், வாழ்வில் நல்ல அறிவாற்றல் பெற விரும்புகிறவர்களும், தாங்கள் அணிந்துள்ள ஆடையிலிருந்து இண்டு இழைகள் நூல் எடுத்து அழிஞ்சி மரக் கிளையொன்றில் கட்டி நேர்ந்து கொள்ள வேண்டுமாம். மரத்தின் அடியில் மஞ்சள் குங்குமம் பூசி நெய் விளக்கேற்றி வேண்டினால் நினைப்பது நடந்தேறும் என்பது இத்தலத்தில் ஒரு நம்பிக்கை.

கிரிவலத் திருச்சுற்றை முடித்து மீண்டும் கீழே இறங்





குன்றில் உறையும் சிங்கப்பிரான்!

குகிற இடத்தில் இன்னும் ஒரு அடியார் தரைபடிய வீழ்ந்து வணங்கும் கல் தகட்டுச் சிற்பம் - அதில் கால்படாமல் கீழே இறங்கலாம்.

கருவறைப் பெருமாள் இங்கே முக்கண்ணப்பர் - த்ரிநேத்ரதாரியாக அருள் பாலிக்கிறார். மூன்றாம் கண்ணைத் திருமண்காப்பு ஆபரணப்பட்டை மறைத்திருக்கும். அதை விலக்கி அந்த முக்கண்ணையும் தரிசிக்க வைப்பார் பட்டாச்சார்யார். சுவாமி கிழக்கு நோக்கிய திருக்கோலத்தில் ஸேவை சாதிக்கிறார். அமர்ந்த திருக்கோலம், இடப்புறப் பாதம் தாமரை மலரில் வைத்தவாறு தோற்றம். வலப்புறக் கால் மடித்து அமர்ந்த நிலை. நான்கு திருக்கரங்கள். சங்கு சக்ரதாரி. கீழ்வலக் கரம் அபய முத்திரை. இடக்கரம் தொடைமீது வைத்தவாறு கடி அஸ்த முத்திரையில் காணப்படுகிறது. சிறியதான குகைப் பகுதிக்குள் நரஸிம்மர் இடம்பிடித்து அமர்ந்திருக்கிறார். சுவாமியின் திருமார்பில் லக்ஷ்மிஹாரம், மகரகண்டி, சஹஸ்ர நாமமாலை ஆகியன அணி செய்கின்றன.



✱ புஷ்கரணி

இத்திருக்கோயில் வழிபாடுகள் வைகானஸ ஆகமப்படி நடைபெறுகின்றன. மூலவருக்கு ஸ்ரீ பாடலாத்ரி உக்ர நரசிம்மர் என்று திருநாமம். வைகானஸ ஆகமத்தின்படி கருவறைத் திருமேனிகள் மூன்று அல்லது ஐந்து என்று இடம் பெறுமாம். இங்கே பஞ்சபேரர் என்கிற ஐந்து திருமேனிகள் உண்டு. மூலவருக்கு நேர் கீழே இடம்பெற்றிருப்பவர் கௌதுகர். அடுத்து ஒரு மேடையில் உத்ஸவர், ஸ்தபனபேரர், இன்னும் பலி பேரர் என்று ஒரு திருமேனி. இவர் நித்ய உற்சவர்.

மூன்று கண்களை உடைய உக்ரநரசிம்மர் திருக்கோலம் என்பதால் நேரேயுள்ள வாசல் திறக்கப்படுவதில்லை

இங்கே உத்ஸவருக்குப் ப்ரஹ்லாத வரதர் என்பது திருநாமம். கௌதுகர் ஆண்டுக்கு ஒருமுறை மட்டும் நரஸிம்ம ஜயந்தி அன்றைக்குக் கருவறையிலிருந்து வெளியே எழுந்தருளி மண்டபத்தில் காட்சி தருகிறார்.

ஹிரண்யகசிபுவை வதம் பண்ணிய நரஸிம்மர் என்பதால் இந்த ஆலயத்தில் மாதம் இருமுறை பிரதோஷ கால பூஜை சிறப்பாக நடைபெறுகிறது. மூன்று கண்களை உடைய உக்ரநரசிம்மர் திருக்கோலம் என்பதால் நேரேயுள்ள வாசல் திறக்கப்படுவதில்லை. இடப்புறம் திரும்பி தென்புற வாயில் வழியேதான் தரிசனத்துக்குப் போக வேண்டும் என்று வைத்திருக்கிறார்கள்.

சுவாமிக்கு வலப்புறம் தனிக் கருவறையில் தாயார் அருள்பாலிக்கிறார். இவருக்கு அஹோபிலவல்லித் தாயார்

என்று திருநாமம். தாயாரின் அழகொழுகும் உத்ஸவ விக்கிரகத்தின் இருபுறமும் தூக்கிய துதிக்கைகளுடன் யானைகள் உண்டு. கஜலக்ஷ்மி வடிவம். ஆனால், இந்த உற்சவரின் திருநாமமும் 'அஹோபிலாவல்லி'தான்.

தாயாரின் கருவறையை வலம் வரலாம். சிறிய அழகிய பிராகாரம் உண்டு. நரஸிம்மரின் இடப்புறக் கருவறையில், ஆண்டாள் கிழக்கு நோக்கி ஸேவை சாதிக்கிறார். இவருக்குத் திருஆடிப்பூரம், போகிப் பண்டிகைகளில் கல்யாண உற்சவம், லௌகீக முறைப்படி நடைபெறுகிறதாம். ஆண்டாளுக்குக் கனு உத்ஸவம் சிறப்பாகக் கொண்டாடப்படுகிறது.

பங்குனி உத்திரம் அன்று அஹோபில வல்லித் தாயார், நரஸிம்மர் சன்னிதிக்கு எழுந்தருளுகிறார். அன்றைக்கு இரவில் எட்டு மணி அளவில் திருக்கல்யாண உற்சவம் நடைபெறுகிறது. இதுவும் லௌகீக முறைப்படிதான்- அதாவது ஹோமாதிகள் இல்லாமல். சுவாமி சன்னிதிக்கு எதிரே பெரிய திருவடி மேற்கு நோக்கி ஸேவை சாதிக்கிறார்.

வைகாசி மாதம் தாயாரின் பிரும்மோத்ஸவம். ஸ்வாதி நக்ஷத்திரத்தில் தீர்த்தம். மாசி மாதம் இங்கே புஷ்கரணியில் தெப்போத்ஸவம் நடைபெறுகிறது. அழகான திருக்குளம் சுற்றுச்சுவர் படிக்கட்டுகளோடு, ஆலயத்தின் தென் கிழக்கில் உள்ளது.

மிகவும் அற்புதமான மரச் சிற்ப வேலைப்பாடுகளோடு பண்டைய பெருமையை நினைவுகூரும் வண்ணம் புதிய திருத்தேர் ஒன்று உருவாகி வருகிறது. தேரின் உயரம் ஏறக்குறைய 13 மீட்டர். அடுத்து வரும் பிரும்மோத்ஸவத்தில் புதிய தேரோட்டத்தில் எம்பெருமான் ஸேவை சாதிப்பார் என எதிர்பார்க்கலாம். புரட்டாசி பிரும்மோத்சவத்தில் எட்டாம் நாள் தேரோட்டம் நடைபெறும்.

சிறிய விமானமாகையால், வெளியேயிருந்து கோபுர தரிசனம் சாத்தியமில்லை. ப்ரணவ கோடி விமானம் என்று இதை வகைப்படுத்தியிருக்கிறார்கள். கிரிவலப் பாதையில் படியேறுகிறபோது காணப்படுகிற விமானத் தோற்றம் அதியற்புதமான காட்சி.

திருமங்கையாழ்வார் அருளிய ஏழாம் திருமொழியின் முதல் பத்து - 'அங்கண்மா ஞாலமும்' என்று தொடங்கும் சிங்கவேள் குன்றம் பற்றிய பத்துப் பாசுரங்களையும் தினந்தோறும் இங்கு ஓதி வழிபாடு செய்கிறார்கள்.

அமைதியாகச் சென்று வழிபடக்கூடிய திருத்தலம் இது. ஸ்ரீபாடலாத்ரி நரஸிம்ம சுவாமி அருளை வேண்டிப் பிரார்த்திப்போம்.

படங்கள்: **தனுஸ்**

பக்தி எத்தனை வகை?

பக்தி ஒன்பது விதமானது என்று முன்னோர்கள் வகுத்துள்ளனர். அவை:

1) இறைவனின் திருநாமத்தை, புகழை, காதால் கேட்டல் - (சிரவணம்), 2) இறைவன் புகழ் பாடுதல் - (கீர்த்தனம்), 3) அவனை தியானித்தல் - (ஸ்மரணம்), 4) திருவடித் தொண்டு புரிதல் - (பாத சேவனம்), 5) அர்ச்சித்தல் - (அர்ச்சனம்), 6) வணங்குதல் - (வந்தனம்), 7) ஆளாதல் - (தாஸ்யம்), 8) ஒன்றுபடுதல் - (ஸக்யம்), 9) ஆத்ம நிவேதனம் - ஆத்மாவை அர்ப்பணம் செய்தல்.

- கி.வா.ஜ எழுதிய 'விடைகள் ஆயிரம்' நூலிலிருந்து...

- சசி

பாண்டி நாட்டில் பொன்னனையாள் என்று பெயர் கொண்ட ஒரு தேவதாசி! மதுரை சொக்கநாதப் பெருமானிடத்தில் மாறாத பக்தி கொண்டவள். சம்பாதிக்கும் பொருள் அத்தனையையும் சிறுகச் சிறுக சேமித்து வந்தாள். எதற்கு? பெருமானின் திரு வுருவத்தைப் பொன்னால் வடித்துப் பூஜை செய்வதற்கு! அற்ப வருவாயில் அவ்வளவு பொன்னுக்கு எங்கே போவாள்? சொக்கநாதப் பெருமான் ஒரு சித்தராகத் தோன்றி பொன் னையாள் வீட்டுக்குப் போனார். வீட்டிலுள்ள செம்பு, பித்தளை, ஈயம் என்று எல்லாப் பாத்திரங்களையும் கொண்டு வந்து அடுக் கச் சொன்னார். அவற்றின் மீது விபூதியைத் தெளித்துவிட்டு, ''இந்தப் பாத்திரங்களை யெல்லாம் நாளை நெருப்பில் போட்டுப் பார்'' என்று கூறி மறைந்தார். என்ன அதிசயம்! அத்தனை பாத்திரங்களும் பொன்னாக மாறி மின்னின! பொன்னனையாளுக்கு அள வில்லா ஆனந்தம். பொற்கொல்லனை வர வழைத்து அத்தனை பொன்னையும் உருக்கி வார்த்து சொக்கத் தங்கத்தாலேயே சொக்கநாத பெருமானை, சோமாஸ்கந்த உருவில் வார்த்தெடுத்து விட்டாள். சோம சுந்தரப் பெருமான், தன் பெயருக்கு ஏற்ப அழகே உருவாய் அமைந்துவிட்டான். அவன் அழகில் அப்படியே சொக்கிப் போய் விட்ட பொன்னனையாள், ஆசை ஆசை யாய் சொக்கப் பெருமானின் கன்னத் தைப் பிடித்துக் கிள்ளி முத்தமிட்டாளாம்! பொன்னனையாளின் கை நகக் குறியை

* திருப்பூவணம் சோமாஸ்கந்தர்



இன்றளவும் பெருமானின் கன்னத்தில் காணலாம், மதுரைக்கு அருகே வைகை யாற்றின் எதிர்க்கரையில் உள்ள திருப் பூவணத்தில்!

வழக்கமாக நடராஜரின் வடிவம் வலது பாதத்தை ஊன்றி இடது பாதத் தைத் தூக்கி ஆடும் விதமாகவே அமைந் திருக்கும். மதுரையில் வெள்ளியம்பலத் தில் கூத்தாடும் எம்பெருமான், இடது திருப்பாதத்தை ஊன்றி வலது திருப் பாதத்தைத் தூக்கி ஆடும் கோலத்தில் விளங்குகிறான்.

இராஜசேகர பாண்டியன் என்று பெயர் கொண்ட பாண்டிய மன்னன், சோழ மன்ன னுக்குப் போட்டியாக 64 கலைகளிலும் தேர்ச்சி பெற விரும்பி, அதுவரை தான் அறிந்திராத பரதக் கலையில் பயிற்சியை மேற்கொண்டானாம்! நாலே நாளில் அவன் உடம்பு ஆடிப்போய்விட்டது! 'இந்த ஆட்



கன்னத்தில் காயமும் கால் மாற்றி ஆடிய பெருமானும்!

டத்துக்கே நமக்கு உடம்பெல்லாம் வலிக் கிறதே! காலம் காலமாக ஒற்றைக் காலில் நின்றாடும் கூத்தப் பெருமானுக்கு எவ் வளவு வலியிருக்கும்!' என்று அவன் பேதைமனம் வருந்தியது. 'பெருமானுக்கா வது வலியாவது' என்று அவன் நினைக்க வில்லை. உடனே கோயிலுக்குப் போய் ''பெருமானே! என்றும் ஒரே கோலத்தில் ஆடிக் கொண்டிருக்கிறீரே! ஒரு மாறுதலக் காகவேனும் தூக்கிய திருவடியை ஊன்றி, ஊன்றிய திருவடியை வீசி ஆடக் கூடாதா!'' என்று வருந்திக் கேட்டுக் கொண்டான். அன்பெனும் பிடிக்குள் அகப்படும் மலையான பெருமானும் அவன் வேண்டுகோளுக்குச் செவி சாய்த்து, கால் மாறி ஆடினானாம்! மதுரையில் இன்றும் வெள்ளியம்பலக்கூத்தன் அதே கோலத்தில் காட்சி தருகிறான்!

த. கி. நீலகண்டன்

நல்லன



* ஸ்ரீராமநவமி நிகழ்ச்சியில் அமரர் கல்கி

இறை உணர்வு என்பது வேறு



* வைதிகர்களுடன் ராஜாஜி, கல்கி சதாசிவம்

மதம் என்பது வேறு

அமரர் கல்கி ஆனந்த விகடனில் எழுதிய முதல் கட்டுரையே மூட நம்பிக்கைகளை எதிர்த்துதான். அவரது இயல்பான நகைச்சுவை மிளிர எழுதப்பட்ட 'ஏட்டிக்குப் போட்டி' என்ற அந்தக் கட்டுரையைப் படித்துவிட்டு வாசன் அவர்கள் நிச்சயமாகச் சிரித்து மகிழ்ந்திருக்க வேண்டும். கட்டுரை உணர்த்தும் சமூகச் சீர்திருத்தத்தையும் நன்றாகப் புரிந்து கொண்டிருக்க வேண்டும். அதனால்தான் நாளடைவில் விகடன் ஆசிரியராகவே 'கல்கி'யை ஏற்றுக் கொண்டார், வாசன்.

'கல்கி' அவர்களுக்கு இறையுணர்வு நிறைய உண்டு. தினமும் பூஜை, அனுஷ்டானம் என்று செய்யாவிட்டாலும் திருநாட்களில் நிச்சயம் பூஜை செய்வார். அமாவாசை தர்ப்பணம், சிரார்த்தம் ஆகியவற்றையும் முன்னோர்களுக்குச் செலுத்தும் நன்றிக் கடனாகக் கருதி சிரத்தையாகப் பண்ணுவார். ஆனால், ராகு காலம் பார்ப்பது, சகுனம் பார்ப்பது, அலகு குத்திக் கொள்வது, தீ மிதிப்பது போன்றவை அவருக்குப் பிடிக்காது. மூட நம்பிக்கைகளில் அதிமூடத்தனமான தீண்டாமை, விதவைகளை அலங்கோலம் செய்தல் போன்ற கொடுமைகள் குறித்து உள்ளம் உருகும் வகையில் தமது சிறுகதைகளில் எழுதி சமுதாய விழிப்புணர்வும் மனமாற்றமும் உருவாக்கினார். ('விஷமந்திரம்'; 'கேதாரியின் தாயார்') ஹரிஜன ஆலயப் பிரவேசத்துக்காக அவர் வரிந்து கட்டிக் கொண்டு எழுதினார். அந்நாளைய சென்னை ராஜதானியின் சட்டசபை சபாநாயகர் ஜே.சிவசண்முகம் பிள்ளையுடன் சேர்ந்து ஹரிஜன ஆலயப் பிரவேசத்தை முன்னின்று நடத்தி வைத்தார்.

ஆக... இறை உணர்வு என்பது வேறு;

மதம் என்பது வேறு; பகுத்தறிவு என்பது வேறு. இவற்றை ஒன்றுடன் ஒன்று தொடர்புபடுத்திக் குழப்பிக் கொள்ளக் கூடாது. இதேபோல அறநெறி நூல்கள் வேறு; இதிகாசங்கள் வேறு; புராணக் கதைகள் என்பன வேறு.

சிறுத்தொண்டர் புராணத்தில் சிவபெருமான் சிவனடியார் உருவில் வந்து பிள்ளைக்கறி கேட்டதாகவும் அதற்கு இசைந்து சிறுத்தொண்டர் தமது மக னையே கறி சமைத்துப் பரிமாறியதாகவும் கதை. இதற்கு எவ்வளவுதான் தத்துவார்த்த வியாக்கியானம் சொன்னாலும் மனம் ஏற்க மறுக்கிறது.

இதே சிறுத்தொண்டரை 'கல்கி' தமது பார்த்திபன் கனவு நாவலில் எவ்வளவு உன்னதமான முறையில் பயன்படுத்து கிறார் பாருங்கள்:

கபாலருத்ர பைரவன், காளிமாதா நரபலி கேட்பதாகவும் அரசிளங்குமர னையே வேண்டுவதாகவும் கூறி, சோழ இளவரசன் விக்கிரமனைக் கடத்திவரச் செய்கிறான். அவன் பலியிடப்படும் தருணத்தில் சிறுத்தொண்டரும் நரசிம்ம பல்லவரும் வந்து காப்பாற்றுகிறார்கள். அப்போது சிறுத்தொண்டர், 'அன்பே சிவம்' என்பதை அங்கே கூடியுள்ள காபாலிகர்களுக்கும் பிறருக்கும் உணர்த்து

யாவையும் நாடுறு நாடு

கல்கி ராஜேந்திரன்



பகுத்தறிவு என்பது வேறு

வார். 'தேவர்களைக் காப்பாற்ற விஷமுண்ட பெருமான், நரபலி கேட்பாரா?' என்று வினா எழுப்பு வார். தங்கள் சுயநலத்துக்காக சிலர் காபாலிக மதத்தைத் தோற்றுவித்து மக்களை ஏமாற்றி வருவதாகக் கூறி, மூட நம்பிக்கைகளுக்கு மக்கள் இடம்தரக் கூடாது என்று அழுத்தம் திருத்தமாகச் சொல்வார். புலிகேசி யின் சகோதரன் நீலகேசி (நாகநந்தி)

இவற்றை ஒன்றுடன் ஒன்று தொடர்புபடுத்திக் குழப்பிக் கொள்ளக்கூடாது

தான் கபால ருத்ர பைரவனாக வந்து விக்கிரமனைப் பலியிடுவதன்மூலம் பழி தீர்த்துக் கொள்ள முயன்றதாக உண்மையை விளக்குவார். அவரவரும் அமைதியாக வீடு திரும்பி, மெய்யான இறையுணர் வுடன் வாழ்ந்து உய்யுமாறு கேட்டுக் கொள்வார்.

எதிலும் நல்லன நாடி ஏற்பதும்,

காலத்துக்கு ஒவ்வாத தவறான கருத்துக்களை ஒதுக்குவதும்தான் அறிவுடைமை என்பதை 'கல்கி' அவர்களைப் போலவே ராஜாஜியும் டி.கே.சியும் நமக்கு சொல்லிக் கொடுத்திருக்கிறார்கள்.

'வியாசர் விருந்து' என்ற தலைப்பிலும் 'சக்கரவர்த்தித் திருமகன்' என்ற தலைப்பிலும் மகாபாரதத்தையும் ராமாயணத்தையும் கல்கியில் தொடராக ராஜாஜி எழுதி வந்தது அன்பர்களுக்குத் தெரியும். அதன் பின்னர், ''பாகவதத்தை எளிய தமிழில் எழுதலாமே'' என்று சதாசிவம் தமது யோசனையை ராஜாஜியிடம் வெளியிட்டார். அதற்கு ராஜாஜி கூறிய பதில் சிந்திக்க வைப்பதாகும்: ''சதாசிவம்! எனக்கு பாகவதத்தை எழுதுவதில் நாட்டமில்லை. அதில் பகவானின் லீலைகளும் அற்புதங்களும் மிகுதியாக உள்ளன. ராமாயணம், மகாபாரதம் போன்று தர்மத்துக்கும் அதர்மத்துக்கும் இடையில் நடைபெறும் போராட்டங்களாக அமையவில்லை. மனிதனுக்கு தார்மிக நெறிகளில் ஆர்வமும் நம்பிக்கையும் இந்த இதிகாசங்கள் ஊட்டுவதுபோல பாகவதத்தில் நான் காணவில்லை.''

ராமாயணம், மகாபாரதம் மட்டுமின்றி கீதை, திருக்குறள், உபநிஷதங்கள், பரமஹம்ஸரின் உபதேசங்கள், காந்திஜியின் அருளுரைகள் என்று பலவும் எழுதிய ராஜாஜி, 'கிறிஸ்துவத் துறவி லாரென்ஸ்' என்றும் ஒரு தொடர் கல்கியில் எழுதினார். லாரென்ஸின் நல்லுபதேசங்களில் ஒன்று: ''இறைவன் எப்போதும் நம் அருகில் இருக்கிறான்; நம் செயல்கள் அனைத்தையும் கவனித்துக் கொண்டிருக்கிறான். இந்த உணர்வு நமக்கு இருக்குமானால் நாம் மனமறிந்து எந்தத் தவறும் செய்ய மாட்டோம். நேர்மையும் ஒழுக்கமும் அடக்கமும் கடமை உணர்வும் நம்மிடம் தன்னால் தோன்றும்.''

பக்தி என்பதுடன் இறைவனிடம் ஓரளவு பயமும் மக்களுக்கு இருக்க வேண்டும் என்பார் ராஜாஜி. நமது முன்னோர்கள் 'பயபக்தி' என்ற சொல்லை உருவாக்கித் தந்ததைக் குறிப்பிடுவார். குற்றம் புரிந்தால் ஒருவேளை சட்டம் இன்று கண்டு கொள்ளாமல் போனால்கூட, ஆண்டவன் நின்று தண்டிப்பான் என்ற பயம் அவசியமானது என்று சொல்வார். பக்தி இல்லாத ஞானம் வெறும் ஜிகினா வேலைப்பாடு போன்றது தான் என்பது அவரது கருத்து.

ஆனால், இறையுணர்வே தேவை இல்லை என்பவரை நாம் என்ன செய்ய முடியும், அவர்களுக்காகப் பரிதாபப்படுவது தவிர? வேணுமானால்,. பகுத்தறிவுவாதியான அறிஞர் அண்ணா கூட, ''ஒன்றே குலம் ஒருவனே தேவன்''



என்பதை ஏற்றுக் கொண்டதாக அன்பழகன் அவர்கள் கல்கி பேட்டியில் அண்மையில் (20.09.09 இதழ்) கூறியிருப்பதைச் சுட்டிக்காட்டலாம்.

பகுத்தறிவுவாதப் பிரசாரம் எவ்வளவோ நடந்தும்கூட இன்றைக்கும் தமிழகத்தில் இங்கொன்றும் அங்கொன்றுமாகக் காபாலிகர்கள் சிலர் இருக்கத்தான் செய்கிறார்கள். அந்தச் சுயநலவாதிகள் மக்களின் அறியாமையைப் பயன்படுத்தி சிசுக் கொலைக்குக் கூட அவர்களைத் தூண்டு

கிறார்கள். இதுபோன்ற செய்திகள் எப்போதாவது நாளிதழ்களில் இடம்பெறத்தான் செய்கின்றன. இந்த அவலத்தை எப்படி தடுப்பது? போலி சாமியார்களிடம் (அல்லது சாமியாரிணிகள்) ஏமாந்து போகாமல் மக்களை எப்படி காப்பது? தரமான கல்வி மூலம்தான் இதுபோன்ற மூட நம்பிக்கைகளுக்கு ஆளாகாமல் மக்களைக் காக்க முடியும். 'எம்மதமும் சம்மதம்' என்ற அடிப்படையில் மெய்யான இறையுணர்வும் தேசபக்தியும் உழைப்பார்வமும் பிள்ளைப்பிராயத்திலேயே ஊட்டப்பட வேண்டும். மூட நம்பிக்கைகள் ஒழிய இதுவே வழி. கூடவே ஒருமைப்பாடும் பொருளாதார வளர்ச்சியும் தோன்றும்.



நான் பள்ளிக்கூடம் சென்ற நாட்களில் M.T. என்றும் M.I.என்றும் இரு வகுப்புகள் உண்டு. பரீட்சைகள் கிடையாது. ஆனால் பாடம் பயின்று பரீட்சை எழுதி நான் பெற்ற அறிவை விட இந்த M.T., M.I.,வகுப்புகளில் வாழ்க்கைக்குத் தேவையானவற்றை நான் அதிகம் கற்றேன். M.T. என்பது Manual Training. தோட்டக்கலை முதல் காகிதம் தயாரிப்பு வரை நேரடியாக ஈடுபடுவோம். இதன் மூலம் உடலுழைப்பின் கௌரவத்தையும் மேன்மையையும் புரிந்து கொண்டோம். மற்றது, M.I.அல்லது Moral Instruction வகுப்பு. இதில் மாணவர்களே தாங்கள் படித்த அல்லது கேட்ட நீதிக் கதைகளைக் கூறுவார்கள். நான், அப்பாவிடம் கேட்டறிந்த பிரகலாதன் கதை, துருவன் கதை, ஏகலைவன் கதை முதலியவற்றைக் கூறுவேன். அதன்பின்னர் அதன் நீதி பற்றிய விவாதம் நடக்கும். உபாத்தியாயர் எங்கள் கருத்துக்களைச் செப்பனிடுவார். (ஸாரி, வகுப்பாசிரியர் பெயர் மறந்து விட்டது; உருவம் மட்டும் நினைவில் நிழலாடுகிறது.) கிறிஸ்துவ மாணவன் ஒருவன் பைபிள் கதைகளை அழகாகச் சொல்வான்.

இந்தப் பேரியக்கத்தை நிர்வகிக்கும் ஒரு சக்தியைத்தான் இறைவன் என்று கருதி வழிபடுகிறோம்

வகுப்பாசிரியர் ஒரு சமயம் விஞ்ஞான ரீதியாக இந்தப் பிரபஞ்சம் இயங்கும் விதத்தைக் கூறினார். எல்லையற்ற வான் வெளியில் கோடானு கோடி சூரியன்கள் இருப்பதையும் அவை ஒவ்வொன்றையும் சுற்றி வரும் கிரகங்கள் பல உண்டென்றும் சொன்னார். பல்வேறு சூரிய மண்டலங்களும் ஒன்றை ஒன்று சுற்றிச் சுழன்று வருவதையும் இவை எல்லாமே ஒரு குறிப்பிட்ட காலப்பிரமாணத்துடன் நடைபெறுவதையும் விளக்கினார். இந்தத் தாளகதியில் ஒரு சிறு தவறு நேர்ந்துவிட்டாலும் உலகங்கள் ஒன்றோடு ஒன்று ஈர்க்கப்பட்டு மோதித் தகர்ந்து விடலாம் அல்லது விண்வெளியில் தறிகெட்டு ஓடும் ஆபத்துக்கு உள்ளாகலாம். அவ்வாறெல்லாம் நிகழாமல் இந்தப் பேரியக்கத்தை நிர்வகிக்கும் ஒரு சக்தியைத்தான் இறைவன் என்று கருதி வழிபடுகிறோம் என்றார். சூரிய வழிபாடு இதிலிருந்து தோன்றியதே; பின்னர் வந்தது உருவ வழிபாடு என்று சொல்லிக் கொடுத்தார். பின்னாட்களில் நான் நடராஜரின் திருஉருவத் தத்துவத்தை ஓரளவு புரிந்து கொள்ள இது அடித்தளமாக அமைந்தது.

வானாகி மண்ணாகி வளியாகி
ஒளியாகி
ஊனாகி உயிராகி உண்மையுமாய்
இன்மையுமாய்
கோனாகி யான் எனது என்று
அவரவரைக் கூத்தாட்டு
வானாகி நின்றாயை என்சொல்லி
வாழ்த்துவனே!

இஸ்லாமியர் செதுக்கும் தேர்!



ரகுமான் ஸ்தபதி

தாமிர சபையில் சந்தன சபாபதியாய் நடனமாடி நெல்லைக்குப் பெருமை சேர்க்கும் அந்த நெல்லையப்பர் உலா வர தங்கத் தேர் இல்லாதது, பக்தர்களுக்குப் பெரும் குறையாக இருந்தது. இந்த நீண்ட நாள் குறையினைத் தீர்க்க சுவாமி சங்கரானந்தா தலைமையில் தங்கத்தேர் திருப்பணிக் குழு அமைக்கப்பட்டது. இதனைத் தொடர்ந்து கடந்த வருடம் திருப்பணிக் குழுவினர் தங்கள் கைகளில் இருந்த தங்கத்தை வைத்துத் திருப்பணியைத் தொடங்கினர். திருப்பணி தொடங்கிய உடனேயே பக்தர்கள் போட்டி போட்டுக் கொண்டு நெல்லையப்பருக்குத் தங்கம் கொடுக்க, சிருங்கேரி மடமோ இரண்டு கிலோ தங்கத்தைத் தந்தது. பேட்டை முஸ்லிம் கவுன்சிலர் அப்துல் வகாப்பும்கூட தங்கம் கொடுத்திருக்கிறார் என்பது குறிப்பிடத்தக்க விஷயம்.

இதனைத் தொடர்ந்து திருப்பணிக் குழு, தங்கத்தேர் அமைக்கும் பணியைத் தொடங்கியது. இதற்கான மர வேலை மயிலாடி கல்யாணசுந்தரம் ஸ்தபதியிடம் ஒப்படைக்கப்பட்டது. தமிழ்நாடு முழுவதும் பிரபலமாய் உள்ள இருபத்திரண்டுக்கும் அதிகமான கோயில்களின் தங்கத் தேர்களுக்கு தச்சு வேலை செய்தவர் இவர்தான்.

தங்கத்தேரை இஷ்டப்படி செய்ய முடியாது. மூன்றரை அடி உயரமுள்ள உற்சவருக்கு பன்னிரண்டே முக்கால் அடி உயரத்தில் தேர் இருக்க வேண்டுமென்பது ஆகம விதியாம். சரி இதிலென்ன விசேஷம். கொஞ்சம் பொறுங்க...

தேருக்கான மரவேலை முடிந்த பின், தங்கத்தகடு பதிக்கும் பணி ரகுமான் என்ற ஒரு முஸ்லிம் ஸ்தபதியிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. இவர் மதுரையைச் சேர்ந்தவர். இந்து அறநிலையத் துறை செய்யும் எல்லாத் தேர்களுக்கும் தங்கம் பதிக்கும் பணியைச் செய்யும் ஸ்தபதி இவர்தான். ஆச்சரியத்தோடு, இந்துத் தேரைச் செதுக்கும் இந்த இஸ்லாமியரிடம் உரையாடியபோது...

"என்னோட குலத்தொழில் இது. பரம்பரை பரம்பரையாக இதைச் செய்து வருகிறோம். சுவாமிக்குத் தங்கத்தேர் செய்வது புனிதமான பணி. ஒரு முஸ்லிம் தங்கத்தேர் செய்கிறானே... ஆகம விதிப்படி தேர் இருக்குமா என்ற

சந்தேகம் பலருக்கும் இருக்கும். நான் மகாபலிபுரம் பள்ளியில் இந்து ஆகம விதிகளை முறைப்படி கற்றுள்ளேன். 1999ம் ஆண்டு மாங்காடு காமாட்சியம்மன் கோயிலுக்குத் தங்கத்தேர் செய்தேன். அந்தத் தேரை இந்து அறநிலையத்துறை அங்கீகரித்தது. இதுவரை இருபது கோயில்களுக்குத் தங்கத்தேர் செய்து கொடுத்து விட்டேன். என்னைப் பொறுத்தவரை 99 சதவிகித முஸ்லிம் பெரியவர்கள் என்னைத் தட்டிக் கொடுத்து 'மத நல்லிணக்கத்தின் அடையாளம் நீ' என்று உற்சாகப்படுத்தினார்கள். இந்துக்கள் மிகவும் சகிப்புத்தன்மை கொண்டவர்கள். என்னை முஸ்லிமாகப் பார்க்காமல் கலைஞனாகப் பார்க்கும் அவர்களின் பெருந்தன்மை என்னைச் சிலிர்க்க வைக்கிறது. நான் அல்லாவுக்குப் பயந்து உண்மையாக உழைக்கிறேன். விரதங்கள் இருந்துதான் வேலைகளை முடிக்கிறேன். இமதியாய், ரபீக் பாட்சா, சீனி முகமது, செய்யது முகம்மது, அப்துல் ஜாபர், முகமது ஜாபர், ரபீம் என மொத்தம் முப்பது முஸ்லிம் சகோதரர்கள் என்னுடன் இணைந்து பணியாற்றுகின்றனர். இஸ்லாமியர்களான எங்களை இந்துக்களோடு இணைப்பது இறை சக்தி மீதான பக்தி தான். பாகுபாடற்ற பக்தி எதையும் சாதிக்கும்'' என்ற ரகுமான், கல்கியின் இறையுணர்வுச் சிறப்பிதழை வாசிக்கும் வாசகர்களுக்கு இதய வாழ்த்துகள் என்றாரே பார்க்கலாம்! இந்தத் தன்மை இந்திய பக்தியாய்ப் பரவினால்...!

செய்திச் சித்திரம்:
சினிலோக்







முஸ்லிமாகப் பார்க்காமல் கலைஞனாகப் பார்க்கும் இந்துக்களின் பெருந்தன்மை சிலிர்க்க வைக்கிறது

ஸரஸ்வதியின் மௌன மொழிகள்

அனாதிகாலம் தொட்டே, இறையருளைப் பெற இசையும், இசைக்கருவிகளும் மூலாதாரமாகத் திகழ்ந்து வந்துள்ளன. இறைமையுடன் ஒன்றியது இசை.

இசையுடன் இணைந்தது ஸ்வரம். எழிசையாய் இறைமையைக் காணும் போதே வீணை காட்சிப்படுகிறது.

வீணை என்றதுமே சரஸ்வதிதேவியின் தரிசனக் காட்சிதான் கண்முன் வந்து நிற்கும்.

சங்கீதத்தையும், இசைக் கருவிகளுள் வீணையையும் வேதம் போற்றி உள்ளது. இசையும் வீணா கானமும் வேதம்போல் அனாதியானவை.

மனித உடலே வீணை போன்றது. வீணையின் தண்டம் சிவன்; நரம்புகள், உமாதேவி; மற்றும் விஷ்ணு, லக்ஷ்மி தெய்வாம்சத்துடன் வீணை என்றாலே சரஸ்வதி தேவிதான்!

சரஸ்வதியை வழிபட்டு அருள் பெற்றவர்கள் வியாஸர், வால்மீகி, காளிதாசர் என்பர். ஸத்யவிரதோ பாக்யானம் இதனை விரிவாகச் சொல்கிறது. வால்மீகி மூலம் ராமாயணத்தைப் பாடியதே ஸரஸ்வதிதான் என்றும் சொல்வதுண்டு.

சப்தப் பிரபஞ்சத்தின் அடிநாதமாக ஆதார சுருதியாக, பிரம்மதேவரின் சக்தியாம் வாக்பீஜம், வாக்வாதினி மஹாஸரஸ்வதியின் ரூபாந்தரமே சரஸ்வதி. 51 அக்ஷரஸ்வரூபிணி அவள். வேதங்கள் நான்கும் உபவேதங்கள் நான்கும், அங்கங்கள் ஆறுடன், நான்கு உபாங்கங்கள் என பதினெட்டு வித்யாஸ்தான நாயகி சரஸ்வதி.

சரஸ்வதியின் முன்புறத் தோள்கள் புற உலகத்தையும், பின்புறத் தோள்கள் அக உலகையும் வெளிப்படுத்துபவை. மனம், சித்தம், புத்தி, அகங்காரம் சரஸ்வதியின் மௌன மொழிகள். இடக்கையில் உள்ள புத்தகம், ஞான விளக்கம். வெண்தாமரை ஆசனம் ஞானத்தை அடையும் திடசித்தம். அன்னம், நன்மை தீமைகளைப் பிரித்து நலம் தருவது. சரஸ்வதியின் அட்சர மாலை 51 மணிகளுடன் கூடி, எழுத்து மொழியின் வடிவம். தூய்மையே ஸ்படிக மாலை. சிரமீதுள்ள பிறைச் சந்திரன் வளரும் கல்வியை நினைவூட்டும் சின்னம்.

சரஸ்வதிதேவியின் வீணை, உலகில் உள்ள மானுடரின் எண்ண உணர்வுகளை இசையாக - ஒலி வடிவாக - துதியாகும் நிலைப்பாடேயாகும்.

முதன்முதலாக வீணை உருவாக்கப்பட்டது, பிரம்ம தேவரால். வீணையை உருவாக்கி, தேவி சரஸ்வதியிடமும் நாரதரிடமும் வழங்கினார். சிவபெருமான் சரஸ்வதியிடம் வழங்கியதாகவும் சொல்லப்படுவதுண்டு.

சரஸ்வதி தேவியின் வீணையின் திருநாமம் கச்சபி என்பதாகும். அந்த வீணாகானம் வேத, இதிகாச, புராண, சரித்திர மகத்துவம் படைத்தது.

வீணையைக் குறிக்கும் இன்னொரு பெயர் சாரதா. அந்தப் பெயருடன் சிருங்கேரியில் துங்கா நதிக் கரையில் அருள்பாலிக்கிறாள் சரஸ்வதிதேவி.

டாக்டர். கே. ராமமூர்த்தி



மண்ணில் விளைந்த விபரீதம்!

தீராத விளையாட்டு விட்டலன்

''**போ**சலபாவாவின் பக்திச் சிறப்பைப் பேசி முடித்த கையோடு, டேர் கிராமத்துக்குக் கிளம்புவோம். சிறந்த விட்டல பக்தரான கோராகும்பர் எனும் குயவர் வாழ்ந்த இடம்'' என்றார் ராமநாதன். தொடர்ந்து,

''கோராகும்பர் மிக அழகாக மண் பாண்டங்கள் செய்வார். பாண்டங்கள் செய்வதைவிட அவருக்கு மிகவும் பிடித்தது பஜனை செய்வது. மண்ணைத் தன் காலால் பிசைந்தபடி நின்றுகொண்டே விட்டலனின் புகழைப் பாடுவார், ஆடுவார். கண்களை மூடிக்கொண்டு கசிந்துருகி அப்படியொருநாள் அவர் பஜனை செய்யும் போதுதான்...'' இந்த இடத்தில் ராமநாதனின் குரல் தழுதழுத்தது.

அவர் கூற வந்ததை ஜருகண்டி வேறு விதமாகப் புரிந்துகொண்டு, ''விட்டலன் வந்து அருள் புரிந்தாரா?'' என்றான்.

''இல்லை. அப்போது நடந்தது வியப்பை உண்டாக்கும் அற்புதம் அல்ல; மாபெரும் விபரீதம். கோராகும்பரின் குழந்தை தன் தந்தையை நோக்கி தவழ்ந்து வரத் தொடங்கியது.''

ஜருகண்டியின் முகத்தில் அடுத்து வருவதை யூகிக்க முடிந்த ஒரு திடுக்கிடல் தோன்றியது. ''குழந்தை கீழே கொட்டிக் கிடந்த மண்ணைப் பார்க்கவில்லையா?'' என்று கேட்டான்.

''மண்ணைப் பார்க்காத குழந்தை, மண் குவியலுக்குள் புகுந்தது. குழந்தையைப் பார்க்காத கோராகும்பரின் பாதங்கள் மண்ணின் மீது மட்டுமின்றி தன் குழந்தையின் உடல்மீதும் நடனமாடத் தொடங்கின.''

''என்ன, மண்ணுக்கும் குழந்தைக்கும் கூடவா அவருக்கு வித்தியாசம் தெரியவில்லை?''

''இல்லையே. அந்த அளவுக்கு அவர் விட்டல பஜனையில் மூழ்கிப் போயிருந்தார். வெளியே தண்ணீர் எடுக்கச் சென்றிருந்த மனைவி வீடு திரும்பியதும் எழுப்பிய அலறல்தான் கோராகும்பரை இவ்வுலகுக்கு இழுத்து வந்தது.''

தொடர்ந்தன துயரப் பக்கங்கள்.

கண்களைத் திறந்த கோராகும்பர், ''விட்டலனின் பாடல்களைப் பாடும் போது ஏன் பாதியில் குரல் கொடுத்தாய்?'' என்றார்.


எதிரே மனைவி மயங்கும் நிலைக்குச் சென்றுகொண்டிருந்ததையும், அவள் பார்வை கீழே இருந்த மண்ணின்மீது கலக்கத்துடன் பதிந்திருந்ததையும் கண்டார். சில நொடிகளுக்குப் பிறகே அவரால் நடந்ததை உணர முடிந்தது.

அவர் மனைவி பத்மாவதி, ''நான் வெளியே போய் தண்ணீர் எடுத்து வருகிறேன். குழந்தையைப் பார்த்துக் கொள்ளுங்கள்'' என்று ஒருமுறைக்கு இருமுறை கூறிவிட்டுத்தான் சென்றிருந்தாள். அப்போதும் விட்டல கீதங்களில் மூழ்கியிருந்த காரணத்தால் அவர் காதில் விழுந்த வார்த்தைகள் மனத்தில் விழவில்லை.

''ஐயோ எந்தத் தகப்பனும் செய்திருக்க முடியாத பாவத்தை நான் செய்து விட்டேனே'' - மனத்துக்குள் பிரளயமே எழுந்த போதிலும் மனைவியைச் சமாதானப் படுத்துவது முக்கியம் என்பதை உணர்ந்தார். ''நான் கொஞ்சமும் எதிர்பார்க்கவில்லை. விட்டல பஜனையில் மூழ்கியிருந்ததால்...''

அதற்குமேல் அவரைப் பேசவிடாமல் அலறினாள் பத்மாவதி. ''போதும் நீங்களும் அந்தப் பாழாய்ப்போன விட்டலனும். அந்த நன்றி கெட்ட விட்டலன் தான் என் குழந்தைக்கு எமனாக வந்துவிட்டான்.''

'விட்டலனை ஒருத்தி பழிப்பதா? அதுவும் தன் மனைவியாக இருந்து கொண்டு...' இப்படி எண்ணிய கோரா கும்பர் ஆத்திரம் பொங்க, தம்



அபங்க அமுதம்

கேசவாசே த்யான தருணி அந்தரீ
ம்ருத்திகே மாஜாரீ நாசதஸே
விட்டலாசே நாம ஸ்மரே வேளோவேள
நேத்ரீ வாஹே ஜள ஸத்கதீத
குலாலாசே வம்சீ ஜன்மலே சரீர
தோ கோராகும்பார ஹரிபக்த

- கோராகும்பர்

'கேசவனை மனத்தில் தியானம் செய்துகொண்டே களிமண் மத்தியில் ஆடுகிறேன். உணர்ச்சிவசப்பட்டு, கண்களில் நீர் வழிய விட்டலன் நாமத்தைக் கூறுகிறேன். என் உடல் குயவர் வம்சத்தில் பிறந்தாலும் நான் ஹரி பக்தன் எனும் சமூகத்தைச் சேர்ந்தவன்.'



மனைவியை நோக்கிக் கையை ஓங்கினார்.

''என்னை இனிமேல் தொடாதீர்கள். அந்த பண்டரிபுர விட்டலனின் மீது ஆணை'' என்று கர்ஜித்தாள் பத்மாவதி. ஓங்கிய கை அப்படியே நின்றது.

நாட்கள் கடந்தன. சிறிது சிறிதாகத் தன்னைச் சமாதானப்படுத்திக் கொண்டாள் பத்மாவதி. 'குழந்தையின் மீது கணவருக்கு மட்டும் அன்பு இல்லையா என்ன? குழந்தைக்கு விதி முடிந்துவிட்டது. யாரை நொந்து என்ன பயன்?' தள்ளாடி எழுந்து எளிய உணவைச் சமைத்தாள். சிலைபோல உட்கார்ந்திருந்த கணவரை நெருங்கினாள். உணவருந்த அவரை உலுக்க முயன்ற போது, சிலிர்த்து நகர்ந்தார் கோராகும்பர்.

விட்டலன் மீது ஆணையிட்டு தன்னைத் தொடக்கூடாது என்று கூறிய மனைவியை மட்டுமல்ல, அவள் சமைத்த உணவைக்கூட தொட மறுத்தார். தானே தனியாகச் சமைத்து உண்ணத் தொடங்கினார்.

மனம் வருந்தினாள் பத்மாவதி. விட்டலனின்மீது ஆணையிட்டுப் பெரும் தவறு செய்துவிட்டோமே! தவிர, வம்சம் தழைக்க ஒரு வாரிசு வேண்டுமே. என்ன செய்யலாம்? தவித்த பத்மாவதி அந்தக் காலத்தில் சகஜமாக இருந்த வேறொரு வழியைத் தேர்ந்தெடுத்தாள். தன் அப்பாவை அணுகிய அவள், ''எனக்குக் குழந்தை பாக்கியம் இல்லை போல் இருக்கிறது. என் கணவருக்கு ஒரு வாரிசு வேண்டாமா? என் தங்கையை, உங்கள் இளைய மகளை அவருக்கு இரண்டாம் தாரமாகக் கல்யாணம் செய்து கொடுங்கள்'' என்று கேட்க, தந்தையும் சம்மதித்தார்.

முதலில் மிகவும் மறுத்து, பிறகு மனைவியின் கண்ணீரைப் பொறுக்க முடியாமல் இந்த ஏற்பாட்டுக்கு ஒப்புக்கொண்ட கோராகும்பரிடம் அவரது அப்பாவி மாமனார் அசட்டுத்தனமாக ஓர் உறுதிமொழியை வாங்கிக்கொண்டார். விவரம் புரியாமல் அவர் வாங்கிக் கொண்ட சத்தியம் இதுதான். ''மாப்பிள்ளை, என் மூத்த மகளைப் போலவே இளைய மகளையும் நடத்துவேன் என்று சத்தியம் செய்து கொடுங்கள்.''

''பார்த்தாயா ருக்மணி?'' என்றபடி பண்டரிபுரத்தில் மாயப் புன்னகை செய்து கொண்டிருந்தான் விட்டலன்.



வண்ணப்படம்: **வேதா**

படம்: **ஸ்ரீஹரி**

நீங்கள் கேட்டவை

தராசு

● பி.ஜெயபிரகாஷ், சர்க்கார்பதி

? உலகிலேயே அதிகம் சம்பாதிக்கும் கிரிக்கெட் வீரர் டோனி என்று ஃபோர்ப்ஸ் பத்திரிகை கூறியுள்ளதே - இந்தியர்களுக்குப் பெருமைதானே?

! முதன்முறையாக சராசரி இந்தியக் குடிமகனின் ஆண்டு வருமானம் தற்போதுதான் மூவாயிரத்தைத் தாண்டியுள்ளது எனும்போது டோனி அதிகம் சம்பாதிப்பதில் நமக்கென்ன பெருமை? அவரது ஆட்டத்திறனும் தலைமை ஏற்று நடத்திச் செல்லும் ஆற்றலும்தான் நமக்குப் பெருமை.

● பா.அசோக், திருவில்லிப்புத்தூர்

? மாணவர்களிடையே புத்தகம் படிக்கும் பழக்கத்தை ஏற்படுத்த பள்ளிகளில் வாரம் ஒரு நாள் கட்டாய நூலக நேரம் கொண்டு வரப்பட உள்ளதாமே? இது பற்றி...?

! வாரம் ஒரு நாள் ஒரு பீரியட் இதற்கு ஒதுக்குவது என்பது நல்லதுதான். ஆனால், நடைமுறையில், முடிக்கப்படாத போர்ஷன்ஸ் நடத்தி முடிக்கவே இந்த நேரம் பயன்படுத்தப்படும். இதைத் தவிர்ப்பதுடன், எத்தகைய புத்தகங்களை மாணவர் படிப்பது என்பதற்கு பெற்றோரின் ஆலோசனையை பி.டி.ஏ.யில் பெற வேண்டும்.

● ஆர்.ரேவதி, போடிநாயக்கனூர்

? இந்து மதம் பெரும்பான்மை பெற்றதல்ல; பல்வேறு ஜாதிகளால் இந்துக்கள் பிரிக்கப்பட்டுள்ளனர் என்று அமைச்சர் பொன்முடி கூறியுள்ளது பற்றி...?

! கிறிஸ்துவ, இஸ்லாம் மதங்களிலும் கூட உட்பிரிவுகள் உண்டு; அமைச்சர்கள் அவலை நினைத்துக் கொண்டு உரலை இடிப்பதால் பயன் ஏதும் இராது.

● சீனு.சந்திரா, சென்னை - 4

? 'இன்று ஒரு தகவல்' என்று பொக்கிஷமான விஷயங்கள் தந்த தென்கச்சியார் மறைவு?

! துளிக்கூட தமது ஆளுமையைத் திணிக்காமலே லட்சக்கணக்கான ரசிகர்களை தினந்தோறும் கட்டிப் போட்டவர். அதற்கேற்ப விஷய ஞானமும் படைத்தவர். இன்



* மகிழ்ச்சி மாநாடு?

உலகத் தமிழ் மாநாடு மகிழ்ச்சி தருமா?

றைய அலட்டல் - அலம்பல் ரேடியோ ஜாக்கிகள் கவனிக்க வேண்டிய சமாசாரம் இது.

● **துரை.ராமகிருஷ்ணன், ஏரகுடி**

? **நாணயத்துடன் விளங்கியவர் அறிஞர் அண்ணா என்றும், அவருக்கு நாணயம் வெளியிடுவது மிகவும் பொருத்தமானதே என்றும் கருணாநிதி பேசியது..?**

! சரியாகத்தான் பேசியுள்ளார். நாணயம் அண்ணா காலத்துடன் முடிந்து போயிற்று என்பதை உணர்த்த நாணயம் வெளியிடுவது பொருத்தமானதுதானே.

● **ஆர்.வி.ஜெயச்சந்திரன், பூனாம்பாளையம்**

? **கோவையில் உலகத் தமிழர் மாநாடு- கலைஞரின் அறிவிப்பு உலகத் தமிழர்களிடையே மகிழ்ச்சியைத் தருமா?**

! அறிவிப்பு மகிழ்ச்சியைத் தரும். தமிழ் கூறு நல்லுலகமெங்கும் மாநாடு திருப்தியைத் தருமா என்பது, அது எவ்வாறு திட்டமிட்டு எப்படி நடத்தப்படுகிறது என்பதைப் பொறுத்த விஷயம்.

● **பி.என்.ஜெய்சங்கர், திருவாரூர்**

? **'கல்வி என்பது ஒரு மனிதனை வாழ்வுக்குத் தகுதிப்படுத்துவது, வாழ்க்கையை அர்த்தப்படுத்துவது' என்கிற நிலையிலிருந்து மாறியிருக்கிறதா?**

❐ ரூ.150 பரிசு பெறுபவர் :
பா.அசோக்,
திருவில்லிப்புத்தூர்

! மாறவில்லை; அந்த உயர்நோக்கிலிருந்து முற்றிலும் விலகியேவிட்டது!

● **ஜி.ஜெயராமன், கூந்தலூர்**

? **சிதம்பரம் நடராஜர் கோயிலை அரசு ஏற்றுக் கொண்டது சரி என்று ஹைகோர்ட் தீர்ப்பளித்துள்ளதே?**

! மேல் முறையீடு செய்யப்பட்டுள்ளதே!

● **உமரி பொ.கணேசன், மும்பை** ★

? **அரசு ஊழியர்களுக்கு எவ்வளவு சம்பள உயர்வு கொடுத்தாலும் கிம்பளம் வாங்குவது குறையவில்லையே, ஏன்?**

! சம்பளம் ஆபீஸ் வருவதற்கு; கிம்பளம் வேலை செய்வதற்கு என்ற அரசுப் பணி கலாசாரத்தை அரசியல்வாதிகள் உருவாக்கி நிலைநிறுத்தியிருப்பதால்தான்!


● **நாகலிங்கம், பெரம்பூர்**

? **யு.எஸ்.ஓபனில் ஃபெடரர் ஆதிக்கத்துக்கு முற்றுப்புள்ளி வைத்த ஜுவான் மார்டின் டெல் போட்ரோவின் சாதனை குறித்து?**

✱ இடிக்கும் உரல்!



✱ சம்பாத்திய சாதனை



✱ தளும்பாத நிறைகுடம்!



★ ரூ.75 பரிசு பெறுபவர் :
உமரி பொ.கணேசன்,
மும்பை - 37

! உழைப்பால் உயர்ந்த இவரது உடலின் உயரமும் கூடுதலாக உதவியிருக்கிறது இந்தப் புதிய உயரத்தைத் தொட! ஃபெடரரின் ஆதிக்கத்துக்கு முற்றுப்புள்ளி வைக்கலாம்; அது இயற்கை. ஆனால் அவர் சாதனைகளை முறியடிப்பது வேறு விஷயம் - மெத்தக் கடினம்!

● **எஸ்.கண்ணன், கடுக்காய்வலசை**

? அரசியல் - சினிமா இரண்டுக்கும் உள்ள வேறுபாடுகள் என்ன...?

! மேக்கப்தான்!

● **ரேவதிப்ரியன், ஈரோடு**

? நன்கு படித்த சசி தரூர் போன்ற அமைச்சர்களின் பேச்சு சில சமயம் வரம்பு மீறுகிறதே?

! அது பேச்சு இல்லை; இணையதளத்தில் பதிவு செய்யப்பட்ட கிண்டல். அதற்கு எதிர்ப்பு கிளம்பியபோது, சோனியாவிடமும் பிரதமரிடமும் அவர் விளக்கவுரை தந்தது உப்பில்லா கண்டல்! 'கால்நடை வகுப்பில்' பயணம் செய்வோர் போட்ட வோட்டுக்களின் பலத்தில்தான் நீங்கள் அமைச்சராக இருக்கிறீர்கள் என்று அவருக்கு உணர்த்தப்பட்டது தண்டல்!

● **மு.பெரியசாமி, விட்டுக்கட்டி**

? பாகிஸ்தானியர்கள் தீவிரவாதிகளாக மாறுவதற்குக் காரணம் இந்தியாதான் என்று முஷாரஃப் கூறுகிறாரே?

! பயங்கரவாதத்தைச் சந்திக்க அமெரிக்கா வழங்கிய போர்த்தளவாடங்கள், இந்தியாவுக்கு எதிராகத் திசைதிருப்பி ஆயத்த நிலையில் வைக்கப்பட்டன என்பதை ஒப்புக்கொண்ட முஷாரஃப், தற்போது பாகிஸ்தானியர் தீவிரவாதிகளாக மாறியுள்ளதையும் ஒப்புக் கொண்டிருக்கிறார். அதற்கு அவர் கூறும் காரணம் அபத்தம் என்பதை உலகம் அறியும். ஆனால் அவர் நிலையில் அவர் வேறு எப்படிப் பேச முடியும்?

● **ஜி.ரெஜினா பானு, பழனி**

? அரசியலில் விரைவில் விஜய் - ராகுல் கூட்டணி அமையும் என்று எதிர்பார்க்கலாமா?

! அத்தகைய எதிர்பார்ப்புடன் மீடியா ஏற்படுத்திய பரபரப்பு புஸ்வாணமாகி விட்டதே!


✵ கிண்டலுக்குத் தண்டல்!



✵ ஒப்புக்கொண்ட உண்மைகள்!



✵ உயர உயர...!



ஒரு மிகப்பெரிய குற்றம்

சென்னை சென்ட்ரல்.

முன்னிரவு பதினொரு மணி. ஸ்டேஷனின் பதினொன்றாவது ப்ளாட்பாரத்திலிருந்து வெளிப்பட்டான் புவன். இளைஞன். ஆறடி உயரம். கண்களில் டே அண்ட் நைட் ரேபானின் மெலிதான ஊதாநிற காக்கிள்ஸ்

பயணிகளை மறித்து, ''ஸார்... கால் டாக்ஸி'' என்று கேட்டுக் கொண்டிருந்த அந்த ட்ரைவரை நெருங்கினான் புவன்.

''கே.கே.நகர் போகணும்...''

''கே.கே.நகர்ல எந்த இடம் ஸார்?''

''ராகவா காலனி ஃபிஃப்த் க்ராஸ்ல மானசரோவர் அபார்ட்மெண்ட். போகணும்...''

''வாங்க ஸார்...''

பூந்தமல்லி ஹைவே ரோட்டில் வேகம் பிடித்தது டாக்ஸி. ரோடு மழையில் நனைந்திருந்தது.

''ட்ரைவர்... அதோ... அந்தக் கடைக்குப் பக்கத்தில் டாக்ஸியை ஒரு நிமிஷம் நிறுத்து!''

''ஏதாவது வேணுமா ஸார்?''

''ஆமா...! சிகரெட் வாங்கணும்...''

ட்ரைவர் டாக்ஸியின் வேகத்தைக் குறைத்தான்.

''நான் வாங்கிட்டு வர்றேன் ஸார்... என்ன சிகரெட் ஸார் வேணும்...?''

''சான்ஸ்லர்..''

''ஸார்...! அது காஸ்ட்லி சிகரெட். இது மாதிரியான பெட்டிக்கடையில் எல்லாம் இருக்காது ஸார்.''

புவன் சிரித்தான். ''ட்ரைவர்...! நான் வழக்கமாய் ரயிலை விட்டு இறங்கி வரும்போது இந்தப் பெட்டிக் கடையில் தான் சிகரெட் வாங்கறது வழக்கம்.''

நூறு ரூபாய் நோட்டை எடுத்துக் கொடுத்தான். அந்த நிமிஷம் முடிவதற்குள் சான்ஸ்லர் சிகரெட் பாக்கெட்டோடு வந்தான் ட்ரைவர்.

டாக்ஸி நகர்ந்து வேகம் பிடித்தது. மழையின் தூறல் இப்போது கொஞ்சம் அதிகப்பட்டு இருந்ததால், டாக்ஸியின் வைப்பர்கள் வேகமாய் இயங்கி நீரை வழித்தன.

புவன் சிகரெட் ஒன்றை லைட்டரில் பற்ற வைத்துக் கொண்டு புகைவிட்டபடி கேட்டான்.

''ட்ரைவர்...! நீ சிகரெட் பிடிப்பியா?''

''பிடிப்பேன் ஸார்...''

''பின்னே... என்ன... இந்தா... நீயும் ஒண்ணைப் பிடி.''

''தேங்க்ஸ் ஸார்...'' ட்ரைவர் ஒரு சிகரெட்டை எடுத்துக் கொண்டான். டாக்ஸியின் வேகத்தைக் குறைத்து, லைட்டரில் பற்ற வைத்துக் கொண்டான்.

''உன் பேர் என்ன?''

''எத்திராஜ் ஸார்...''

13 க்ரைம்.காம்

''எத்தனை வருஷமா வண்டி ஓட்டறே?''

''இந்த ஸ்டியரிங்கைப் புடிச்சு அஞ்சு வருஷமாச்சு ஸார்...''

ட்ரைவர் எத்திராஜ் சொல்லிக்கொண்டு இருக்கும்போதே, புவனின் ஷர்ட்பாக் கெட்டில் இருந்த செல்ஃபோன் அழைத்தது.

மனைவி ஜெயந்தி.

''சொல்லு... ஜெயந்தி...''

''என்ன ட்ரெய்ன் வந் தாச்சா...?''

''வந்தாச்சு... கால்டாக்ஸியில் வந்துக்கிட்டு இருக்கேன்.''

ராஜேஷ்குமார்

''போன வேலை...?''

''கோர்ட்ல இன்னிக்கு ஃபைனல் ஆர்க்யூமெண்ட். பிச்சு உதறிட்டேன். க்ளையண்ட்டுக்கு ஏகப்பட்ட சந்தோஷம்...''

''சரி... வாங்க... வெயிட் பண்ணிட்டிருக்கேன்.'' - செல் ஃபோனை அணைத்து ஷர்ட் பாக்கெட்டில் போட்டுக் கொண் டான்.

ட்ரைவர் எத்திராஜ் கேட் டான்.

''ஸார்... நீங்க லாயரா?''

''ஆமா...''

''பார்க்கிறதுக்கு ஒரு ஹீரோ மாதிரி இருக் கீங்க.''

பேசிக்கொண்டே போன ட்ரைவர் டாக்ஸி யின் வேகத்தைச் சட் டென்று குறைத்தான்.

''என்ன டிரை வர்...?''

''ஸார்... தொண்டை கொஞ்சம் கமறலாய் இருக்கு. கொஞ்சம் தண்ணி குடிச்சுக்கிறேன்.''

ரோட்டோரமாய் இருந்த ஒரு மரத்துக்குக் கீழே கொண்டு போய் நிறுத்திவிட்டு, டாஷ் போர்டிலிருந்து மினரல் வாட்டர் பாட்டிலை எடுத்தான். எடுக்க எடுக்கவே அவனுக்கு வியர்த்தது. உடம்பு ஒரு நடுக்கத்துக்கு உட்பட்டது.



படம் :
ஆர்.கண்ணன்,
கடலூர்



"அப்பா! பகவான் இப்படியா உலகத்தை அளந்தாரு?"
"தெரியலையே செல்லம்!"
"என்னதான் தெரியும்பா?"
" நீ என் உலகம்னு தெரியும்மா!"

வாய் குழறியது.

''ஸ....ஸார்... தலை லேசாய் சுத்தற மாதிரி இருக்கு ஸார்.''

சொல்லச் சொல்லவே சட்டென்று நெஞ்சைப் பற்றிக் கொண்டான் எத்திராஜ்.

''ஸ... ஸா... ஸார்... தொண்டையெல்லாம் எரியுது. நெ...நெஞ்செல்லாம் அ... அ... அடைச்சு அடைச்சு விடுது... எ... எ... என்னால் மூ... முச்சுவிட முடியலை... ஸார்...''

எத்திராஜ் படும் அவஸ்தையை புவன் ஒரு புன்னகையோடு பார்த்தான். ''என்னது...! மூச்சுவிட முடியலையா...? ரெண்டு நிமிஷத்துக்கு அப்படித்தான் இருக்கும். அப்புறம்... நீ மூச்சையே விடவேண்டிய அவசியம் இருக்காது.''

எத்திராஜ் திடுக்கிட்டுப் போய்ப் பார்க்க, புவனின் புன்னகை 70 எம்.எம். திரை போல் விரிந்தது.

''என்ன பார்க்கிறே? கொஞ்சம் நேரத்துக்கு முந்தி பெட்டிக் கடையில் நீ வாங்கிக் கொடுத்த சிகரெட் வேற. நான் உனக்குக் கொடுத்த சிகரெட் வேற. நான் கொடுத்த சிகரெட்ல நுரையீரலுக்குப் பிடிக்காத அகோனைட் கலந்து இருக்கும். அதனால்தான் உனக்கு இந்த மரண அவஸ்தை. இந்த அவஸ்தை இன்னும் சில நிமிஷங்களுக்குத் தான்! உயிர் போன பின்னாடி இந்த அவஸ்தை இருக்காது.''

கைகளுக்கு க்ளவுஸ் மாட்டியபடி புவன் கண்ணடித்தான்.

''என்ன எத்திராஜ்... அப்படி பார்க்கிறே...? இந்த மரண அவஸ்தையில் ஒரு கேள்வி உன்னோட மனசை நெருடலாம். 'ஒரு டாக்ஸி டிரைவரை நான் எதுக்காகக் கொலை செய்யணும்?' இது தானே உன்னோட நெருடல்...? காரணம் இல்லாமே கரப்பான் பூச்சியைக்கூட சாகடிக்கமாட்டேன். நீ டாக்ஸி ட்ரைவர் மட்டும் இல்லை. ஒரு பிம்ப். குடும்பப் பெண்களையும், கல்லூரி மாணவிகளையும் குறிவைத்து வேட்டையாடுகிற பிம்ப். சில பணக்கார இளைஞர்களுக்காக நீ பண்ற இந்த சேவைக்கு இன்னிக்கு முற்றுப்புள்ளி வைக்கத்தான் ரயில்ல இருந்து இறங்கிவர்ற ஒரு பாஸஞ்சர் மாதிரி நடிச்சு உன் டாக்ஸியில் ஏறினேன். நான் உன்கிட்ட பேசினதில் ஒரே ஒரு விஷயம் மட்டும் உண்மை. அது நான் லாயர் என்கிற விஷயம்...''

புவன் பேசிக் கொண்டிருக்கும்போதே ட்ரைவர் எத்திராஜ் சட்டென்று தன் வலது கையை உயர்த்தி புவனின் முகத்தைப் பற்றி இழுத்தான். ''ழே... ழேய்... உன்னை...!'' குரல் குழறியது. புவனின் கன்னச்சதையைப் பிடித்து அழுத்த, குளிர்கண்ணாடி தெறித்து விழுந்தது.

ஒரு நிமிஷப் போராட்டத்துக்குப் பின் எத்திராஜின் பிடி தளர்ந்தது. தலை கொஞ்சம் கொஞ்சமாய் சாய்ந்தது.

புவன் ஒரு பெருமூச்சு விட்டபடி சாலையைப் பார்த்தான். எந்த ஒரு நபரோ வாகனமோ பார்வைக்குக் கிடைக்காமல் போனதில் நிம்மதி அடைந்தவனாய் குளிர்கண்ணாடியை எடுத்துப் பொருத்திக் கொண்டான். தன்னுடைய ப்ரீப்கேஸை எடுத்துக்கொண்டு கீழே இறங்கினான். ஒரு குறுக்குச் சந்தில் புகுந்து, மறுபக்கம் இருந்த பிரதான சாலைக்கு வந்து ஆட்டோ பிடித்தான்.

''அடையாறு போகணும்...''

இன்ஸ்பெக்டர் விஜயகுமார் கொடுத்த போஸ்ட்மார்ட்டம் ரிப்போர்ட்டை வாங்கிப் பார்த்த சாதுர்யா கேட்டாள்.

''டாக்ஸி ட்ரைவர் எத்திராஜ் மரணத்துக்குக் காரணம் விஷம் தோய்ந்த சிகரெட்ன்னு ரிப்போர்ட் சொல்லுது. பட் அது எதுமாதிரியான விஷம்னு மென்ஷன் பண்ணலையே?''

''எத்திராஜோட நுரையீரல் போர்ஷனை கெமிக்கல் லேபுக்கு அனுப்பியிருக்காங்க. மிஸ் சாதுர்யா...! அதனுடைய ரிசல்ட் நம் கைக்குக் கிடைக்க எப்படியும் ஒரு வாரம் ஆயிடும்.''

''எத்திராஜ் பீடி குடிக்கிற பேர்வழி. ஆனா டாக்ஸியில் ட்ரைவிங் சீட்டுக்குக் கீழே சான்ஸ்லர் சிகரெட் துண்டு இருந்தது. அதை அவனுக்குக் கொடுத்தது யார்ன்னு தெரியலை.''

''நேத்து ராத்திரி பதினொரு மணி சுமார்க்கு சென்ட்ரல் ஸ்டேஷன் வாசல்ல நின்னுக்கிட்டு, வர்ற பயணிகள்கிட்டே சவாரி பிடிக்கப் பேசியிருக்கான். அதை டாக்ஸி ஸ்டாண்ட்ல இருந்த சக டாக்ஸி ட்ரைவர்ஸ் பார்த்து இருக்காங்க. ஆனா எந்த பாஸஞ்சரை தன் டாக்ஸியில் ஏத்திக்கிட்டுப் போனான்னு யாரும் பார்க்கலை. போஸ்ட்மார்ட்டம் ரிப்போர்ட்படி எத்திராஜ் மரணம் 11.15க்கு நிகழ்ந்திருக்கு. அதாவது டாக்ஸி புறப்பட்டுப் போன பதினைந்து நிமிஷத்துக்குள்ளே சம்பவம் நடந்து இருக்கு...''

''எத்திராஜ் ஆள் எப்படி?''

''விசாரணை பண்ணினேன்... ஆள் சரியில்லை. ட்ரைவர் வேலை தவிர பிம்ப் வேலையும் பார்த்து இருக்கான்.''

''மிஸ்டர் விஜயகுமார்...! இந்த கேஸ்ல நமக்கு உபயோகமாய்க் கிடைச்சிருக்கிற

உருவம் எதற்கு?

மனத்தை ஒருமுகப்படுத்தும் ஆற்றல் குறைந்த மக்களுக்காகவே, உருவ வழிபாட்டு முறையை ஆகமங்கள் அறிமுகம் செய்தன. ''ஒரு வடிவம் இல்லாமல் கடவுளை எவ்வாறு தியானிப்பது? கடவுளுக்கு ஒரு வடிவம் கொடுக்காவிட்டால், தியானம் செய்யும் மனத்தை எங்கே நிலைநிறுத்துவது? தியானம் செய்யும் இலக்கு ஒன்று இல்லாவிட்டால், மனம் எளிதில் நழுவி விடும்; அல்லது நீள் துயில் நிலையில் ஆழ்ந்துவிடும்'' என்று விஷ்ணுசம்ஹிதை கூறுகிறது. எனவே, மனத்தால் தொகுத்துரைக்க முடியாத பரம்பொருளிடம் மனத்தை நிலைபெறச் செய்ய, ஒரு உருவச் சிலை தேவைப்படுகிறது என்பது தெளிவாகிறது.

- 'தமிழ் இலக்கியங்களில் வைணவம்' என்ற நூலில் இந்திரா பார்த்தசாரதி.

- சசி



சாதுர்யா சக்ஸஸ் - 12

சாதுர்யா பேசறேன்.

பாஸ்கரைக் கொலை செய்ய வேணு பயன்படுத்திய ஆயுதம் பனிக்கட்டியில் செதுக்கிய கத்தி. இந்தக் கத்தியை ஃப்ளாஸ்க்கில் மறைச்சு எடுத்துட்டு வந்து பாஸ்கரைக் கொலை செய்திருக்கான். அப்புறம், தான் கொண்டு போயிருந்த சூடான பாலை ஃப்ளாஸ்க்கில் ஊற்றி வைத்துவிட்டான். போலீஸ் வருவதற்குள் கத்தி உருகிவிட்டதுதான், இரத்தம் அடர்த்தியில்லாமல் இருந்ததுக்குக் காரணம்... சரியான விடையை யூகித்து எழுதிய வாசகர்கள் விவரம் வட்டமேஜை பக்கத்தில்...



ஒரே தடயம் இதுதான்.'' சொல்லிக் கொண்டே ஒரு சின்ன பாலிதீன் பையில் பத்திரப்படுத்தி வைத்திருந்த சிறிய பளபளப்பான பொருளை எடுத்துக் காட்டினாள்.

''எத்திராஜோட உள்ளங்கையில் ஒட்டிக்கிட்டு இருந்த இதை வெச்சு கொலையாளியைக் கண்டுபிடிக்க முடியும்ன்னு நினைக்கிறீங்களா மிஸ் சாதுர்யா...?''

''ஏன் முடியாது...?''

''சென்னை ஜனத்தொகையில் பத்துக்கு ஐந்து பேர் இதை யூஸ் பண்றாங்க. இது ஒண்ணும் ரேர் டைப் இல்லையே... வெரி காமன்... ஏன் இதை ட்ரைவர் எத்திராஜ்கூட யூஸ் பண்ணியிருக்கலாம்...''

''ஐ... அக்ரி வித் யூ மிஸ்டர் விஜயகுமார். டாக்டர் ஹரிகிருஷ்ணன்கிட்டே இன்னைக்கு மத்தியானம் அப்பாயிண்ட்மெண்ட் கேட்டிருக்கேன். அவர்கிட்டே இந்தத் தடயத்தைக் காட்டினா இதனோட ஜாதகத்தையே சொல்லிடுவார்.''

மத்தியானம் மூன்று மணி.

டாக்டர் ஹரிகிருஷ்ணன் சாதுர்யாவை வரவேற்று இருக்கையைக் காட்டினார்.

''ஸாரி... டாக்டர்...! உங்களுக்காக நிறைய பேஷண்ட்ஸ் வெயிட் பண்ணிட்டிருக்காங்க.''

''ஸோ வாட்... நீங்க ஒரு பப்ளிக் சர்வண்ட். உங்களுக்கு உதவி பண்றதும் என்னோட கடமைதானே...?

சாதுர்யா பாலிதீன் உறைக்குள் பத்திரப்படுத்தி வைத்திருந்த வட்டமான, பளபளப்பான அந்தப் பொருளை எடுத்து டாக்டரின் உள்ளங்கையில் வைத்தாள். அது எங்கு எப்படி கிடைத்தது என்கிற விவரத்தைச் சொல்ல, டாக்டர் புன்னகைத்தார்.

''இது ஒரு நல்ல தடயம்தான். இது மட்டும் ரேர் டைப்பாய் இருந்துட்டா கொலையாளியை ஓரளவுக்கு நெருங்கிடலாம்'' - சொன்னவர் ஒரு கூர்மையான சின்ன இடுக்கியால் அதை எடுத்து

சோதனை செய்து பார்த்துவிட்டு சாதுர்யாவை ஏறிட்டார்.

''காட் இஸ் கிரேட்...! மிஸ் சாதுர்யா இது வெரி ரேர் டைப் அண்ட் இம்போர்ட்டட். ரொம்பவும் காஸ்ட்லி. இதனுடைய விலை கிட்டத்தட்ட ஒரு லட்சம்... பெரிய பணக்காரர்களால் மட்டுமே இதை நினைச்சுப் பார்க்க முடியும். இதனோட பளபளப்பு கண்டிஷனைப் பார்க்கும்போது சமீபத்துலதான் வாங்கப்பட்டிருக்கணும். அப்படி வாங்கப்பட்டிருந்தால் சிட்டியில் இருக்கிற ஒரே ஒரு ஆதரைஸ்ட் டீலரான மெடிக்கல் சென்டர்ல இருந்துதான் வாங்கப்பட்டு இருக்கணும். நீங்க உடனே மெடிக்கல் சென்டர்க்குப் போங்க... அங்கே அனந்த நாராயணன்னு ஒரு பார்மஸிஸ்ட் இருப்பார். அவர் உங்களுக்கு ஹெல்ப் பண்ணுவார்.''

''தேங்க்யூ டாக்டர்...!''

சாதுர்யா எழுந்து கொண்டாள்.

நண்பரோட ஆத்மா சாந்தி அடையறதுக்காக எத்திராஜை விஷ சிகரெட் குடுத்துத் தீர்த்துக்கட்டியது எந்த வகையிலும் நியாயமில்லை. நீங்க என்னதான் துல்லியமாய் திட்டம் போட்டுக் கொலை பண்ணினாலும் ஒரு சின்ன தடயத்தின் மூலமா நீதி தேவதை உங்களைக் காட்டிக் கொடுத்துட்டா. ஸ்டேஷனுக்குப் போலாமா மிஸ்டர் புவன்?''

புவன் எழுந்தான். பக்கத்தில் நின்று அழுதுகொண்டிருந்த மனைவி ஜெயந்தியின் தோளைத் தொட்டான்.

''அழாதே ஜெயந்தி...! ஒரு நல்ல மனுஷனை நான் கொலை பண்ணலை. ஒரு குற்றவாளிக்கு மரணதண்டனை கொடுத்த ஒரு நீதிபதிக்கு என்ன மனநிறைவு இருக்குமோ... அந்த மன நிறைவு இப்ப என்கிட்டே இருக்கு...''

மனைவியிடம் சொல்லிவிட்டு, சாதுர்யாவைப் பின் தொடர்ந்தான்.

●

அடையாறு இந்திரா நகரின் மையத்தில் இருந்த அந்த ஆடம்பரமான பங்களாவின் ஏ.ஸி. அறைக்குள் பதற்றமாய் நகம் கடித்தபடி புவன் உட்கார்ந்திருக்க, எதிரே சாதுர்யா.

''மிஸ்டர் புவன். நீங்க லா படிச்சவர்..! உங்க தாத்தாவும், அப்பாவும் லாயர்ஸாய் இருந்து நிறைய சம்பாதிச்சுக் குடுத்துட்டுப் போயிருக்காங்க. குடும்பம் நடத்த ஒரு அழகான மனைவி. வாழ்க்கை இவ்வளவு வசதியாய் இருக்கும்போது ஒரு டாக்ஸி ட்ரைவரைக் கொலை செய்யற எண்ணம் உங்களுக்கு வந்து இருக்கக் கூடாது. உங்க நண்பரோட மனைவியும் மகளும் பலாத்காரத்தால் கொலை செய்யப்பட்டதுக்குக் காரணம் எத்திராஜ்தான்னு தெரிந்ததும் நீங்க போலீஸ்ல இன்ஃபார்ம் பண்ணியிருக்கணும். அதை விட்டுட்டு தற்கொலை பண்ணிக்கிட்டு செத்துப்போன உங்க

துப்பறியும் போட்டி-13

வாசகர்களே!

புவன்தான் கொலையாளி என்று தீர்மானிக்க சாதுர்யாவுக்குக் கிடைத்த அந்தத் தடயம் என்ன?

இதற்கு க்ளூ கொடுத்தால் உங்களுடைய துப்பறியும் திறமையை நான் அவமதித்ததுபோலாகிவிடும். எனவே... நோ க்ளூ...

சரியான பதிலை போஸ்ட் கார்டில் எழுதி, துப்பறியும் போட்டி - 13 என்று குறிப்பிட்டு கல்கி முகவரிக்கு அனுப்புங்கள்.

ஆசிரியர் தீர்ப்பே இறுதி. கடைசி தேதி: 30.09.09.



வி.ஐ.பி

அவரவருக்கென்று உரிய இஷ்ட தெய்வத்திடம் மனம் ஒன்றுகையில் தங்களைச் செல்லக் குழந்தைகளாகவே எண்ணிக் கொள்வர். தங்கள் இஷ்ட தெய்வங்கள் பற்றி சில வி.ஐ.பி. பக்தர்கள் இங்கே மனம் திறக்கின்றனர்.

நடிகை சரண்யா மோகன்

''நம்மை நாம் உணர உணர்த்துவது எதுவோ அதுதான் பக்தி. கண் மூடி மனத்தில் இறைவனை நிறுத்திதான் நான் எந்தச் செயலையும் தொடங்குவேன். என் பக்தியின் வெளிப்பாடு அவ்வளவுதான். என்னோட எல்லா வெற்றிக்கும் ஆலப் புழை அருகே உள்ள கொத்தன் குளங்கரா அம்மன்தான் காரணம்.''

நடிகர் எம்.எஸ்.பாஸ்கர்

''பட்டுக்கோட்டை அருகே முத்துப் பேட்டையிலுள்ள வீரனார் என்னுடைய குலதெய்வம். வேழமுகத்தான், வேளாங் கண்ணி, நாகூர் ஆண்டவர் இந்த மும்மத சாமியும் என்னோட இஷ்ட தெய்வங்கள். பக்தி என்பது என்னுடைய தனிப்பட்ட உணர்வு. அதை நான் உணர்த்த முடியாதுன்னுதான் நினைக்கிறேன்.''

நடிகர் விவேக்

''தென்னாடுடைய சிவனும் ஆழ்வார் பேட்டை ஆஞ்சநேயரும் எனக்குப் பிடிச்சவங்க. ஆனா இப்போ பக்தி என்ற முதல் படியைத் தாண்டி தியானம் மூலம் பிரபஞ்சத் தத்துவத்தை அறியும், உணரும் ஆன்மிகத் தேடலுக்கு ட்ராவல் ஸ்டார்ட் பண்ணி இருக்கிறேன். மத்ததை இனிமேல் தான் சொல்ல முடியும்.''



✱ சார்ஜ் செய்ய சாமி



✱ ஐந்தாவது தெய்வம்



✱ அவருடனானதுதான்

விஜயகாந்த்

''சிறுவனாக இருக்கும்போது அப்பாவுடன் தவறாமல் குலதெய்வமான வீர சின்னம்மாள் கோயிலுக்குச் செல்வேன். இப்போது வருடத்துக்கு ஒருமுறை கட்டாயம் செல்கிறேன். தன்னைத் தானே வருத்திக் கொள்ளுதல்கூட பக்தியின் வெளிப்பாடு தான். விரதங்கள் அந்த வகைதான். நாற்பத்தெட்டு நாட்கள் விரதமிருந்து சபரிமலைக்கு பல்லாண்டுகளாகச் சென்று வந்திருக்கிறேன். இப்போது வருடா வருடம் சஷ்டிக் காலத்தில் விரதமிருக்கிறேன். அச்

பக்தர்கள்

சமயங்களில் அருகிலுள்ள முருகன் கோயிலுக்கு கண்டிப்பாகச் செல்வேன்.''

இல.கணேசன்

''பிரதிபலன் எதிர்பாராமல், தேவைகளுக்கான தேடல் இல்லாமல் ஆண்டவனின்

பக்தி என்பது முதல் படி



* நம்மை நாம் உணர...



* என்னைத்தானே வருத்தி...

பாதங்களில் சரணடைவதே பக்தி. அது ஒரு உள்ளார்ந்த உறவு. 'ஆண்டவன் நம்மைக் காத்து ரட்சிப்பான்' என்ற முழு நம்பிக்கை வேண்டும். இதற்கு உதாரணம் திரௌபதிக்குக் கண்ணன் உதவ வந்தது. சிவபெருமான் மீது உள்ள பெரும்பக்தியால் கண்ணப்பன் கண்ணையே கொடுத்தது மற்றொரு உதாரணம்.

மாதா, பிதா, குரு, தெய்வம் என்று பக்தியைச் செலுத்தும் வரிசையில், தேசத்தையும் சேர்த்துக் கொள்ளவேண்டும். அதனால்தான் பாரதமாதாவை தெய்வமாக வணங்கும் ஆர்.எஸ்.எஸ். காலைநேரப் பயிற்சிகளுக்கு விரும்பிச் செல்கிறேன்.

கார்த்தி சிதம்பரம்

''பக்தி என்பது உங்களது அந்தரங்கம் என்பது என் கருத்து. அதை வெளிப்படுத்துவதோ, வெளிக்காட்டிக் கொள்வதோகூடத் தேவையற்றது. அது ஒரு ஹாட் லைன் போன்றது. உங் களது பக்தி தூய்மையாக, பலன் எதிர்பாராமல், சுயநலக் கலப்பில்லாமல் இருந்தால் அந்த ஹாட் லைனின் மறு முனையில் கடவுளின் குரலைக் கேட்க முடியும். ஆனால், அது உயர்ந்தபட்ச நிலை. அதை அடைய முயல வேண்டும். மற்றொரு முக்கிய விஷயம், உங்கள் பக்தியோ அல்லது அது தொடர்பான செயல்பாடுகளோ மற்றவர்களை எந்தவிதத்திலும் காயப்படுத்தாமல் இருக்க வேண்டும். நான் பழநி முருகன் பக்தன். குறைந்த பட்சம் மாதம் ஒருமுறை அவர் சன்னிதிக்குச் சென்று என்னை 'சார்ஜ்' செய்து கொள்கிறேன்.''

சீர்காழி சிவசிதம்பரம்

''சுமார் முப்பது ஆண்டுகளுக்கு முன்பு, என் தந்தையின் அணுக்கத் தொண்டரான கவிஞர் நெமிலி எழில்மணிக்கு ஆற்றங்

கரையில் கட்டை விரல் அளவே உள்ள ஒரு தேவியின் திருவுருவம் கிடைத்தது. அவர் 'பால திரிபுர சுந்தரி' என்று பெயரிட்டு, தம் வீட்டிலேயே வைத்து பூஜிக்கத் தொடங்கினார். இன்று அவரது இல்லமே பாலதிரிபுர சுந்தரி பீடமாக மலர்ந்து, ஏராளமான பக்தர்களை ஈர்த்துக் கொண்டிருக்கிறது. அங்கே நவராத்திரி முதல் நாள் என் தந்தையார் கச்சேரி செய்வதும் தொடர்ந்து பிற வித்வான்களின் கச்சேரிகள் நடப்பதும் ஆரம்பம் முதலே வழக்கம். என் தந்தையாரின் மறைவுக்குப் பிறகு முதல் நாள் கச்சேரியை நான் சிரத்தையுடன் செய்து வருவது எனக்குக் கிடைத்த இறையருள். அந்த பால திரிபுர சுந்தரி அன்னை என்னுடைய எல்லா வேண்டுதல்களையும் நிறைவேற்றி வைக்கிறாள். எனது பக்தி அவளுடனானதுதான்.''

"வேழமுகத்தான், வேளாங்கண்ணி, நாகூர் ஆண்டவர் இந்த மும்மதத்து சாமியும் என்னோட இஷ்ட தெய்வங்கள்"

ஆன்மிகச் சொற்பொழிவாளர் நாகை முகுந்தன்

''எனக்குப் பிரியமான ஸ்தலம் நாமக்கல். அங்குள்ள நரசிம்மரும், ஆஞ்சநேயரும் என் இஷ்ட தெய்வங்கள். ஸ்ரீநரசிம்மரை நான் இந்த ஃபாஸ்ட் ஃபுட் கல்சர் காலத்துக்கு மிகவும் உகந்த கடவுள் என்று சொல்வேன். எப்படி? நரசிம்மாவதாரம் ஒரு இன்ஸ்டன்ட் அவதாரம். பிரகலாதன் கூப்பிட்ட மறுகணம் தூணில் அதிரடியாக வந்து



* இன்ஸ்டன்ட் அவதாரம்...



* எனக்கு மூணு சாமி



* இப்பத்தான் முதல்படி

விட்டாரே நரசிம்மர்! சித்த புருஷர்களில் எனக்கு மிகவும் இஷ்டமானவர் அகஸ்தியர். அவரை என் நெருங்கிய நண்பர் போலத்தான் நான் நினைக்கிறேன். எனக்கு ஏதாவது ஒரு பிரச்னை என்றால், என்ன இப்படி பண்ணிட்டியே? என்று நான் உரிமையோடு கோபித்துக் கொள்ள, உடனே பிரச்னை தீர்ந்த அனுபவங்கள் எனக்குப் பலமுறை ஏற்பட்டுள்ளன.

தொகுப்பு : **கௌசி, ராகவ்குமார், சந்திரமௌலி**



அந்தப் புகழ்பெற்ற கம்ப்யூட்டர் கல்வி நிலையத்தில், கேம்பஸ் இன்டர்வியூவில் தேர்வு செய்யப்பட்ட இளைஞர்களுக்கு பணிஇடை ஆணை வழங்கும் விழா மிகக் கோலாகலமாகத் தொடங்கியது.

கல்லூரியின் முதல்வர் தம் உற்சாகமான உரையைத் தொடங்கினார். ''நண்பர்களே, இந்நாள் நம் கல்லூரியின் பொன்னாள். சமீபகாலமாக கல்வி நிலையங்களில் நாம் அரிய மாற்றத்தைக் காண்கிறோம்.

வேலைவாய்ப்பு உங்களைத் தேடி வருகின்றது. இதோ இன்றைக்கு நம் கல்லூரியின் பல்வேறு துறைகளைச் சார்ந்த ஐம்பதுக்கும் மேற்பட்ட மாணவர்களுக்கு வேலைவாய்ப்பு ஆணையை அந்தந்தக் கம்பெனிகளின் மேலாளர்களே தர இருக்கிறார்கள்.

மிகச்சிறந்த உற்சாக உரையினை (என்னைக் காட்டி) நம் ஐயா அவர்கள் ஆற்ற இருக்கிறார்கள். எனவே,

இந்த வெற்றியை நாளைய சரித்திரம்
சொல்லும்
இப்படை தோற்கின்
எப்படை வெல்லும்''

எனக்கூறி அனைவரையும் வரவேற்றார்.

அடுத்து வந்திருந்த பல்வேறு கம்பெனிகளின் மேலாளர்களுள் ஒருவர் பேசத் தொடங்கினார்,

''நண்பர்களே, நான் பல ஆண்டுகள் வெளிநாடுகளிலேயே வாழ்ந்து வருபவன். ஆனாலும் ஆண்டுக்கு ஒருமுறை, நம் தாய் மண்ணைத் தரிசிக்க இங்கே வருபவன். மாறிவரும் மாற்றங்களுக்கு ஏற்ப நம் இளைய மாணவ சமுதாயம் தன்னை மாற்றிக்கொண்டு வருவதைக் கவனித்தபடியே வியந்து கொண்டிருக்கிறேன்.

சமீபத்தில் வாடிகன் மாநகருக்கு போப்பாண்டவரின் அழைப்பை ஏற்றுச் சென்று அவரோடு அமர்ந்து விருந்துண்டு மகிழ்ந்த என் இனியநண்பர் கோவை பாரதிவித்யா பவனின் தலைவர், தொழிலதிபர், நல்லறிஞர் திரு.கிருஷ்ணராஜ்வானவராயர்



ஊருக்கு உழைப்பதே தவம்!

கு.ஞானசம்பந்தன்

''எப்படியெல்லாம் விளம்பரம் பண்ணற துன்னு விவஸ்தையே இல்லாம போச்சு.''

''ஏன் என்ன ஆச்சு?''

''சைக்கிள் பார்க்கிங் வசதி உள்ள அபார்ட் மெண்ட்ஸ்னு போட்டிருக்கான்.''

- சாயம் வெ.ராஜாராமன்



என்னோடு தம் அனுபவத்தைப் பகிர்ந்து கொண்டார்.

அறுபது நாட்டுப் பிரதிநிதிகள் கலந்து கொண்ட விருந்து அது. போப்பாண்டவரின் உதவியாளர், அவரை அந்தச் சபைக்கு அறிமுகம் செய்யும்போது, 'இதோ இவர் உலகின் பண்டைய நாகரிகம் மிகுந்த நாடான இந்தியாவிலிருந்து, உலகின் மிகப்பெரிய ஜனநாயக நாட்டிலிருந்து வந்துள்ளார். இன்னும் சொல்வதானால் அத்தகைய பழம்பெரும் ஜனநாயக நாட்டின் தேசத் தந்தையான காந்தியடிகள் வாழ்ந்த நாட்டிலிருந்து வருகிறார்' என்று அறிமுகம் செய்தபோது மெய்சிலிர்த்துப் போனாராம்.

இன்றைக்கும் அமெரிக்க நாட்டின் அதிபர் ஒபாமாவிடம், 'நீங்கள் யாரோடு விருந்துண்ண விரும்புகிறீர்கள்?' எனக் கேட்டபோது, அகிம்சையில் வெற்றிகண்ட காந்தியடிகளுடன்தான் விருந்துண்ண விருப்பம்' என்று அவர் கூறியுள்ளார். எனவே மாணவர்களே... இளையசமுதாயமே நீங்கள் எங்கே சென்றாலும் பழைமையும், புதுமையும் மிகுந்த நம் தேசத்தின் பெருமையை மறக்க வேண்டாம்'' எனச் சொல்லி அமர்ந்தார்.

நான் மெதுவாய் பேச்சைத் தொடங்கினேன்.

''அனைவருக்கும் வணக்கம். பொதுவாக நான் பெற்ற அனுபவங்களை, கற்ற நூல்களின் கருத்துக்களை மேடையில் பேசுவது வழக்கம். ஆனால் இன்று இந்த மேடையில் நான் புதிய அனுபவங்களைப் பெற்றவனாக உணர்கிறேன்.

மேடையில் வெற்றியாளர்கள் அமர்ந்திருக்கிறார்கள். சாதனையாளர்களாக, சாதனை செய்யத் துடிப்பவர்களாக இளைய சமுதாயத்தினர் காத்திருக்கிறீர்கள். நாங்கள் உங்கள் வயதில் அறிந்திராத உலகத்தை நீங்கள் உங்கள் கைகளில் வைத்திருக்கிறீர்கள். இதோ உங்களோடு சில நிமிடங்கள்...'' எனத் தொடங்கினேன்.

''அந்தக் காலங்களில் மாணவர்கள் குருகுலத்தில் தங்கிக் கல்வி கற்பது வழக்கம். கல்வி முடிந்ததற்கான அடையாளமாக, குரு தன்னிடத்திலே வந்து பயிலும் மாணவர்களுக்குத் தேர்வும் வைப்பது வழக்கம்.

ஒரு குரு, தம்மிடத்தில் கற்ற சீடர்களில் இருவரைத் தேர்வு செய்தார். 'சீடர்களே... இந்த ஊருக்கு வெளியிலேயுள்ள மரத்திலிருந்து சில கனிகளை நீங்கள் கொண்டு வரவேண்டும். இதில் வேகத்தைக்காட்டிலும் விவேகம் முக்கியம்' எனச் சொல்லியனுப்பினார்.

மறுநாட்காலை, முதல் சீடன் விரைந்து சென்று, அன்று மாலைக்குள் கனிகளைக் கொண்டுவந்து பாராட்டைப் பெற்றான். மற்ற சீடன் இரண்டு நாட்கள் கழிந்தபிறகு கனிகளைக் கொண்டுவந்து கொடுத்தான். சற்று சோர்வாகவும் காணப்பட்டான்.

குருநாதர் அத்தனை சீடர்களையும் அழைத்துக்கொண்டு மரத்தருகே சென்றார்.

'இதோ பாருங்கள் இந்த மாமரத்தை நாம் சுலபமாக அணுகி உள்ளே வந்துவிட்டோம். ஆனால் இரண்டு நாட்களுக்கு முன்பு இவ்வாறு இல்லை. சுற்றிலும் முள்ளும், புதரும், யாரும் அணுகமுடியாத வாறு இருந்தன.

நம் முதல் சீடன், இந்த முட்புதர்களைத் தன் முயற்சியால் தாண்டி அரிதின் முயன்று பழத்தைப் பெற்றான். பாராட்டுகள். ஆனால் நம் இரண்டாம் சீடனோ, ஒருநாள் முழுக்க உழைத்து முட்புதர்களை அகற்றிப் பழங்களைக் கொண்டுவந்தான். அதனால் தாமதமாகவும் வந்தான். நினைத்துப் பாருங்கள் இரண்டாம் சீடனின் செயல் பாட்டினால் நாமும் உள்ளே வந்தோம். நாட்டுமக்களும் பயன்பெறுவர்.

நம் வெற்றி நமக்கும் பயன்தரவேண்டும். அவ்வெற்றியால் நம்மைச் சார்ந்தவர்களும் பயன்பெறவேண்டும். அதனால்தான் நான் இரண்டாம் சீடனின் மனிதாபிமான உணர்வுக்கு முதலிடம் தந்து தேர்ந்தெடுக்கிறேன்' என்று சொன்னாராம்.


உங்களின் வெற்றி உங்களைச் சார்ந்தவர்களுக்குப் பயன்தரட்டும். சென்றமுறை நான் அமெரிக்கா சென்றபோது நாசா விண்வெளி நிலையத்தின் அருங்காட்சியகத்தைச் சென்றுபார்க்கும் வாய்ப்பு கிடைத்தது. அப்போது அங்கிருந்த ஒருவர் நம் முன்னாள் ஜனாதிபதி அப்துல்கலாம் குறித்து ஒரு அரிய செய்தி சொன்னார். கலாமின் திறமையை உணர்ந்த அமெரிக்க விஞ்ஞானிகள் அவரை நாசாவில் பணியாற்றும்படி வேண்டினார்களாம். ஒரு கோடியளவுக்குச் சம்பளம் தருவதாகவும் கூறப்பட்டதாம். கலாம் மறுத்துவிட்டாராம். பல்வேறு நாடுகளும் அழைத்தன வாம். அப்போது கலாம் கூறிய செய்தி இதுதானாம்.

'நான் கற்ற கல்வி, என் அறிவு, என் அனுபவம் என் நாட்டுமக்களுக்குப் பயன் படவேண்டுமேயன்றி, ஊதியத்துக்காக நான் எதையும் செய்ய உடன்படமாட்டேன்' என்றாராம்.

நண்பர்களே உங்கள் திறமை, உழைப்பு உங்களுக்கும் பயன்படவேண்டும். நம் தேசத்துக்கும் பயன்படவேண்டும். அது தான் வாழ்க்கையின் வெற்றி.

வாழ்க்கைக்குப் பொருள் வேண்டும். உண்மைதான்; வாழ்வதிலும் பொருள் வேண்டும்'' என நான் சொல்லி முடிக்க, மாணவர்கள் வெற்றி ஆரவாரம் செய்தனர். அதில் பெருமிதமும் தன்னம்பிக்கையும் ஒளிவீசின.

(தொடரும்)





உச்சநீதிமன்றம் களங்கப்படலாமா?

காவிரி ராஜபுரம்! திருத்தணி அருகில் நெடுஞ்சாலையை ஒட்டியுள்ள இந்தக் கிராமம் நீதிமன்ற வட்டாரத்தில் தேசிய அளவில் புகழ் பெற்றுவிட்டது! இப்போது கர்நாடக உயர்நீதிமன்றத்தின் தலைமை நீதிபதியாக இருக்கும் பி.டி.தினகரனின் ஊர்தான் இது. தினகரன் உச்சநீதிமன்ற நீதிபதியாக நியமிக்கப்பட்டதைக் கடுமையாக எதிர்த்து வருகிறார்கள் பல வழக்கறிஞர்கள்.

''அவரது சொந்த கிராமத்தில் 400 ஏக்கர் நிலத்தை ஏழை விவசாயிகளிடமிருந்து மிரட்டி விலைக்கு வாங்கியதுடன் அரசு புறம்போக்கு நிலத்தையும் வளைத்துப் போட்டிருக்கிறார் தினகரன். இந்த நிலத்துக்குள் ஒரு ஏரியும் அடங்கியிருப்பதால் கிராமத்து விளைநிலங்களுக்குத் தண்ணீர் வருவது தடுக்கப்பட்டுவிட்டது. அது தவிர ஆடு, மாடு மேய்ச்சல் நிலமும் அவரது ஆளுமைக்குப் போய்விட்டது. பாதிக்கப்பட்டவர்கள் புகார் செய்தால், அவர்களை மிரட்டியும் கைது செய்தும், அடக்குமுறை ஏவி விடப்படுகிறது. இப்படிப்பட்டவரை உச்சநீதிமன்ற நீதிபதியாக நியமனம் செய்வது எந்த விதத்தில் சரி? நமது நாட்டில் இன்னமும் நம்பிக்கை அளித்துக் கொண்டிருப்பது உச்சநீதிமன்றம் மட்டுமே. அதையும் களங்கப்படுத்தலாமா?'' என்று கேட்கிறார் சீனியர் வழக்கறிஞர் சுதா ராமலிங்கம்.

நில உச்சவரம்பு சட்டப்படி, ஐந்து பேர் கொண்ட குடும்பத்துக்கு 15 ஏக்கருக்கு மேல் நிலம் இருக்கக்கூடாது. 'நான் பரம்பரை பணக்காரன்' என்று சொல்லியிருக்கிறார் நீதிபதி தினகரன். ''அப்படியென்றால் 1980களில் அரக்கோணத்திலிருந்து இரண்டாம் வகுப்பில் சென்னைக்கு தினமும் ரயிலில் வந்து போனது ஏன்?'' என்று எதிர்க் கேள்வி கேட்கிறார்கள் வழக்கறிஞர்கள். ஜெயலலிதாவின் டான்ஸி வழக்கில் அவருக்கு ஆதரவாக ஒரு கட்டத்தில் தீர்ப்பு கொடுத்தவர் தினகரன். இப்போது கர்நாடக உயர் நீதிமன்றத்தில் ஒரே நாளில் நாற்பதுக்கும் மேற்பட்ட வழக்குகளில் அவர் ஜாமீன் கொடுத்ததை கர்நாடக வழக்கறிஞர்கள் சந்தேகத்துடன் பார்க்கிறார்கள். சர்ச்சையில் சிக்கியதால் தினகரன் எந்த வழக்கையும் விசாரிக்கக் கூடாது என்று கொடி பிடிக்கிறார்கள் அவர்கள்.

தினகரன் ஒடுக்கப்பட்ட இனத்தவர் என்பதால் தடைகளைப் போடுகிறார்கள் என்று சொல்கிறார் தி.க. வீரமணி!

ஆனால், ''தினகரன் கிறிஸ்துவர். அவர் முழுப் பெயர் பால் டேனியல் தினகரன் பிரேம்குமார். தலித்துக்குரிய சலுகைகள் அவருக்குக் கிடையாது'' என்கிறார் சுதா ராமலிங்கம். இந்த சர்ச்சை நடக்கும்போதே ஊட்டியில் ஏழு கோடியில் இவரது குடும்பத்தினர் சொத்து வாங்கியிருக்கிறார்கள்.


தினகரனை உச்சநீதிமன்ற நீதிபதியாக்க மிகவும் ஆர்வமாக இருப்பவர், தமிழகத்தைச் சேர்ந்த மத்திய அமைச்சர் ஒருவர் என்றும் பேச்சு அடிபடுகிறது.

- ப்ரியன்

கல்கி

ஸ்பீடா...ஸ்டைலா...ஸ்மார்ட்டா...

04.10.2009
இதழுடன் இணைப்பு
32 பக்கங்கள்



நல்லது செய்யும் நல்லி!


Nalli
80
Nalli
பைரவி
கலெக்ஷன்
2009
Code No.BH09006
பனகல் பார்க், தி.நகர், சென்னை-17. தொ. பே. : 24344115 / 42604567. Fax : (044) 24343062
Website : www.nalli.com

சாதனை சிகரம்
நல்லி சின்னசாமி செட்டி

துணிந்து எடுத்த முடிவு

உருவாகிறது ஒரு பட்டுப்புடவை

தலைமுறைகள்தோறும் நல்லி வாடிக்கையாளர்கள்!

நல்லி குப்புசாமி சிந்தனைகள்



தமது தாத்தா நல்லி சின்னசாமி செட்டி (ஸ்தாபகர்) குறித்து நல்லி குப்புசாமி செட்டி...

"என் தாத்தா நல்லி சின்னசாமிச் செட்டியார் எங்கள் பரம்பரைத் தொழிலான நெசவுத்தொழிலில் ஈடுபட்டவர். அவர் ஒரு மிகவும் கடுமையான உழைப்பாளிமட்டுமல்ல, வித்தியாசமான சிந்தனைகளைத் துணிகரமாகச் செயல்படுத்தி வெற்றிகண்டவர்.

அப்போது காஞ்சிபுரத்தில் இருந்த நெசவாளர்கள், ஊரிலிருந்து சற்று ஒதுக்குப்புறமாகதான் தறிகளை வைத்திருந்தார்கள். ஆனால், என் தாத்தாவோ வரதராஜப் பெருமாள் கோவிலின் அருகில் இருந்த செட்டி தெருவில் ஒரு வீட்டை வாடகைக்கு எடுத்துக்கொண்டார். செட்டி தெரு என்று பெயர் இருந்தாலும் அங்கே இருந்தவை என் தாத்தா உட்பட மூன்றே செட்டியார் குடும்பங்கள்தான். கோவிலுக்குச் செல்பவர்கள் தாத்தா தறிநெய்வதை பார்த்தபடியே செல்வது வழக்கம். இதன் மூலமும் வாடிக்கையாளர்கள் கிடைத்தனர்.

அப்போது மிகப் பெரிய பட்டுவியாபாரக் குடும்பங்கள் காஞ்சிபுரத்தில்தான் இருந்தன. பி.எஸ்.கந்தசாமி லா, அவலூர் துரைசாமி ஐயங்கார், கிருஷ்ணசாமி முதலியார் போன்ற ஒவ்வொருவரும் சுமார் 2000 தறிகள் வைத்திருந்தனர்.

ஒரே தறியைக் கொண்டிருந்த என் தாத்தா தனது உழைப்பு, முயற்சியின் காரணமாக நாளடைவில் மொத்த விற்பனையாளராக மாறினார். மாதம் இருமுறை சென்னை வந்து மைலாப்பூரில் பட்டுச் சேலைகளை விற்பனை செய்தார். தொழில் முன்னேற்றத்துக்காக சென்னையில் இருந்தபடி வியாபாரத்தைக் கவனிப்பது நல்லது என்று நினைத்த தாத்தா, 1928ல் தி.நகர் மங்கேஷ் தெருவில் ஒரு வீட்டில் குடியேறினார்.

அந்த ஒண்டுக் குடித்தன வீடு வித்தியாசமானது. தாத்தாவையும் சேர்த்து இரண்டு குடித்தனங்கள். ஆனால், இரு

சாதனை சிகரம் நல்லி




* நல்லி சின்னசாமி செட்டி

வாடகைதாரர்களுக்கும் சேர்த்து ஒரே சமயலறை தான்! ஒருவர் சமைத்து முடித்த பிறகுதான் மற்றவர் வந்து சமைப்பர்.

'வீட்டில் வியாபாரம் செய்வதைவிட ஒரு கடையாகவே இருந்தால் நன்றாக இருக்குமே'. இந்த எண்ணம் தாத்தாவுக்கு நாளுக்கு நாள் அதிகமாகிக்கொண்டே வந்தது.

26.1.1935அன்று பனகல்பார்க் எதிரே கிடைத்த ஓர் இடத்தில் கடையைத் துவக்கினார். அங்கு வியாபாரத்தை அவரது உறவினர்கள் (முக்கியமாக மாப்பிள்ளை) கவனித்துக்கொண்டனர். தாத்தா, காஞ்சியில் தங்கி தரமான பட்டுப்புடவை தயாரிப்பில் கவனம் செலுத்தத் தொடங்கினார்.

"என் தாத்தா நல்லி சின்னசாமி செட்டி 24 மணிநேரத்தில் ஒரு பட்டுப்புடவையை நெய்து முடித்தார்! இது கின்னஸ் சாதனை!"

என் தாத்தாவுக்கு இந்த வியாபாரத்தில் புகழ் கிடைத்தது என்றால் அதற்குக் காரணம், தரம், நியாயமான லாபம்... போன்றவற்றோடு குறித்த நேரத்தில் பட்டுப்புடவையை நெய்து கொடுப்பது. பட்டுப்புடவை என்பது முக்கியமாக தீபாவளிக்கும், திருமணத்துக்கும் வாங்கப்பட்டது. ஒரு நாளாவது முன்னதாகப் புடவையைக் கொடுக்கவில்லை என்றால் புடவைக்குப் பலனில்லை.

—சின்னசாமி செட்டி!



இந்தியத் தலைநகரம், கல்கத்தாவிலிருந்து டெல்லிக்கு மாறிய காலகட்டம் அது. பிரிட்டிஷ் அரசின் ஐந்தாம் ஜார்ஜ் மன்னர் புதிதாகக் கட்டப்பட்ட வைஸ்ராய் மாளிகையில் தர்பாருக்கு விஜயம் செய்ய இருந்தார். அதற்காக விசேஷ பார்டர் கொண்ட பட்டாடை ஒன்றை உருவாக்க முடிவெடுத்தார்கள். அந்தப் பொறுப்பை என் தாத்தாவிடம் ஒப்படைத்தார்கள். 'காரனேஷன் பார்டர் (தர்பார் பார்டர்) என்று அதை அற்புதமாக உருவாக்கினார் தாத்தா. சுதந்திரத்துக்குப் பிறகு தேசிய (நேஷனல்) பார்டர். நினைவுகொள்வதற்கு சுலபமாக இருக்கும் என்று நாளடைவில் பிரபல திரைப்படங்களின் பெயர்களையும் புடைவைகளுக்கு வைத்தார். அப்படிப்பட்ட ஒன்றுதான் 'தியாகபூமி பார்டர்.'

இந்த இடத்தில் என் தாத்தாவின்

வேறொரு சாதனையும் நினைவுக்கு வருகிறது.

ஒரு திங்கட்கிழமையன்று அரக்கு வண்ணப் பட்டுப்புடவை ஒன்றை ஒரு வாடிக்கையாளருக்காக நெய்து வைத்திருந்தார். கோவிலுக்குச் சென்றுகொண்டிருந்த ஒரு தம்பதிக்கு இந்தப் புடவை மிகவும் பிடித்துவிட்டது. தாங்கள் வாங்கிக்கொள்வதாகச் சொன்னார்கள். அந்த வியாழன் அன்று அவர்கள் வீட்டு விசேஷத்தில் அதைக் கட்டிக்கொள்ள அந்த அம்மா பிரியப்பட்டார்கள். 'இந்தப் புடவையும் வியாழக்கிழமை நடக்கும் கல்யாணத்துக்காக வேறொருவர் ஆர்டர் கொடுத்து செய்தது. உங்களுக்கும் இதே மாதிரி ஒன்றை இந்த வியாழனுக்குள் நெய்து கொடுக்கிறேன்' என்று உறுதி கூறினார். கொடுத்த வாக்கைக் காப்பாற்ற முழு மூச்சாய், இரவு - பகல் பாராமல் நெய்யத் தொடங்கினார் 24 மணி நேரத்தில் புதுப் புடைவையை நெய்து முடித்தார். கின்னஸில் இடம்பெற வேண்டிய ஒரு விஷயம் இது.

'நல்லி சின்னச்சாமி செட்டி பட்டு ஜவுளிக்கடை' மக்களின் பலமான ஆதரவைப் பெற்றது. தொடக்கத்தில் தவணை முறையில்கூட விற்பனை செய்தார். பிறகு முழு ரொக்கத்துக்கு மட்டுமே விற்பனை என்று மாற்றிக்கொண்டார்.

வியாபாரம் பெருகியவுடன் கடையை மேலும் பொறுப்பாகக் கவனித்துக்கொள்ள ஒருவர் தேவைப்பட்டார். பம்பாயிலிருந்து தன் மகனை - என் அப்பா நாராயணசாமியை - வரவழைத்தார் தாத்தா. ●

'நல்லி'ன்னா என்ன?

இந்தப் பெயரில் ஒரு கிராமம் உண்டு. என்றாலும் நல்லி என்பது ஒரு குடும்பத்தின் பாரம்பரியப் பெயர். எங்கள் தாய்மொழி தெலுங்கு. கிருஷ்ணதேவராயர் ஆட்சியில் தங்கள் கலைஞர்கள் பிற பகுதிகளுக்கும் சென்று சிறப்பு சேர்க்க வேண்டுமென்று விரும்பினார். அப்போது பலரும் தமிழகத்துக்குக் குடிபெயர்ந்தனர். அவர்களில் 'பத்மசாலியர்' எனும் சமூகத்தினரும் உண்டு. இவர்களில் உள்ள பல குடும்பப் பிரிவுகளில் ஒன்று 'நல்லி'.




**தந்தை நல்லி நாராயணசாமி
செட்டியின் பங்கு குறித்துப்
பேசுகிறார் நல்லி குப்புசாமி செட்டி...**

பம்பாயில் மாதுங்கா பகுதியில் 'ஜானகி வேர் ஹவுஸ்' என்ற ஜவுளிக்கடை ஆரிய சமாஜ் ரோடில் ஒரு லேடீஸ் கிளப் மேற்பார்வையில் இயங்கி வந்தது. அதன் ஊழியர்களுக்குத் தொடர்ந்து பயிற்சி அளிப்பதற்காக என் அப்பா நல்லி நாராயணசாமி செட்டி அங்கு தங்கியிருந்தார். தாத்தாவின் வணிகத்துக்குத் துணையாக சென்னைக்கு வந்தார்.

இந்த நிலையில் இப்போது நாங்கள் இருக்கும் கடைக்கு அடுத்த கட்டடத்தில் 1935ல் தாராசந்த் கலாடா என்பவர் இப்போதைய 'மால்' போல ஒன்றைத் தொடங்கினார். கல்யாணத்துக்கு வேண்டிய எல்லாமே அங்கு



* நல்லி நாராயணசாமி செட்டி



துணிந்து எடுத்த முடிவு!

கிடைக்க வேண்டும் என்பது அவரது ஆசை. அதில் வெள்ளிப் பாத்திரக்கடை, தங்கக் நகைக் கடை, மளிகைக் கடை ஆகியவற்றை ஏற்கெனவே வாடகைக்குக் கொடுத்துவிட்டார். பட்டுப்புடவைக்கான கடையை என் தாத்தாவுக்கு வாடகைக்குக் கொடுத்தார்.

இந்தக் கடைக்குதான் என் அப்பா நல்லி நாராயணசாமி அவர்கள் பொறுப்பேற்றுக்கொண்டார்.

தினமும் அந்த ராகவேந்திரர் படத்துக்குப் பூஜையும் செய்து வந்தார்.

இருபத்தோரு நாட்கள், பிற கடைகள் அத்தனையும் மூடப்பட்டிருக்க, அத்தியாவசியப் பிரிவில் பணிபுரிந்தவர்கள் (அரசு அதிகாரிகள், ஒட்டல்காரர்கள் போன்றவர்கள்) ஒரு டவல் வாங்கவேண்டும் என்றால் கூட எங்கள் கடைக்கு வரவேண்டிய அவசியம் ஏற்பட்டது. தண்டையார்பேட்டையிலிருந்துகூட வந்தார்கள். எங்கள் கடை

"என் அப்பா காலத்தில் 1948 முதல் 1953 வரை நல்லியின் பட்டுப் புடவை விற்பனை பெரும் உச்சத்தைத் தொட்டது!"



இரண்டாம் உலகப்போர் காலகட்டம் அது. எப்போது குண்டு வீசப்படுமோ என்ற பயத்தில் சென்னையில் உள்ள எல்லாக் கடைகளையும் மூடிவிட்டார்கள். அவரவரும் ஊருக்குச் சென்று விட்டார்கள். என் அப்பாவும் இது குறித்து யோசித்த போது அவர் நண்பர் ஒருவர் என் அப்பாவுக்கு ராகவேந்திரர் படம் ஒன்றைக் கொடுத்து (இப்போதும் அந்தப் படத்தைக் கடையில் வைத்திருக்கிறேன்) 'தைரியமாக இங்கேயே இரு. ஒரு கெடுதலும் நடக்காது' என்றாராம். அப்பாவும் தைரியமாகத் தன் கடையைத் திறந்தே வைத்திருந்தார்.


மேலும் புகழ்பெறத் தொடங்கியது.

1948 முதல் 1953 வரை உள்ள ஐந்து வருடங்களில் நல்லியின் பட்டுப்புடவை வியாபாரம் மிகவும் அதிக அளவைத் தொட்டது. காஞ்சியில் உள்ள தறிகள் மட்டுமே வாடிக்கையாளர்களின் தேவையைத் தீர்க்க முடியவில்லை.

எனவே பனாரஸ், ஆரணி, தர்மாவரம், கொள்ளேகால், பெங்களூர் போன்ற பல பகுதிகளிலிருந்தும் பட்டாடைகளை வரவழைத்து விற்கத் தொடங்கினார் என் அப்பா நல்லி நாராயணசாமி செட்டி. அப்போது வியாபாரம் பெருகியது.

பிரபலங்கள் மதிக்கும் பிரபலம்

நல்லி குப்புசாமி செட்டியாரின் நற்செயல்கள் பற்றி எழுத்தாளர் டாக்டர் ஆர்.நடராஜன் சொல்லும் சாம்பிள்கள்...



✱ சிவன் சுவாமிகள்

● காஞ்சி மகா பெரியவாளின் பூர்வாசிரம இளைய சகோதரர், ஒரு மகான். சிவன் சுவாமிகள் என்று அழைக்கப்பட்ட அவர், தம் நிறைவுக் காலத்தை ஸ்ரீ நல்லி குப்புசாமி செட்டியாருடன் கழித்தார். அவர் தங்குவதற்கு வசதியாக இடம் ஏற்பாடு செய்து சம்ரக்ஷணை செய்து வந்தார். தினமும் அவருடன் சத்விஷயங்களைப் பேசுவதற்கு நேரம் ஒதுக்கிக்கொண்டார் செட்டியார். சுவாமிகள் எழுதிய 'ஏணிப்படிகளில் மாந்தர்கள்' என்ற அரிய ஆன்மிக நூலை வெளியிட உதவினார். செட்டியாரின் தாயார் வசித்து வந்த அதே வீட்டில் சுவாமிகள் சித்தியடைந்தார். தகவல் அறிந்து செட்டியாரை உடனே சந்தித்த சுவாமிகளின் தூரத்து உறவினர்கள், ''ஒரு சிஷ்யனாக இருந்து செட்டியாரே சுவாமிகளின் அந்திமக் கிரியை ஏற்பாடுகளைக் கவனிக்கலாம்'' என்று சொல்ல, செட்டியாரும் அவ்வாறே செய்தார்!

● சங்கராபுரம் சுவாமிகள் மீது செட்டியாருக்கு மிகவும் மரியாதை. அன்பர்கள் திரட்டித் தந்த தகவல்களைத் தொகுத்து அவரைப் பற்றி 'குருநாதர் மகிமை' என்ற நூலை வெளியிட்டார். இந்தத் தலைமுறைக்கு அறிமுகமாக வேண்டும் என்பதற்காக ஆவணக் காப்பகத்தின் அனுமதி பெற்று, நூறு வருடங்களாக வெளியிடப்படாத சில புத்தகங்களை மறு பதிப்பு செய்திருக்கிறார்.

● பாரதி அன்பர் சீனி.விசுவநாதன் பாரதியாரின் படைப்புகளைக் காலவரிசையில் தொகுத்து வரும் பணியைச் செய்து வருகிறார். அதற்கு நல்லி செட்டியார் ஆக்கமும் ஊக்கமும் தந்து வருவதனால் இதுவரை ஒன்பது தொகுதிகள் வெளி வந்துள்ளன. பத்தாவது தொகுதியும் வெளிவர இருக்கிறது.

● கன்னிமரா ஹோட்டலில் இந்திய வர்த்தகச் சங்கங்களின் கூட்டமைப்பு ஒரு விழாவை நடத்தியது. மேடையில் அமெரிக்கத் தூதர் ஃப்ராங்க் விஸ்நர் உள்பட முக்கிய பிரமுகர்கள் இருக்கிறார்கள். விழா தொடங்க சில நிமிடங்கள் இருந்தன. அப்போது மேடையிலிருந்த அமெரிக்கத் தூதர் விஸ்நர், செட்டியாருக்கு இருமுறை வணக்கம் சொன்னார். செட்டியாரைச் சுற்றி நின்று கொண்டிருந்தவர்கள். அவரிடம் பேசிக் கொண்டிருந்ததனால் செட்டியார் மேடையைக் கவனிக்கவில்லை. இதைப் பார்த்த ஃப்ராங்க் விஸ்நர் மேடையிலிருந்து இறங்கி வந்து செட்டியாரிடம் 'வணக்கம், நல்லி செட்டியார்' என்றார். என்ன காரணம்?

● சென்னையில் அமெரிக்கத் தூதரகம் ஏற்பட்டு இருநூறு வருஷங்கள் நிறைவானதை ஒட்டி ஒரு விழா நடைபெற்றது. அப்போதைய சிறப்பு விருந்தினர்களில் ஒருவர் நல்லி செட்டியார். தூதரக வளாகத்தில் திறக்கப்பட்ட ஒரு கண்காட்சித் தகவல் பலகையில் ஒரு வரலாற்றுப் பிழை இருந்தது. தூதரைத் தனியே அழைத்து, செட்டியார் திருத்தத்தைச் சொன்னார். அவரது வரலாற்றுத் தகவல் அறிவை அறிந்து



✱ இந்த செப்டெம்பர் 23-ஆம் தேதி சென்னைக்கு முதல்முறையாக வருகை தந்த அமெரிக்கத் தூதர் டிமோதி ரெமோ அவர்களை கபாலீஸ்வரர் கோயிலில் வரவேற்கும் நல்லி குப்புசாமி செட்டியார் - அவர் அருகே அமெரிக்கத் தூதரக முன்னாள் அரசியல் ஆலோசகரும் எழுத்தாளருமான டாக்டர் ஆர். நடராஜன்.

வியந்து போனார் அமெரிக்கத் தூதர்.

அடுத்த சில நாட்களில் செட்டியாரை காலை உணவுக்கு அழைத்துப் பட்டுத் தொழில் பற்றிப் பல தகவல்களைக் கேட்டறிந்து கொண்டார். ○

பட்டு இழைகள் எப்படி உருவாக்கப்படுகின்றன என்பது இரண்டாயிரம் வருடங்களுக்கும் மேலாக சீனர்களுக்கு மட்டுமே தெரிந்த ரகசியம். பின்பு ஒரு சீனத் துறவிதான், உள்ளே துளை கொண்ட ஒரு தடியில் பட்டுப் புழுக்களை ரகசியமாக அடைத்துச் சென்று, ஐரோப்பாவுக்கு அந்த ரகசியத்தை விற்றாராம். பட்டுப்புழுக்கள் மல்பெரி இலைகளை மட்டுமே சாப்பிடும். அந்த இலைகளும் அவ்வப்போது புதிதாகப் பறிக்கப்பட்டவையாக இருக்கவேண்டும். வெகு காலத்துக்குச் சீனாவிலும் ஜப்பானிலும் மட்டும்தான் மல்பெரி செடிகள் பயிரிடப்பட்டன. எனவேதான் பட்டு அங்கு மட்டும் உற்பத்தியாயிற்று.




பட்டுநூல் வாங்குதல் : கர்நாடக மாநிலத்தில்தான் 90 சதவிகிதப் பட்டுநூல் உற்பத்தி செய்யப்படுகிறது. பத்து சதவிகிதம் மட்டும் கிடைக்கிறது. கர்நாடகாவில் ஆண்டு முழுவதுமே உற்பத்தி உண்டு. பீகார், மேற்கு வங்கம், தமிழ்நாடு, ஆந்திரா, ஜம்மு & காஷ்மீர் மாநிலங்களிலிருந்து வாங்கும் இழைகளை நல்லி போன்றவர்கள் நீண்டகாலமாகத் தங்களோடு தொடர்பு கொண்ட நபர்களுக்கு (இவர்களை மாஸ்டர் வீவர் என்றும் கூறுவதுண்டு) அளிக்கிறார்கள்.

அந்த நபர்கள் அந்தப் பட்டு இழைகளை எடைபோட்டு, எந்தவித டிஸைனில் புடவை உருவாக்கப் பட வேண்டும் என்பதையும் குறிப்பிட்டுத் தங்கள் வீவரிடம் கொடுக்கிறார்கள்.

அதற்குப் பிறகு அந்தப் புடவைக்கான பாவு

உருவாகிறது ஒரு



கட்டுதல், தறி நெய்தல், சாயம் ஏற்றுதல் என்ற பலவித கட்டங்களை மேற்பார்வை செய்து தேவைப்பட்ட விதத்தில் புடவையை உருவாக்குவது அந்த நெசவாளியின் பணிதான்.

இந்தப் பணிகளை நேரில் கண்டு வாசகர்களுக்கு வழங்க காஞ்சிபுரம் போய் வந்தோம்:

பாவு கட்டுதல் : தெருவிலேயே நடந்து கொண்டிருந்தது பாவுகட்டும் வேலை. ஆனந்தா மற்றும் மீனாட்சி வண்ணங் களில் புடவையின் உடல் பகுதி இருக்க, முந்தானை மஞ்சள் வண்ணத்தில். மூன்று புடவைகளுக்கான தனித்தனி வண்ண இழைகளும், மூன்றுக்கும் ஒரே வண் ணத்தில் ஆன முந்தானை இழைகளுக்கு மாகப் பாவுகட்டிக்கொண்டு இருந்தார்கள்.

''இழை அறுந்துவிடாமல் நெய்ய வேண்டும். அங்கங்கே நூல் 'மொத்து'ப் பட்டிருந்தால் அதை நீக்கி மெலிதாக்க வேண்டும். இதைச் செய்ய மூன்று பேர் தேவைப்படுகிறார்கள்'' என்றார்கள் பணி யாளர்கள்.

பாவுகட்டுதலுக்கான கருவியின் பாகங் களில் ஊத்தி மற்றும் கவுனு. மரத்தினால் ஆனவை. இவற்றுள் ஊத்தி அசையாமல் நிற்கும். கவுனு 94 போன்று இருக்கும். இழைகள் தொடர்ந்து நைசாகவே இருப் பதை உறுதிசெய்யும் பாகம் கவுனு. இவை மொத்தத்தையும் பூமியில் நிறுத்த வைப்பது ஒரு கடப்பாரை.

பாவு கட்டிய பிறகு இழைகளைக் கஞ்சியில் நனைத்துவிட்டு அடுத்த கட்டத் துக்கு அனுப்புகிறார்கள். கஞ்சியில் நனைத்து ஊற வைக்க இரண்டு மணி

பட்டுப்புடவை!

நேரம் பிடிக்குமாம்.

தறியில் நெய்தல் : மேற்படி பாவு கட்டிய மூன்று புடவைகளில் முதல் புடவையை நெய்து முடிக்க பதினைந்தி லிருந்து இருபது நாட்கள் ஆகுமாம். அடுத் தடுத்த புடவைகளுக்குத் தலா பத்து நாட் கள். காரணம் முதல் புடவைக்குத் தறியை 'செட்' செய்யும் நேரம் கூடுதல்.

ஒரு மீட்டர் நெய்யவே இரண்டு அல்லது மூன்று நாட்களாகும். கூடுதல் பணியாட்களும் இதற்குத் தேவைப்படு வார்கள்.

காஞ்சிப்பட்டுக்குத் தோதான நான்கு மீட்டர் நீளமும் இரண்டரை மீட்டர் அக லமும் அளவு கொண்ட தறி இருக்கிறது. ஒரு மீட்டர் உயரம் கொண்ட தறிக்குழி தேவை.

பிற இழைகளிலிருந்து பட்டைத் தனிப் படுத்திக் காட்ட காஞ்சியில் தயாராகும் பட்டுப்புடவைகளில் 'சில்க் மார்க் லேபிள்' என்ற அடையாளத்தைப் பதிக்கவேண்டும் என்று அரசு சமீபத்தில் பரிந்துரைத்திருக் கிறது.

பல்லூ (தலைப்பு) வேலைப்பாடுதான் அதிக சவால் நிறைந்தது. தவிர முந்தானை யில்தானே வாடிக்கையாளர்கள் முதலில் கவனம் செலுத்துகிறார்கள்?

சட்டென்று பார்த்தால் ஒரு தனி இழை விலகி அல்லது பிரிந்து இருப்பது நம் கண்ணுக்குப் புலப்படுவதில்லை. உன்னிப்பாகக் கவனிக்க வேண்டும்.

எலிகள் மற்றும் எறும்புகளிடமிருந்து இழைகளைக் காப்பதும் ஒரு சவால்தான். பசையை இழைகளின் மீது தடவுகிறார்கள். பளபளப்பாக இருக்கவும், இருபதாவது வாடிக்கையாளர் ஒரு புடவையைப் பிரித்

"பட்டுப்புடவையில் பல்லூ (தலைப்பு) வேலைபாடுகள்தான் சவாலானது!"



துப் பார்க்கும்போதும் அதே ஃபினிஷ் காணப்படவும் பசைதான் உதவுகிறது. ஆனால், இந்தப் பசையே எறும்புகள் வரக் காரணமாகிறது.

மழை வந்தால் இழைகள் நனையாமல் இருக்க மைக்கா ஷீட்டுகள் தேவைப் படுகின்றன. ஆனால், மழைக் காலத்தில் பட்டுப்புடவைகள் தயாரிப்பு பாதிக்குப்



பாதிதான் நடைபெறுமாம்.

ஊடுவை (weft) விட பாவு (warp) அதிக உறுதி கொண்டதாக இருக்கும்.

'என்ன இருந்தாலும் எங்கள் பாலாற் றுத் தண்ணீரில் நனைத்துச் சாயம் ஏற் றப்படும் பட்டுதான் அதிக வருடங்கள் உழைக்கிறது' என்று காஞ்சிப் பட்டின் பெருமையை ஏற்றிச் சொல்கிறார்கள்.

கைகளும் கால்களும் மாறிமாறி இயங்க வேண்டியிருக்கிறது நெச வாளிக்கு. இந்தப் பெடல் சிஸ்டத்தில் ஒரு மீட்டர் துணி நெய்ய சுமார் 1200 முறை இரண்டு கால்களும் மேலும் கீழும் பயணிக்க வேண்டியுள்ளது. அதுவும் நிறைய வேலைப்பாடு உள்ள புடவை என்றால் இரண்டு மணி நேரத் துக்கு ஒரு முறை ஓய்வு தேவை.

சமீப காலமாக அறிமுகப்படுத்தப் பட்டுள்ள 'ஜாக்கார்ட் அட்டை' கொஞ்சம் வேலையை எளிதாக்கி உள்ளது. இதில் இயந்திரம் தானாகவே மேலும் கீழுமாகச் செல்லுமாறு வடிவமைக்கப்பட்டுள்ளதால் உடல் உழைப்பு கம்மியாகிறது. வழக்கத் தைவிட இதில் ஒருமணி நேரம் அதிகப் படியாக நெய்யலாம். ஆனால் இந்தக் கருவியை நிறுவத் தறியின் உயரம் ஐந்து மீட்டர் இருக்கவேண்டும். இதற்கான ஸ்பெஷல் தறியின் விலை 10,000 ரூபாய்.

டிஸைனிங் : புடவையின் வடிவ மைப்பை நிர்ணயிக்கவென்றே டிஸைனர் கள் உண்டு. அரசு நெசவாளர் மையத்தி லிருந்தும் வேண்டிய டிஸைன்களைப் பணம் கொடுத்துப் பெற்றுக்கொள்ளலாம்.

கிளி, மயில், யானை போன்று பல்லுரவில் இடம்பெறும் டிஸைன்கள் வரையப்பட்டு நெசவாளியிடம் கொடுக் கப்படுகிறது.

நல்லி குப்புசாமி செட்டியார் போன்ற வர்கள் 'இந்தத் தடவை இதுபோன்ற



டிஸைன் மற்றும் வண்ணம் கொண்ட புடவைகள்தான் அதிகம் விரும்பப்பட்டு, விற்பனையாகும்' என்று பலவித கணிப்பு களின் மூலம் தேர்ந்தெடுத்துக் கொடுக் கிறார்கள்.

வாடிக்கையாளர்களின் நாடியைச் சரி யாக அறிந்துவைத்திருப்பது மிக முக்கியம். பொதுவாக வட இந்தியர்களுக்கு அழுத்த

மான ஷேடு புடவைகள் பிடிக்கும். தமிழர்களுக்குப் பாரம்பரியம் மிக்க வேலைப்பாடுகள். கேரளாக்காரர்கள் புடவையின் அடிப்படை நிறம் வெண்மை.

சாயம் ஏற்றுதல்: சாயம் ஏற்றுவதற்கு முன் இழையில் உள்ள பசையை வெளியேற்றுவார்கள்.

சில செடிகளின் விதைகள் மூலம் பெறப்படும் இயற்கை சாயங்களையும் பயன்படுத்தலாம். ஆனால் இதுபோன்ற இயற்கை சாயங்கள் அரிதாகவே பயன்படுத்தப்படுகின்றன. காரணம் செயற்கை சாயங்களால் உண்டாகும் பளபளப்பு இயற்கையில் கிடைக்காது. தவிர இப்படிச் சாயம் ஏற்றுவதற்கு அதிக நேரம் பிடிக்கும்.

பட்டுநூலை செயற்கை சாயத்தில் சுமார் 20 நிமிடங்கள் முக்கி எடுக்கின்றனர். பிறகு பட்டு நூலுடன் சோடா மற்றும் சோப் எண்ணெயைக் கலந்து 110 டிகிரி சென்டிகிரேட் வெப்பத்துக்குச் சூடு படுத்துகிறார்கள். அப்போது பசை பிரிந்து விடுகிறது.

சாயம் ஏற்றும் இடத்தில் தடை இல்லாத தண்ணீர் வசதி வேண்டும்.

சாயம் ஏற்றிய பிறகு பட்டு இழைக் கட்டுகளை இரண்டு அல்லது மூன்று முறை தண்ணீரில் அலசி எடுக்கிறார்கள். இதன் காரணமாக அதிகப்படி சாயம் நீக்கப்படுகிறது. பிறகு அஸிட்டிக் அமிலத்தில் - இந்த இழைகள் நனைத்து எடுக்கப்படுகின்றன. இதன் மூலம் இழைக்குப் பளபளப்பு கூடுவதோடு ஆங்காங்கே சேர்ந்து கொண்டிருக்கும் இழைகளும் பிரியும்.





பிறகு இந்த இழைகளை ட்ரையரில் போட்டு நன்கு உலரவைத்து, வெயில் படாமல் உலர்த்துகிறார்கள்.

முன்பெல்லாம் விறகு அடுப்புகளில்தான் தண்ணீரைக் கொதிக்கவிட்டார்கள். மெல்லமெல்ல 'ஸ்டீமுக்கு' மாறிக்கொண்டிருக்கிறார்கள். இதனால் செலவு பாதிக்குப்பாதி குறைகிறது.

இப்படி உருவான புடவை அழகாக மடிக்கப்பட்டு மாஸ்டர் வீவரால் மீண்டும் (நூல் கொடுத்தவருக்கு) நல்லி போன்றவர்களுக்கு அளிக்கப்படுகிறது. கொடுத்த எடையுடனும், ஜரிகைக்குத் தகுந்த அறிவிக்கப்பட்ட டிசைன் இருப்பதையும் சரி பார்த்து அந்தப் புடவையை எடுத்துக் கொள்கிறார்கள்.

பின்னர் தேவைகளுக்கேற்ப தங்கள் கிளைகளுக்கு அவை அனுப்பப்படுகின்றன.

●

பட்டுப் புடவைகளைப் பாதுகாப்பது எப்படி?

பட்டு உடைகளை மஸ்லின் துணி அல்லது காட்டன் பைகளுக்குள் சுற்றி வைப்பது நல்லது. பட்டுப்புடவைகளை உலர்ந்த இடத்தில் வைத்துப் பாதுகாக்கவும். அதே சமயம் இடம் குளிர்ச்சியாக இடம் இருப்பது நல்லது. குறைந்த பட்சம் வெயில் அந்தப் பகுதியின் மீது நேரடியாகப் படாமல் பார்த்துக் கொள்ளுங்கள். பட்டுப் புடவைகளை மடித்து வைக்கும்போது துணிக்கும் எம்பிராய்டரிக்கும் இடையே உராய்வு ஏற்படாதபடி மடியுங்கள். படுத்த வாக்கில் வைப்பதைவிட பட்டு உடைகளைத் தொங்க விடுவது நல்லது. மிருதுவாகக் கையாண்டால் சுருக்கங்கள் உண்டாவதைத் தவிர்க்கலாம்.


ஒருபோதும் பிரஷ் செய்யவோ கசக்கவோ கூடாது. ஜரிகை கிழிந்து போகலாம். அதேபோல பட்டுப் புடவைகளை இலேசாகக்கூட பிழிய வேண்டாம். பட்டு உடைகளைத் துவைப்பதற்காக வெகுநேரம் நனைத்து வைத்திருக்க வேண்டாம்.

சோப்புக்குப் பதில் 'சோப் விதைகளை' வாங்கிப் பயன்



படுத்தலாம். கடையில் 'பூந்திக் கொட்டை' (boonthi kottai) என்று கேளுங்கள். தெலுங்கில் 'குங்குடு காய்'. பூந்திக் கொட்டைகளை நன்கு இடித்துப் பொடியாக்கி பிறகு மெல்லிய மல் துணியில் வடிகட்டினால் சோப் பவுடர் போன்று வரும். அதில் ஒரு டேபிள் ஸ்பூன் அளவு ஒரு பிளாஸ்டிக் பக்கெட் நீரில் கரைத்தால் சோப் போன்று நன்கு நுரை வரும். அதில் பட்டு புடவையை அலசி, மென்மையாகத் தோய்க்கவும். நிழலில் பட்டுப் புடவையை உலர்த்தவும். உலர்த்தும் போது பக்கவாட்டில் பார்டர்களும், கீழே தலைப்பும் வரும்படி உலர்த்த வேண்டும். இந்த முறையைப் பயன்படுத்துவதால் பட்டு உடைகள் மிருதுவாக இருப்பதோடு புதுக் கருக்காகவும் இருக்கும்.

கறை பட்ட உடனே பட்டுப் புடவையை பச்சைத் தண்ணீரில் முக்கி எடுங்கள். அதில் கறை நீங்கவில்லை என்றால் கறைபட்ட இடத்தில் பெட்ரோலைத் தடவி மிருதுவான துணியைக் கொண்டு நன்கு தடவுங்கள். பெருப்பாலும் கறை நீங்கிவிடும். ○



தம் குடும்பம் பற்றிக் கூறுகிறார் நல்லி குப்புசாமி செட்டியார்...

என் அம்மாவின் பெயர் கண்ணம்மாள். அவருக்கு நான் ஒரே மகன். மூன்று மகள்கள் இருக்கிறார்கள்.

என் மூத்த சகோதரி ராஜம்மாள். அடுத்து, நான். லட்சுமி, பங்கஜம் என இரண்டு தங்கைகள்.

தம் நாற்பத்தி இரண்டாவது வயதில்



அப்பா இறந்துவிட்டார். அப்போது எனக்குப் பன்னிரெண்டு வயது. அவர் உயிருடன் இருந்தபோதே அக்காவைக் கல்யாணம் செய்து கொடுத்துவிட்டார். அப்பா இறந்தவுடன் குடும்பப் பொறுப்பை அம்மா ஏற்றார்.

பள்ளிப்படிப்பை (எஸ்.எஸ்.எல்.ஸி.) முடித்தேன். மேலே படிக்க ஆசைதான். பொருளாதார வசதியும் இருந்தது. ஆனால், வியாபாரத்தைக் கவனிக்கவேண்டிய கட்டாயம். என் வர்த்தகப் பயணம் தொடங்கியது.

தொடக்கத்தில் எனக்கு வியாபாரத்தில் குருவாக இருந்தவர் என் சித்தப்பா நல்லி ரெங்கசாமி செட்டியார்தான். பல தொழில் நுணுக்கங்களைச் சொல்லிக் கொடுத்தார்.

என் திருமணம் 1958ல் நடந்தது. எஸ்.ஆர்.ஜி. ரெங்கநாத செட்டியாரின் மகள் அலமேலுவை கும்பகோணத்தில் மணந்தேன்.

* தாயார் கண்ணம்மாள்



எனக்கு இரண்டு மகன்கள், இரண்டு மகள்கள்.

என் மூத்தமகன் ராமநாதன். ஜவுளி தொழில்நுட்பக் கல்வி கற்று ஏற்றுமதித் தொழிலைச் செய்து வருகிறார். இரண்டாவது மகன் விஸ்வநாதன். வணிகவியல் பட்டதாரியான இவர் தொழில் பயிற்சி பெற்றிருக்கிறார்.

மகள் கீதா, காஞ்சிபுரத்தைச் சேர்ந்த ஏ.வி.ஜெயசந்திரனை மணந்திருக்கிறார். மற்றொரு மகளான ஜெயஸ்ரீ (குமரன் சில்க்ஸ் அதிபர் ஜெயராமன் அவர்களின் மகன்) ரவியை மணந்திருக்கிறார். ●

சம்பவம் - 1: நாம் 'நல்லி' கடைக்குச் சென்றிருந்தபோது சுமார் 25 நபர்கள் அடங்கிய குழு! திருமணப் புடவை எடுக்க ஒரு பெரிய கூட்டமாக வந்திருந் தார்கள்! யாருடைய சாய்ஸ் எடுபடப் போகிறது என்று ஒரு சின்ன சஸ் பென்ஸுடன் காத்திருந்தால், 'திருமணச் சேலை எடுக்கும்போது சித்தியைக் கூப்பி டலையே. அவங்க கோவிச்சுக்கப் போறாங்களே' என்று ஒருவர் கூற, அந்தச் சித்தி வீட்டுக்குத் தகவலைச் செல் ஃபோனில் சொல்லிவிட்டு, இவர்கள் புடவைகளைப் பார்த்துக்கொண்டே காத்தி ருந்தார்கள்.

சம்பவம் - 2 : ஒரு பெண்மணி பலவித புடவைகளையும் சலித்தெடுத்துவிட்டு "அப்புறமாக வர்றேன்" என்றபடி நடந்தார். வேறு சிலரோ சுமார் நாற்பது புடவை களை அலசிவிட்டுத் தங்களுக்குப் பிடித் திருந்த புடவையைத் தேர்ந்தெடுத் தார்கள். இப்படி, பறவைகள் பலவிதம் மாதிரி வாடிக்கையாளர்கள் பலவிதம்! இப்படிப்பட்ட எல்லா வாடிக்கையாளர் களையும் அரவணைத்துச் செல்லும் நல்லி குப்புசாமி செட்டி தன் இளமை காலம், பிஸினஸ், வாடிக்கையாளர்கள் தொழில் வெற்றி... ஆகியவை குறித்து வெளிப் படையாக நம்முடன் பகிர்ந்துக்கொண் டார். இதோ சில துளிகள்...

சூழல் காரணமாக பள்ளிப் படிப் போடு நிறுத்தியவராமே... குடும்ப சூழல் ஆதரவாக இருந்திருந்தால் என்ன கல்வி படித்திருப்பீர்கள்?

''அப்போதெல்லாம் தமிழக 'சட்ட' சபையில் பலரும் சட்டம் படித்தவர்களாக இருந்தார்கள். நானும் பி.ஏ. (சரித்திரம்) படித்துவிட்டு சட்டப் படிப்பை முடித்திருப்பேன்.

கல்லூரியில் படிக்கவில்லையே என்ற ஏக்கம் எனக்கு இன்றைக்கும் உண்டு. ஜே.ஆர்.டி.டாட்டா ஒருமுறை 'பல பட்ட தாரிகள் எனக்குக் கீழே வேலை செய் கிறார்கள். ஆனால், கல்லூரிப் படிப்பை நான் படிக்கவில்லையே என்கிற குறை எனக்கு உண்டு' என்று எழுதியதைப் படித் ததும் என் ஏக்கம் குறைந்துவிட்டது. இந்தியாவின் மாபெரும் கோடீஸ்வர ருக்கே என்னைப் போன்ற ஏக்கம் இருக் கிறதே.

பள்ளிக் கூடத்தில் வகுப்பறையை விட பிரார்த்தனை அறைதான் எனக்கு அதிகம் போதித்தது. வாரம் ஒருமுறை நீதி வகுப்பு கள் நடக்கும். மஞ்சக்குடி சாஸ்திரிகள் போன்ற பிரபல ஆன்மிகவாதிகள் கூட வகுப்பு எடுத்ததுண்டு.

ராமகிருஷ்ணா பள்ளியில் நான் சேர்ந்தபோது என் வகுப்பு ஆசிரியர் ''வாழ்க்கையை உயர்த்தவும், வார்த்தை ஞானத்தை அதிகரிக் கவும் பாடப் புத்தகங் கள் போதாது. நூலகம் போய்ப் படி'' என்றார். நூல கத்தில் எனக்கு சத்திய சோதனை, ராமகிருஷ்ண பரம ஹம்ஸரின் மொழிஅமுதம்... புத்தகங்கள் கிடைத்தன. இவை என்னுள் பெரிய மாற் றத்தை ஏற்படுத்தியது. காந்திஜி



சத்தியம், அகிம்சை ஆகியவற்றைத் தன் முக்கிய கொள்கையாக வைத்திருந்தார். வியாபார குடும்பத்தைச் சேர்ந்த நானும் சத்தியம், நேர்மை ஆகிய கொள்கைகளைக் கடைபிடிக்கத் தீர்மானித்தேன்.''

நீங்கள் பொறுப்பேற்றுக்கொண்ட பிறகு வணிகம் பெருகிய விதம்?

''1961ல் கடை என் நேரடி நிர்வாகத்தில் வந்தது. படிப்படியாக ஆண்டு விற்பனை அதிகரித்து வந்தது. 1983ல் எங்கள் ஆண்டு விற்பனை 14 கோடி ரூபாய். இன்று சென்னை கிளையில் ஒரு நாள் விற்பனையே 40 லட்சத்துக்கும் அதிகம். நல்லியின் எல்லா கடைகளின் ஆண்டு விற்பனை 475 கோடிகளுக்கு மேல்.

பத்தாயிரத்துக்கும் மேற்பட்ட

- நல்லி குப்புசாமி செட்டி



தலைமுறைகள்தோறும் நல்லி வாடிக்கையாளர்கள்!

கைத்தறிகளில் தயாராகும் பட்டுச் சேலைகள் நல்லியில் விற்பனையாகின்றன.

சென்னையைத் தவிர மதுரை, திருச்சி, கோவை, திருநெல்வேலி, ஹைதராபாத், மும்பை, பெங்களூர், புதுடெல்லி ஆகிய இடங்களில் கிளைகள் தொடங்கி நடந்து வருகின்றன. சிங்கப்பூர், சன்னி வேலி (அமெரிக்கா) ஆகிய வெளிநாட்டுப் பகுதிகளிலும் எங்கள் கிளைகள் இருக்கின்றன. அடுத்து அகமதாபாத்தில் புதிய கிளையும் சென்னையில் நகைக் கடையும் தொடங்க முயற்சிகள் எடுத்துக் கொள்ளப்பட்டு வருகின்றன.''



வாடிக்கையாளர்களை உங்கள் ஊழியர்கள் எப்படிக் கையாள்கிறார்கள்? பொறுமை இழந்ததுண்டா?

''எங்கள் நிறுவனத்தில் உள்ள தொழிலாளர்கள் பலரும் நீண்ட காலமாகப் பணியாற்றுபவர்கள். இதனால் என் மீதும் என் நிறுவனத்தின் மீதும் அவர்களுக்குத் தனி விசுவாசம் உண்டு. எனக்கு இந்த வேலை, உனக்கு அந்த வேலை என்று பிரித்துக் கொள்ளாமல் யாரும் எந்த வேலையும் செய்வார்கள்.

நிறையப் புடவைகளைப் பார்த்துவிட்டு எதையும் வாங்காமலேயே செல்பவர்களையும் குறைத்து எடை போடக் கூடாது. பிறகு ஒருநாள் வந்து மொத்தமாக வாங்கிக்கொள்ளக் கூடும்.

தீபாவளிக்கு 20 நாட்கள் முன்னதாகவே கூட்டம் அதிகமாகிவிடும். அதிக உழைப்பும் அதிக பொறுமையும் தேவைப்படும் நேரம் இது.

என் ஊழியர்களுக்கு 'தவறாக எதையும் சொல்லக்கூடாது, செய்யக்கூடாது' என்றும் தெளிவாகச் சொல்லியிருக்கிறேன். பச்சை வண்ணப் புடவையை வாங்க ஒருவர் ஆசைப்பட்டு வந்து அந்தக் கலர் அப்போது இல்லையென்றால், 'பச்சையெல்லாம் இப்போ ஃபேஷன் இல்லே' என்று ஊழியர் கூறக்கூடாது.

அதேபோல வாங்கிய புடவையைத் திருப்பிக் கொடுத்தால் கேள்விகள் இன்றி ஏற்றுக்கொள்ளவேண்டும். புடவையைத் திருப்பிக் கொடுக்க எவ்வளவோ காரணங்கள் இருக்கலாம். இல்லையேல் வேலை மெனக்கெட்டுத் திரும்பவும் வரமாட்டார்கள்.

யாராவது வாடிக்கையாளர் எதுவும் வாங்காமல் கடையிலிருந்து கிளம்பினால் உடனடியாக விசாரிப்பேன். குறிப்பிட்ட ஸ்டாக் இல்லை அல்லது வேறு ஏதாவது

காரணம் என்றால் உடனடியாகச் சரிசெய்வேன்.''

★ புடவைகளை ஸ்டாக் வைப்பதில் எந்தக் கொள்கையைப் பின்பற்றுவீர்கள்?

''கடையில் ஒவ்வொரு கௌண்டருக்கும் ஒரு எண் கொடுக்கப்பட்டுள்ளது. எந்த வகைப் புடவை எந்த விலையில் அங்கு கிடைக்கும் என்பதும் ஒவ்வொரு கௌண்டரிலும் குறிக்கப்பட்டிருக்கும். ஒவ்வொரு கௌண்டருக்குமென உள்ள அலமாரிகளில் புடவைகள் முழுமையாக நிரப்பப்பட்டிருக்கவேண்டும். ஒவ்வொரு நாள் ராத்திரியும் எவ்வளவு குறைகிறது என்பது தெரியவரும். மறுநாள் காலைக்குள் அந்த எண்ணிக்கையுள்ள புடவைகளை நிரப்பிவிடுவோம். கடைக்குப் பின்பக்கமே எங்கள் பெரிய கிடங்குகள் இருப்பதால் ஸ்டாக் வைத்துக் கொள்ளவும், உடனுக்குடன் அதிலிருந்து எடுத்துக்கொள்ளவும் வசதியாக இருக்கிறது.''

★ வாடிக்கையாளர்களிடம் தனிப்பட்ட கவனம் செலுத்துகிறீர்களா?

''அப்போதெல்லாம் தி.நகர் ஒரு கிராமம் போலத்தான் இருக்கும். ரொம்பச் சின்ன ஊர். அப்பா இறந்து நான் பொறுப்பேற்கும் வரை என் சித்தப்பா ராஜமாணிக்கம் அக்கறையுடன் கடையைப் பார்த்துக் கொண்டார். வாடிக்கையாளர்களுடன் அவருக்கு அப்படி ஒரு பந்தம்! ஒருமுறை, 'அப்பா அம்மாவுக்கு திருமண ஆண்டு விழா வருது. அம்மாவுக்கு சர்ப்ரைஸாக ஒரு பட்டுப்புடவை வாங்கணும். அவங்க கிட்ட என்ன புடவை இருக்கு, அவங்களுக்கு எந்த மாதிரி புடவை வாங்கினால் பிடிக்கும் என்பது பற்றியெல்லாம் எனக்குத் தெரியாது' என்றபடி ஓர் இளைஞர் அவரை அணுகினார். சித்தப்பா கடந்த இரு வருடங்களில் அவர் அம்மா விசேஷங்களுக்கு வாங்கிய புடவைகளை நினைவுகூர்ந்து, 'இந்த பிங்க் கலர் புடவையை எடுத்துக்கங்க. இந்த மாதிரி புடவை அவங்களுக்குப் பிடிக்கும். அதே சமயம் இந்தக் கலரிலே அவங்கக்கிட்டே புடவையும் இல்லே' என்று எடுத்துக் கொடுக்க, அவரும் வாங்கிச் சென்றார். பிறகு சில நாட்கள் கழித்து தொலைபேசியில் 'அம்மாவுக்கு ரொம்ப ரொம்ப சந்தோஷம். ரொம்ப நன்றி' என்று

கைதிக்கு உதவி!

''வேலூர் ஜெயிலிலிருந்து மதன் என்பவரிடமிருந்து அழகான கையெழுத்தில் ஒரு கடிதம் வந்திருந்தது. 'ஜெயிலர் தணிக்கைக் குழு'வினரின் கையெழுத்தும் இருந்தது. கைதி மதனின் மகளுக்கு கிண்டி இன்ஜினியரிங் கல்லூரியில் இடம் கிடைத்திருப்பதாகவும், அதற்கான தொகையைக் கட்டப் பணம் இல்லை என்றும் உதவி கோரியிருந்தார். தகவலை உறுதி செய்துகொண்ட பிறகு கல்விக்கட்டணம் முழுவதையும் ஏற்றுக்கொண்டேன். நன்னடத்தை காரணமாக கொஞ்சம் முன்னதாகவே விடுதலையான அவர் வீட்டுக்குக் கூடப் போகாமல் என் கடைக்கு வந்து காலில் விழுந்தார். 'என் மகள் மட்டும் கல்லூரியில் சேர்ந்திருக்கவில்லை என்றால் சாகும் வரை என் மனம் உறுத்திக்கொண்டே இருக்கும். நீங்கள்தான் புண்ணியம் கட்டிக் கொண்டீர்கள்' என்றார்.''

நெகிழ்ந்தார்.

இப்போது வாடிக்கையாளர்கள் மிகவும் அதிகமாகிவிட்டதால் அந்த அளவுக்கு நினைவில் வைத்துக்கொள்ள முடிவ தில்லை. என்றாலும் வாடிக்கையாளர் களுக்கு நல்லி அளிக்கும் மதிப்பு மிக அதிகம். தரமான பொருளைத்தான் விற்க வேண்டும் என்பதில் மிகவும் தெளிவாக இருக்கிறேன்.

எங்கள் பட்டுப் புடவைகள் குறைந்த பட்சம் 420 கிராம் எடை இருக்க வேண்டும் என்பது எங்களது முக்கியமான கொள்கை. சமீபகாலத்தில் பித்தளை ஜரிகை கொண்ட புடவைகளையும் விற்கிறோம். ஆனால், அவற்றின் லேபிளில் "Half fine zari" என்று தவறாமல் குறிப்பிடுகிறோம். பார்க்க ஒரே டிசைனில் இருப்பதால் வாடிக்கையாள ருக்குச் சரியான தகவல் கொடுக்க விரும்பு கிறோம்.

ஒவ்வொரு புடவையும் என் பார் வைக்கு வந்த பிறகுதான் விற்பனைக்கு வைப்பேன்.

★ ஒரே விலை என்பதை வாடிக்கை யாளர்கள் ஏற்றுக்கொள்கிறார்களா?

''எந்தப் பொருளையும் பேரம் பேசி வாங்குவதுதான். ஆனால் தள்ளுபடி சலுகைகள், பரிசுத்திட்டங்கள் எதுவும் இல்லாமல் வியாபாரம் வியாபாரமாகவே நடத்தப்படுவதுதான் நியாயம். ஒரே நியாய விலை என்பது எல்லா இடங்களிலும் நடைமுறையில் இருக்கவேண்டும். அதுவே வியாபார ஒழுக்கம். பேரம் பேசும் போது அலுப்பும் காலவிரயமும் உண்டா கின்றன. தொடக்கக் கட்டத்தில் நாங் களும் தள்ளுபடி விலையை அறிவித்த துண்டு. ஆனால், கறாரான ஒரே விலையை 7.4.1965 முதல் நல்லி பட்டு ஜவுளிக் கடையில் அறிமுகப்படுத்தினேன். அப் போது என் குடும்பத்தினருக்குக் கூட கொஞ்சம் அச்சம் இருந்தது. எல்லோரும் தள்ளுபடி விலையை அளிக்கும்போது நான் மட்டும் இப்படிச் செய்தால் வியா பாரம் பாதிக்கப்படும் என்ற அச்சம். ஆனால், கறார் விலைத் திட்டத்தை வாடிக் கையாளர்கள் மிகவும் வரவேற்றார்கள். வியாபாரம் பெருகியது. வர்த்தகக் கொள் கையில் சில முடிவுகளைத் துணிந்துதான்



எடுக்கவேண்டும்!''

★ தி.நகர் ஜவுளிக்கடைகளின் சங்கமமாக ஆனது எப்படி?

''தொடக்கத்தில் ஜார்ஜ் டவுனில் உள்ள நைனியப்பன் நாயக்கன் தெருவில்தான் பிரபல ஜவுளிக் கடைகள் இருந்தன. பிறகு சிந்தாதரிப்பேட்டையில் (சின்ன தறிப் பேட்டை என்பதன் கருக்கம்தான் இது) பல பிரபலக் கடைகள் திறக்கப்பட்டன.

பின்னர் திருவல்லிக்கேணியில் உள்ள தேரடி வீதி. 1939லிருந்து 1951 வரை மைலாப்பூர் அந்தப் பெருமை பெற்றது. பிறகு மெல்ல மெல்ல தி.நகர் வளரத் தொடங்கியது. தொடக்கத்தில் ரங்கநாதன் தெருவில் கடைகளே கிடையாது. உஸ்மான் சாலையில் கே.ராமச்சந்திரன் என்கிற ஒரே நகைக்கடைதான். 1935ல் இப்போது நாங்கள் இருக்கும் நாகேஸ்வரன் தெருவில்



சிறியதாகக் கடைபோட்டோம். சுமார் 1951லிருந்தே தி.நகர் முக்கியமான வணிக இடமாக அமைந்து விட்டது. இப்போது ஒரு கல்யாணத்துக்கோ வேறு விசேஷத்துக்கோ தேவைப்படும் எந்தப் பொருளானாலும் அது தி.நகரில் கிடைக்கும் என்கிற நிலை ஏற்பட்டுவிட்டது. அது எங்களைப் போன்றவர்களின் பாக்கியம்.''

தேடிச் செல்லுங்கள்!



வேறு வழியின்றி வாடிக்கையாளர்கள் உங்களைத் தேடி வரக்கூடிய வியாபாரமாகவே இருந்தாலும் அவ்வப்பொழுது வாடிக்கையாளர்களைத் தேடிப் போவது நல்லது; லாபகரமானது. ஏற்கெனவே உள்ள வாடிக்கையாளர்களைத்தான் சந்திக்க வேண்டுமென்பதில்லை, அந்தச் சந்திப்புக்கு வியாபார நோக்கம் இருக்க வேண்டுமென்ற கட்டாயமும் இல்லை.

ஏதாவது வியாபார நோக்கம் இருந்தால் அதை வெளிக்காட்டிக் கொள்ளாமல் சந்திப்பது புத்திசாலித்தனம். அதேநேரம் புதிய வாடிக்கையாளர்களைத் தேடிச் செல்லும்பொழுது இருக்கிற வாடிக்கையாளர்களை மறந்துவிடக் கூடாது.

ஏற்கெனவே உள்ள வாடிக்கையாளர்களில் முக்கியமானவர்களைப் பட்டியலிடுங்கள். டைரியில் எழுதி வைத்துக் கொண்டாலும் நல்லதே.

அவர்களில் சிலரை நீங்கள் வாரம் ஒருமுறை சந்திக்கலாம்; சிலரை இருவாரத்திற்கு ஒருமுறை, வேறு சிலரை மாதம் ஒரு முறை; குறிப்பிட்ட சிலரை பண்டிகைக் காலங்களில் சந்திக்கலாம். நேர்காணல் முறை உங்களை அவர்களுக்கு நினைவுபடுத்தும். பொருட்கள் வாங்க வேண்டிய நேரத்தில் உங்களை நினைவில் வைத்துக் கொண்டு கடைக்கு வருவார்கள். அது நீங்கள் அவர்களுக்குத் தொந்தரவு இல்லாத வகையில் பழகிவருவதைப் பொருத்தது.

- நல்லி குப்புசாமி செட்டியாரின்
'உறவு காக்கும் வணிகம்'
நூலிலிருந்து

பட்டுதொழிலில் ஒன்றிவிட்ட நல்லி குப்புசாமி செட்டியாருக்கு வேறு துறைகளில், தொழிலில் ஈடுபட விருப்பமில்லை. கூட்டுத் தொழிலையும் அவர் விரும்பவில்லை. பல தரப்பட்ட வாடிக்கையாளர்களின் நட்பு இவருக்குக் கிடைத்தது. அவர்களால் கலை, இலக்கிய, இசைத்துறையில் இவருக்கு நாட்டம் ஏற்பட்டது. அதில் இவர் ஆத்ம திருப்தி அடைகிறார்.

சென்னை மாநகரின் பல சபாக்களில் ராகங்களையும் குறித்து இன்னொரு கையேட்டையும் தயாரித்து வழங்கி வருகிறார்.

''இசையைக் கேட்கும்போது உலகத்தை மறந்துவிடுவேன்'' என்று நல்லியார் சொல்லுமளவுக்கு, அவருக்கு இசையில் ஈடுபாடு வளர்ந்துள்ளது.

ஒருமுறை சங்கீத வித்வான்கள் நிறைந்திருந்த அவையில் இவருக்கு ஒரு பாராட்டு விழா நடந்தது. அவ்விழாவில், 'அடுத்த பிறவியில் நான் சங்கீத வித்வானாகப் பிறக்க விரும்புகிறேன்' என்றார்.

விழாவுக்குத் தலைமை வகித்த சங்கீத மேதை டாக்டர். செம்மங்குடி சீனிவாச ஐயர், 'நல்லி குப்புசாமி செட்டியார், மறு பிறவியில் வித்வானாகப் பிறக்க வேண்டும் என்று ஆசைப்பட்டார். வேண்டவே வேண்டாம். அடுத்த பிறவியிலும், அவர் தொழிலதிபராகப் பிறந்து, வித்வான்களை ஆதரிக்க வேண்டும். ஏனென்றால், பாட்டுப் பாடுவதற்கு ஆட்கள் தயாராக இருக்கிறார்கள். ஆதரிப்பவர்கள்தான் குறைந்துகொண்டே வருகிறார்கள். எனவே, நல்லியார் எப்பிறவியிலும், இசைக் கலைஞர்களை ஆதரிக்கும் புரவலராக, ரசிகராகவே இருக்க வேண்டும்' என்று ஆசீர்வதித்தார்.



இனிக்கும் இசை, ரசிக்கும் மனம்!

தலைவராகவும், வேறுபல பொறுப்புகளிலும் உள்ளார். ஒவ்வொரு சங்கீதக் காலங்களிலும், டிசம்பர் மாதம் நடைபெறும் இசை விழாக்களின்போது, ஒவ்வொரு சபாவிலும், எந்தத் தேதியில், எந்த நேரத்தில் யார் யார் கச்சேரி செய்கிறார்கள் என்பதைத் துல்லியமாகத் தொகுத்து வழங்குகிறார். தமிழிலும், ஆங்கிலத்திலும் அழகிய கையேடாகத் தயாரித்து இசை ரசிகர்களுக்கு இலவசமாக வழங்குகிறார். அத்துடன் இசை விழா நிகழ்ச்சியின்போது தவறாமல் பாடப்படும் முக்கிய கீர்த்தனைகளையும் அவற்றின்

இதிலிருந்து நல்லியாரின் இசை ஆர்வமும், இசைக் கலைஞர்களுக்கு அவர் செய்து வரும் உதவிகளும் தெரிய வருகின்றன. **(மு.முத்துசீனிவாசன் அவர்களின் 'உழைப்பின் சிகரம்' - டாக்டர்.நல்லி குப்புசாமி செட்டியார் என்னும் நூலிலிருந்து)**

'ராயா' கோவிந்தராஜன் (கும்பகோணம் ராயா சில்க் மற்றும் ராயா ஹோட்டல்களின் நிர்வாக இயக்குனர்): என் நண்பர் நல்லி குப்புசாமி செட்டியார் ஒரு மாமனிதர். அவருக்குப் பஞ்சு போன்ற மனது. எந்தக் காரியம் செய்தாலும் அதைச் சுத்தமாகச் செய்யணும் என்பார். தறிக்காரராக அவரிடம் சேர்ந்த பலரும் இன்றைக்கு முதலாளி ஆகியிருக்கிறார்கள். இப்படிப்பட்ட உதவும் உள்ளம் எல்லோருக்கும் வந்துவிடாது. மயிலாடுதுறையில் மங்களவாத்தியம் வாசிக்கும் ஒருவரின் மனைவிக்குப் புற்றுநோய். சிகிச்சை செலவுக்காக தன்னிடம் இருக்கும் எல்லா சொத்துக்களையும் விற்று விட்டதாகவும், 'நான் மிகவும் கஷ்டத்தில் இருக்கிறேன். எனக்கு உதவ முடியுமா?' என்றும் செட்டியாருக்கு ஒரு கடிதம் போட்டார். அவர் என்னைத் தொடர்பு கொண்டு கடிதத்தில் இருக்கும் தகவல் உண்மையா என்பதைத் தெரிந்துவரச் சொன்னார். விசாரித்தபோது அந்தத் தகவல் உண்மை என்பது தெரியவந்தது. உடனே மங்கள வாத்தியத்தை அவருக்கு வாங்கித் தந்ததுடன் வேறுசில உதவிகளும் செய்தார். 'ஒரு தபாலுக்கு இவ்வளவு மதிப்பா?' இவ்வளவு பெரிய மனசா?' என்று கண்ணீர் வழிய அந்த இசைக்கலைஞர் நெகிழ்ந்த காட்சியை என்னால் மறக்கவே முடியாது.




செம்மங்குடி சீனிவாச ஐயர்



'ராயா' கோவிந்த ராஜன்



கூத்தபிரான்



ராதா பாஸ்கர்

ராதா பாஸ்கர் : எங்கள் முத்ரா அமைப்பின் தலைவர் என்கிற முறையிலும், எங்கள் வெளியீடான 'சமுத்ரா' இதழின் போஷகர் என்ற முறையிலும் நல்லி குப்புசாமிச் செட்டியாரை நான் நன்கு அறிவேன். அவரின் எளிமையும் மனிதாபிமானமும் என்னையும் என் கணவரையும் மிகவும் வியக்கவைக்கும். மிகவும் சகஜமாகப் பழகுவார். சபாவில் ஒரு நிகழ்ச்சி ஐந்தரைக்குத் தொடங்குகிறது என்றால் பதினைந்து நிமிடம் முன்பாகவே வந்துவிடுவார். அறிமுகமில்லாத எளியவர்களின் கருத்துகளுக்கும் பொறுமையாகப் பதில் சொல்வார். எங்கள் அமைப்பின் ஒவ்வொரு நிகழ்ச்சியிலும் தனிப்பட்ட கவனம் செலுத்துவார். நிதியளிப்பதோடு நிகழ்ச்சி குறைவின்றி நடக்கவும் அக்கறை காட்டுவார்.

கூத்தபிரான்: நான் ஒரு தொழில்முறை நாடகக் கலைஞன் அல்ல. என்றாலும் என் எழுபத்தைந்தாவது பிறந்த நாளைக் கொண்டாட அவரை அணுகியபோது உடனடியாக விழா செலவுகளை ஒத்துக் கொண்டார். அவர் தலைவராக இருக்கும் பிரம்மகான சபா ஆதரவில் நடைபெற்ற இந்த நிகழ்ச்சியின் மேடையிலேயே அந்த ஆண்டு டிசம்பரில் 'நாடகப் பத்மம்' விருதை எனக்கு வழங்கப்போவதாகவும் அறிவித்துப் பெருமைபடுத்தினார். அவர் மேடையில் பேசும்போது கீழே அமர்ந்திருக்கும் நாடகக் கலைஞர்களின் பெயரைக் குறிப்பிட தயங்கியதே இல்லை. இது என்னைப் போன்ற நாடகக் கலைஞர்களுக்கு மிகவும் பெருமை அளிக்கும் விஷயம்.

நல்லி குப்புசாமி சிந்தனைகள்!


நல்லி குப்புசாமி செட்டியார் பல நூல்களை எழுதியிருக்கிறார். அவற்றில் சிலவற்றிலிருந்து சில முத்துக்கள் :

மனிதர்கள் ஒழுக்கம் பிறழ்ந்து வாழ்வது தவறு என்று சொல்லியிருக்கிறார் ராமகிருஷ்ண பரமஹம்ஸர். வெள்ளை ஆடையில் ஒரு சிறு கறை ஏற்பட்டாலும், பளீரென்று தெரியும் என்ற எளிய உதாரணத்தின் மூலம் இதை விளக்குகிறார்.

சின்னத் தவறுதானே, பரவாயில்லை என்று எவரும் சமாதானம் சொல்லக் கூடாது. பிறர் அப்படி இருப்பதை அனுமதிக்கக்கூடாது. சிறு தவறுகள் பெரிய தவறுகளுக்கு வழிவகுத்துவிடும்.

வெள்ளைத் துணியில் சிறு கறை என்றால் அது வெளியே தெரிய வரும். அப்படிக் கறைபடியாமல் துணியைக் காப்பது போல ஒழுக்கத்தைக் காக்க வேண்டும். ஆடையில் அழுக்கு இருக்கக் கூடாது என்று நினைப்பதும் அழுக்குத் தெரியக்கூடாது என்பதும் வெவ்வேறு கண்ணோட்டங்கள். முன்னதை நினைத்துச் செயல்படுபவர்களே சான்றோர்.

('பரமஹம்ஸர் நூறு' என்னும் நூலிலிருந்து)



முதலில் பத்து சிறிய கடைகள் கொண்ட வணிகக் கட்டடத்தை தியாகராயா சாலையில் கீதா கஃபே ஓட்டலுக்கு அருகே எழுப்பியவர் பாண்டிச்சேரியைச் சேர்ந்த சொக்கலிங்க முதலியார். அதுதான் தி.நகரின் முதல் பஜார். அவர் பாண்டிச்சேரிக்காரர் என்பதால் பிறந்த மண்ணின் மீதான அபிமானம் காரணமாகக் கட்டடத்துக்கு 'பாண்டி பஜார்' என்று பெயரிட்டார். தம் பெயரை முன்னிறுத்திக் கொள்ளவில்லை. தொலைவிலிருந்து பார்த்தாலும் அந்தப் பெயர்பலகை அப்போது தெளிவாகத் தெரியும். இது சுமார் 1933 வாக்கில் என்று சொல்லலாம். அந்தக் கட்டடத்தின் கடைகள் பிரபலமாகிவிட்ட காரணத்தினாலும், அந்த இடம் ஓர் அடையாளமாகச் சொல்லப்பட்டதாலும் இன்று தியாகராயா சாலை என்ற பெயர் புழக்கத்தில் இல்லை. இடப்பட்ட பெயர் தியாகராயா சாலை என்றாலும் கூட இந்தப் பகுதியைப் பாண்டி பஜார் என்றே எல்லோரும் சொல்கிறார்கள். ராமகிருஷ்ணா

"ஆடையில் அழுக்கு இருக்கக்கூடாது என்று நினைப்பதும் அழுக்குத் தெரியக்கூடாது என்று நினைப்பதும் வெவ்வேறு கண்ணோட்டங்கள். இதில் முதலே உயர்வானது!"

பள்ளிக்கூடம் உள்ள மனை தொடங்கி ஹோலி ஏஞ்செல்ஸ் பள்ளியைத் தொடும் வரையுள்ள சாலையை எல்லோரும் 'பாண்டி பஜார்' என்றே அழைக்கிறார்கள்.

('தியாகராயா நகர் - அன்றும் இன்றும்' என்னும் நூலிலிருந்து)

'**வே**தத்தில் ஹோமா என்ற பறவையைப் பற்றிய குறிப்பு வருகிறது. அந்தப் பறவை ஆகாயத்திலேயே வாழும். தரைக்கு ஒருபோதும் வருவதில்லையாம். ஆகாயத்திலேயே முட்டை இடுகிறது. முட்டை தரையை நோக்கி விழ ஆரம் பிக்கும்.

தாய்ப்பறவை விண்ணில் வெகு உயரத்தில் வாழ்வதனால், முட்டை கீழே விழும்போதே பொரிந்து விடுகிறது. குஞ்சு வெளியே வரும். அதுவும் தரையை நோக்கி வந்துகொண்டிருக்கும். ஆனால், ஆகாயத்திலேயே இதெல்லாம் நிகழ்வத னால் குஞ்சுப் பறவை கீழே வந்துகொண் டிருக்கும்போதே அதற்கு இறக்கை முளைத்து விடுகிறது. கண்கள் திறந்துகொள்கின்றன.


'நான் தரையை நோக்கி அல்லவா விழுந்துகொண்டி ருக்கிறேன். தரை மீது மோதி னால் மரணம் நிச்சயம்' என்று அந்த குஞ்சுப் பறவை உடனே புரிந்து கொள்கிறது. அந்த மாத்திரத்திலேயே அது மேலே, மேலே பறக்க ஆரம் பிக்கிறது.

'இந்த உணர்வு எல்லா மனி தர்களுக்கும் இருக்க வேண் டும். ஆபத்தான சூழ்நிலை வரும் முன்பே ஆபத்தை உணர்ந்து கொள்ளும் ஞானம் கைவரப் பெற வேண்டும். பறவைகளுக்கு அது இயற்கையாகவே அமைந்துள்ளது. ஆனால், மனிதர்கள் இதைப் படிப்பறி வினாலும், அனுபவத்தினாலும் பிறரது அனுபவங்களைக் கேட்டறிந்தும் அதற் கேற்ப நடந்துகொள்ள வேண்டும்.

('ஐந்திலிருந்து ஆறறிவிற்கு' என்னும் நூலிலிருந்து)

வேலையோ ஒருவருக்குத்தான் உள் ளது. வேலைக்காக வந்திருப்பவர்களோ பலர். இந்த வேலை நமக்குக் கிடைக் கவும், அவர்களைச் சந்தோஷப்படுத்த ஒரு குறைவான ஊதியத்துக்கும் உங்களை நீங்கள் விற்க முற்படும்போது இந்த வேலைக்கான முழுமையான தகுதியும் இவரிடம் இல்லையோ என அவர்களை யோசிக்க வைத்துவிடும்.

இதற்குப் பொருள் அவர்கள் அதிர்ந்து போகும் அளவுக்கு அதிகமான ஊதியத் தைக் கேட்க வேண்டும் என்பது அல்ல. ஆனால், அதற்குரிய விலைக்கும் கீழே





இறங்கி, 'நமக்கு இது கிடைத்தால் போதும்' என உங்களை நீங்களே தாழ்த்திக் கொள்ளும்போது உங்கள் தகுதி பற்றியே சந்தேகம் எழவும் வாய்ப்பு வரும். ஒருவர் தன்னைக் குறைத்து விற்பனை செய்வது என்பது இதுதான்.**('நேரம் நல்ல நேரம்' என்னும் நூலிலிருந்து)**

குழுப்பணி செய்யும்போதும் குழு உறுப்பினரிடையே முரண்பாடுகள் தோன்றுவது இயல்பு.

எல்லா முரண்பாடுகளுமே குழுப் பணிக்கு எதிரானவை என்று சொல்ல முடியாது. முரண்பாடுகள் சில சமயம், நன்மை தருபவையாகவும் இருக்கலாம். அவற்றாலும் தெளிவான தீர்மானங்கள் எடுக்கப்படலாம். படைப்பாற்றலும், புதுமையான அணுகுமுறைகளும் அவற்றால் உருவாகலாம். எல்லாவற்றுக்கும் மேலாக, குழு உறுப்பினர்களிடையே தன்னார்வமும், பங்களிப்பும் பெருகலாம். இத்தகைய முரண்பாடுகள் நிறுவனத்துக்குச் செழிப்பையே உருவாக்கும்.

எடுத்துக்காட்டாக முடியாட்சியையும், குடியாட்சியையும் ஒப்பீடு செய்வோம். முடியாட்சியில் முரண்பாடுகளுக்கு

"ஒரு நிர்வாகத்தின் மக்கள் தொடர்புதுறையில் இருப்பவர்களுக்கு நாவடக்கம் அவசியம்!"


வாய்ப்பு இல்லை. ஆனால், குடியாட்சியில் எல்லோருடைய பங்களிப்பும் இருப்பதால் அதில் முரண்பாடுகள் இருப்பது இயற்கை. குடியாட்சி நாடுகள்தான் உலகில் வல்லரசாக விளங்குகின்றன. பொருளாதாரமும் அங்கேதான் உச்ச நிலையை அடைந்து வருகிறது.**('65 நிர்வாக மந்திரங்கள்' என்னும் நூலிலிருந்து)**


நிறுவன நிர்வாகிகளுக்குத் தொல்லைகள் காரணமாகக் கோபமும் ஆத்திரமும் வருவது இயற்கையே. ஆனாலும் யாராக இருந்தாலும் சரி, பேச்சில் அடக்கம் தேவை. அதிலும் வியாபாரிகளுக்கு, நிர்வாகிகளுக்கு நாவடக்கம் அத்தியாவசியம்.

குறிப்பாக நிர்வாகத் துறையின் இரு பிரிவினர் நாவடக்கத்துடன் நடந்து கொள்ள வேண்டும். முதலாவது மக்கள் தொடர்புதுறை; அடுத்தது தொழிலாளர் உறவுத்துறை. எந்தச் சந்தர்ப்பத்திலும் இந்தத் துறையைச் சேர்ந்தவர்கள் துடுக்காகப் பேசக் கூடாது. தடித்த வார்த்தைகளைப் பயன்படுத்தக் கூடாது. எப்படிப்பட்ட சூழ் நிலையிலும் பொறுமை காத்து இனிமையாகப் பேச வேண்டும்.

அப்படிச் செயல்படாதவர்கள், செயல்பட முடியாதவர்கள் இரு துறைகளிலிருந்தும் நீக்கப்பட வேண்டும்.

('வள்ளுவர் வகுத்த வாணிபம்' என்னும் நூலிலிருந்து)





எழுத்தாளர்களுக்கும் பதிப்பாளர்களுக்கும் பலவிதங்களில் உதவி செய்துவரும் நல்லி குப்புசாமி செட்டியார், கடந்த ஆறு வருடங்களாக மொழி பெயர்ப்பாளர்களைச் சிறப்பாகக் கௌரவப்படுத்தி வருகிறார்.

சாகித்ய அகாடமியின் மொழிபெயர்ப்பாளர் விருது பெற்றுள்ள எழுத்தாளர் குறிஞ்சிவேலன், குறிஞ்சிப்பாடியிலிருந்து நடத்தி வரும் 'திசை எட்டும்' இதழின் (சர்வதேச மொழி பெயர்ப்புக் காலாண்டிதழ்) தலைமைப் புரவலராக இருக்கும் நல்லி குப்புசாமி செட்டியார் கடந்த ஆறு வருடங்களாக மொழி பெயர்ப்பாளர்களுக்குப் பரிசுகளையும் வழங்கி வருகிறார்.

நல்லி விருது!



'பத்தாயிரம் ரூபாய்' என்று ஒரு பரிசுடன் தொடங்கிய இந்தத் திட்டத்தில் இப்பொழுது வருடத்துக்கு 12 பரிசுகள் வழங்கப்படுகின்றன. இவற்றில் வாழ்நாள் சாதனையாளர் விருதுகள் இரண்டு, மீதி பத்தும் தமிழிலிருந்து பிற மொழிகளுக்கும், பிற மொழிகளிலிருந்து தமிழுக்கும் மொழி பெயர்க்கும் படைப்புகளுக்காக. இதற்கான அறிவிப்பு பல பத்திரிகைகளில் வெளியிடப்படுகிறது. ஒவ்வொரு மொழிக்கும் ஒரு தனித் தேர்வுக்குழு உண்டு. மூன்று தேர்வுக்குழு உறுப்பினர்களில் ஒருவருக்கு மற்ற இருவர் யார் என தெரிய வராது. தேர்வுப் பொறுப்பை 'திசை எட்டும்' ஆசிரியரிடமும் ஆசிரியக் குழுவிடமும் விட்டுவிடும் நல்லி செட்டியார், தேர்வு முறைகளில் தலையிடுவதில்லை. நிதி கொடுக்கிறார். ஒன்றரை லட்சம் நிதி என்றால் ஏறத்தாழ அதே அளவுக்கு விழா நடத்தும் செலவையும் ஏற்கிறார். விருது பெறுபவர்கள் வந்து செல்ல, ரயிலில் ஏ.ஸி. வகுப்புக் கட்டணம் தந்து, சென்னையில் தங்கும் வசதியும் வாகன வசதியும் செய்து தந்திருக்கிறார். இதுவரை நான்கு மூத்த எழுத்தாளர்கள் வாழ்நாள் சாதனையாளர் விருதினைப் பெற்றிருக்கிறார்கள்.

சிங்கப்பூரைச் சேர்ந்த எழுத்தாளர் ஜெயந்தி சங்கர் உட்பட இதுவரை 37 பேர் சிறந்த மொழி பெயர்ப்பாளர் விருதுகளைப் பெற்றிருக்கிறார்கள்.

ஒருமுறை கன்னட மொழியிலிருந்து தமிழுக்கு வந்த படைப்புகளில் இரு மொழிப் பெயர்ப்பாளர்கள் ஒரே மதிப்பெண்களைப் பெற்றார்கள். என்ன செய்வது என்று நல்லி செட்டியாரை, ஆசிரியர் குறிஞ்சிவேலன் கேட்டபொழுது 'இருவருக்குமே பரிசை அறிவித்துவிடுங்கள். தொகையைப் பிரித்துக்கொடுக்க வேண்டாம். தனித்தனிப் பரிசாக ஆளுக்குப் பத்தாயிரம் தந்து விடலாம்' என்று பெருந்தன்மையுடன் சொல்லி விட்டார். ○

நல்லி குப்புசாமி செட்டியாரின் பண்புநலன், ஆளுமைகள், அறிவார்ந்த நிகழ்வுகள் குறித்து சில பிரபல பிரமுகர்கள் கூறுகின்றனர்.


சிவகுமார், (கர்நாடக இசைப் பாடகி நித்யஸ்ரீயின் தந்தை):

எனக்கு அறுபது வருடங்களுக்கும் மேலாக குப்புசாமிச் செட்டியாரைத் தெரியும். நாங்கள் பள்ளி நண்பர்கள். தி.நகர் பனகல் பார்க் அருகில் உள்ள ராமகிருஷ்ணா பள்ளியில் ஒன்றாகவே படித்தோம். பலருக்கும் அவரை பட்டுப்புடவை உலகில் சாம் ராஜ்யம் கண்ட ஒரு தொழிலதிபரா கத்தான் தெரியும். ஆனால், அவர் ஒரு சகலகலா வல்லவர். படிப்பில் தலைசிறந்து விளங்கினார். எப்போதுமே அவரைச் சுற்றி மாணவர் கும்பல் இருக்கும். எல்லாப் பாடங்களிலும் நூற்றுக்கு நூறு வாங்குவார். 'நல்லி 100' கடை திறந்தபோதுகூட 'இந்தப் பெயரைப் பார்த்தால் எனக்கென்னவோ நீங்கள் வாங்கிய மதிப்பெண்தான் ஞாபகத்துக்கு வருது' என்று சொன்னேன். அன்று இருந்தது போலவே இன்றும், அதே தன்மை யுடன் அதே சிநேகபாவத்துடன் இருக்கிறார். ஆனால், ஒரு கட்டத்தில் அவர் தகப்பனார் தவறிவிட்டார் (பள்ளியே திரண்டு சென்று துக்கம் விசாரித்தது) அதனால் பள்ளிப்படிப் போடு நிறுத்திக்கொள்ள வேண்டிய கட்டா யம். அப்படியில்லையென்றால் நிச்சயம் அவர் ஒரு கலெக்டராகவோ அல்லது அதைவிட பெரிய பதவிக்கோ வந்திருப்




வில்லி பாரதமும்... நல்லி பாரதமும்..!

* எஸ்பி.முத்துராமன்



* சுவாமி பத்மாஸ்தானந்தா



பார். அவருக்கு எப்போது சங்கீத ஈடுபாடு வந்தது என்று எனக்குத் தெரியவில்லை.

சுவாமி பத்மஸ்தானந்தா (செயலர், ராமகிருஷ்ணா மிஷன் ஆசிரமம், தி.நகர்):


நம் ஆசிரம பள்ளிக்கூடத்தின் பழைய மாணவர். இப்போது இந்த ஆசிரமத்தின் நிர்வாகக் குழுவின் உபதலைவர். சமுதாயத்தில் மிகவும் புகழ்பெற்றவராக இருந்தாலும் அவர் பழகும் விதம் எல்லோரையும் கவரக்கூடியது. நம்முடைய கலை, பண்பாடு, கலாசாரம்... ஆகியவற்றைப் பேணிக்காப்பதிலும் மேம்படுத்துவதிலும் பெரும் பங்கு வகிக்கிறார். எங்கள் பள்ளி அருகில் அடிக்கடி போக்குவரத்து நெரிசல் அதிகமான நிலையில், சாலையில் உள்ள மீடியனைச் சரிசெய்ய உரிய அதிகாரிகளுடன் அவர் பேசி செயல்பட்டதில், பள்ளி வாகனங்களும் பெற்றோர்களும் தடையின்றி வந்து செல்ல உபயோகமாக இருக்கிறது. பனகல் பூங்கா அருகில் உள்ள எங்கள் பள்ளி வாசலில் நிறைய கடைகள் போட்டிருந்ததால் இடைஞ்சலாக இருந்தது. நாங்கள் கேட்டுக்கொண்டதன் பேரில், இவர் அந்தக் கடைகளை அகற்ற ஆவன செய்து, அங்கு நடைபாதைப் பூங்காவை உருவாக்கிப் பராமரித்து வருகிறார்.

ஜே.கிருஷ்ணமாச்சாரி (வழக்கறிஞர்):

நானும் நல்லி செட்டியாரும் ராமகிருஷ்ணா பள்ளியில் முதல் ஃபார்மிலிருந்து (அப்போதைய ஆறாம் வகுப்பு) ஒன்றாகப் படித்தோம். பின்னாளில் அவர் தலைப்புச் செய்திகளில் இடம் பெறுவார் என்று யார்தான் அப்போது நினைத்திருக்க முடியும்? சிவாவிஷ்ணு கோவில் நிர்வாகக் குழுவில் பங்குபெற்றபோது டாக்டர் சௌரிராஜனும் என்னுடன் இணைந்தார். மிகச் சிறப்பாக ஆன்மிக விஷயங்களை நடத்தி வந்தோம். எண்பதுகளில் அரசியல்வாதிகள் நிர்வாகத்தில் நுழைந்ததும் நாங்கள் நகர்ந்துவிட்டோம். நான் சட்டம் படித்து வழக்கறிஞர் ஆகி வாணி மஹாலில் சாதாரண உறுப்பினராகத் தொடங்கி பொருளாளர், பிறகு செயலர் ஆகிவிட்டேன். கிட்டத்தட்ட முப்பது வருடங்களாக அதன் செயலராக இருக்கிறேன். பல நிகழ்ச்சிகளுக்கு நல்லி செட்டியார் ஸ்பான்ஸர் செய்திருக்கிறார். விளம்பரம் தேவையென்று அவர் ஆர்வம் காட்டியதில்லை. எந்த அரசியல்வாதியுடனும் நெருக்கம் இல்லாமல் பொதுவாழ்வில் இவ்வளவு பிரகாசிப்பவர்கள் குறைவாகவே இருப்பார்கள். அவர் தேர்ந்த இசை ரசிகர். எந்தப் பிரபல கர்நாடக இசைக் கலைஞரின் தேதி, எங்களுக்குக் கிடைக்கவில்லையென்றால் செட்டியாரிடம் கூறிவிட்டால் பிரச்னை தீர்ந்துவிடும். அந்த அளவுக்கு செல்வாக்கு.

பி.என்.விஜயராகவன் :

நல்லி குப்புசாமி செட்டியாருடன்




✱ ஜே.கிருஷ்ணமாச்சாரி



✱ சுசிலாபத்மநாதன்



✱ ரமா விஜயராகவன்



✱ பி.என்.விஜயராகவன்

பள்ளியில் ஒரே பெஞ்சில் அமர்ந்து படித்தவன் நான். தன்னுடன் படித்த அனைவரையுமே நினைவு வைத்துக் கொள்வார். ஒரு முறை மயிலாப்பூரில் தம்முடன் படித்த நண்பர் ஒருவர் வீட்டில், எங்கள்



பள்ளி மாணவராக நல்லி

எஸ்.எஸ்.எல்.ஸி. க்ரூப் ஃபோட்டோவைப் பார்த்திருக்கிறார். தன்னிடம் வெகு காலம் இருந்த அதன் பிரதி வீடு மாறியபோது காணாமல் போய்விட்டது என்று சொன்னவுடன், குப்புசாமி, உடனே புகைப்படக்காரர் யோகாவை அந்த இடத்துக்கு வரச் சொல்லி, அதே ஃபோட்டோவுக்குப் பல பிரதிகளை எடுக்கச் சொல்லித் தம் சக மாணவர்கள் பலரைத் தொலைபேசியில் தொடர்பு கொண்டு ஃபோட்டோ பிரதிவேண்டுமா என்று கேட்டுக் கேட்டு அவர்களுக்கு அனுப்பி வைத்தார்.

ரமா விஜயராகவன்:

என் திருமணத்துக்கு முன்பே நல்லியை அறிவேன். என் தந்தை ராமகிருஷ்ணா உயர்நிலைப் பள்ளியில் தமிழாசிரியர். அவருடன் நல்லி கடைக்குச் சென்ற காலத்தில் எல்லா வாடிக்கையாளர்களுடன் குப்புசாமி செட்டியார் கனிவாக அவர் பழகுவதைப் பார்த்திருக்கிறேன். அன்றும் இன்றும் ஆசிரியர்களுக்கு எப்போதுமே அவர் மரியாதை தருவார்.

கிரேஸி மோகன்:

அன்று திரௌபதிக்குச் சோதனை வந்தபோது கிருஷ்ணர் செய்த உதவி 'வில்லிபாரதம்' என்றால், நாடகக் கலைக்கு சோதனை வரும்போதெல்லாம் குப்புசாமி செட்டியார் செய்யும் உதவியை 'நல்லி பாரதம்' எனலாம். திரௌபதிக்கு 'கூறையை' அளித்தவர் கிருஷ்ணர் என்றால் பல சபாக்களுக்கு 'கூரை' அளித்தவர் நல்லி. கலைஞர்கள் சிறப்பான சூழலில் தங்கள் திறமைகளை வெளிப்படுத்துவதற்கு உதவி வருகிறார். எங்கள் நாடகக்குழுவுக்குக்கூட தலைமை தாங்குவதிலிருந்து ஸ்பான்ஸர் செய்வது வரை பல உதவிகளைச் செய்திருக்கிறார். அவர் வியாபாரம் அமோகமாக நடந்து கொண்டிருக்கும்போது இதைப் பற்றி எல்லாம் அவர் எதற்காகக் கவலைப்பட வேண்டும்? புகழ்தான் ஒரே நோக்கம் என்றால் திரைப் படங்களை ஸ்பான்ஸர் செய்துவிடலாமே! எதற்காக நாடகங்களுக்கும் இசை நிகழ்ச்சிகளுக்கும் நிதி கொடுத்து ஆதரிக்க வேண்டும்? அவர் நிஜமாகவே ஒரு கலாரசிகராக இருக்கும் காரணத்தால்தான் இது சாத்தியமாகிறது.

இயக்குனர் எஸ்.பி.முத்துராமன்:


அணுகுமுறை, உறவுமுறை, பழகும் தன்மை, உள்ளன்புடன் கூடிய சிரிப்பு...

இவை எல்லாவற்றிலுமே நல்லி குப்புசாமி செட்டியாரின் சிறப்பு தெரியும். வெளி நாடுகளிலும் கிளைகளைத் திறந்து உலகத் தரத்துக்கு நம் இந்திய பட்டின் சிறப்பை நிரூபித்தவர். அவர் வீட்டிலேயே ஒரு பெரிய நூலகம் உண்டு. அவரே பல நூல்களை எழுதியிருக்கிறார். நிர்வாகவியல், வாழ்வியல் தொடர்பாக அவர் எழுதியவை எல்லாம் அவரது அனுபவங்களின் பிரதிபலிப்பு. கன்னிமரா நூலகத்தின் புரவலர். நெசவாளி குடும்பத்தில் பிறந்த அவர், நூலை இணைப்பதுபோல மக்கள், தொழில், கலை ஆகியவற்றை இணைப்பதன் மூலம் மேலோங்கிய புகழ் பெற்றிருக்கிறார். பாட்டுக்கு ஒரு பாரதி என்றால் பட்டுக்கு ஒரு நல்லி. திருப்பதி திருமலை தேவஸ்தானத்தின் நிர்வாகக் குழுவிலும், மயிலை கபாலீஸ்வரன் கோவில் அறங்காவலர் குழுவிலும் உறுப்பினர். திரைப்படங்களைப் பொறுத்த வரை தணிக்கைக் குழுவின் உறுப்பினர். இதெல்லாம் போக சமூகப் பணியாளர், அன்பான குடும்பத் தலைவராக, ரசிகராக... எப்படித்தான் இவருக்கு நேரம் இருக்கிறதோ என்று யோசித்தால், மிகச் சரியாக நேரத்தைத் திட்டமிடுகிறார் என்றுதான் பதில் கிடைக்கிறது. தூர்தர்ஷன் நடராஜன் போன்ற சிறந்த நண்பர்கள் அவருக்கு அமைந்ததற்கும் அவரது நேர்மையான அணுகுமுறைதான் முக்கிய காரணம்.

'வெள்ளத்தனைய மலர் நீட்டம்
மாந்தர்தம்
உள்ளத்தனைய உயர்வு' என்கிறார் வள்ளுவர். குப்புசாமி செட்டி யாரின் உள்ளம் உயர்வானது. அதனால் தான் அவர் உயர்வும் சிறப்பானதாகவே இருக்கிறது.

சுசீலா பத்மநாபன்:

அவரும் நானும் பல குழுக்களில் இணைந்து பணியாற்றி இருக்கிறோம். தணியாத தமிழ்பற்று உண்டு அவருக்கு. நட்புக்கு சிகரம் அவர். என் கணவர் மருத்துவமனையில் கடும் சுவாச பாதிப்பின் காரணமாகச் சேர்க்கப்பட்டிருந்தார். என்னால் மருத்துவமனையை விட்டு வெளியே வரமுடியாத நிலை. அப்போது மியூஸிக் அகாடமி தேர்தல் மிகவும் தீவிரமான நிலையை எட்டியிருந்தது. என் கணவரை மருத்துவமனையில் வந்து பார்த்த நல்லி செட்டியார், 'உங்கள் மனைவி மீட்டிங்க்கு வரலாமா? அவங்க பேரைச் சேர்த்துக்கட்டுமா?' என்று தயக்கத்துடன் கேட்டார். பதில் பேசமுடியாத நிலையிலும் கையசைவின் மூலம் 'நீ கட்டாயம் போகணும்' என்று எனக்கு உத்தரவு கொடுத்தார் என் கணவர். அப்படி



✸ கிரேஸி மோகன்



✸ சிவகுமார்

ஓர் ஆத்மார்த்தமான நட்பு.


காந்திஜிக்கு விடை தெரியாத பிரச்னைகள் தோன்றும் போதெல்லாம் பகவத்கீதை புத்தகத்தில் ஏதாவது ஒரு பக்கத்தைத் திறந்து பார்ப்பாராம். அதில் அந்த பிரச்னைக்கான விடை இருக்குமாம். அப்படித்தான் நான் எதற்காவது ஆலோசனை கேட்டாலும் மிகவும் சமநிலையோடு உள்ளதை உள்ளபடி அலசி ஒரு தீர்மானத்தை வெளிப்படுத்துவார். அது யாரையும் புண்படுத்தாததாகவும், அதே சமயம் அழுத்தமானதாகவும் இருக்கும்.

●

❖ நடராஜன்

கோடியில் ஒருவர்!

நல்லி குப்புசாமி செட்டியாருடன் நெருங்கிப் பழகும் தூர்தர்ஷன் முன்னாள் இயக்குநர் நடராஜன் பேசுகிறார்..



1975ல் ஒரு நாள். ஆல் இந்தியா ரேடியோவுக்காக ஒரு நிகழ்ச்சியை கவரேஜ் செய்ய கோவைக்குச் சென்றபோது திருமுருக கிருபானந்த வாரியார் என்னை அவருக்கு அறிமுகப்படுத்தினார். பின்னர் மயிலை கபாலீஸ்வரர் கோயில் கும்பாபிஷேகத்துக்கு, வாரியாரைத் தம் காரில் நல்லி செட்டியார் அழைத்துவந்தபோது எங்கள் நட்பு புதுப்பிக்கப்பட்டது!

செட்டியார் ஒரு பர்ஃபெக்ஷனிஸ்ட். பல சமயங்களில் அவருடன் பயணம் செய்திருக்கிறேன். நாளிதழை எடுத்துப் படித்துவிட்டு ஏனோதானோவென்று வைக்காமல் மடிப்பு கலையாமல் வைப்பார். பயணத்தின்போது நிறைய புத்தகங்களையும் கையோடு எடுத்து வந்து படிக்கத் தொடங்கி விடுவார்.



அவரிடம் ஒரு லட்சம் ரூபாய் கேட்டால் கூட கொடுத்துவிடுவார்! ஆனால் அவரது நூலகத்திலிருந்து ஒரு புத்தகத்தைக் கடன்கேட்டால் நிறைய யோசிப்பார்!

ஒரு முறை அருணோதயம் புத்தக வெளியீடு 30வது ஆண்டு விழாவைக் கொண்டாடிய போது 30 நூல்களை வெளியிடத் தீர்மானித்தது. அவற்றில் என்னுடைய சிறுகதைத் தொகுப்பும் ஒன்று. நல்லி செட்டியாரின் ஆற்றலை அறிந்திருந்த நான், அவரையும் ஒரு நூல் எழுதத் தூண்டினேன். 'வெற்றியின் வரலாறு' என்ற அந்த நூல் பின்னர் தெலுங்கு, ஹிந்தி, மராத்தி, ஆங்கிலம் என்று பல மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டது.

ஒன்பது சபாக்களில் தலைவராக செட்டியார் இருக்கிறார். வெளிநாட்டிலிருந்து வருபவர்களுக்கும் பயன் தரும் வகையில் ஒவ்வொரு டிசம்பரிலும் எந்தக் கச்சேரி எந்தத் தேதியில் எங்கே நடக்கிறது என்பதைப் பட்டியலிடும் கையேடு ஒன்று வெளியிடுகிறார். அதேபோல கச்சேரிகளில் பாடப்படும் கர்நாடக இசைப் பாடல்கள் தொடர்பான விவரங்கள், அவற்றை எழுதியது யார், என்ன ராகம், போன்றவை அடங்கிய நூலையும் வெளிக் கொண்டு வருகிறார்.

2003ல் அவருக்கு பத்மஸ்ரீ விருது அளித்த போது, 'நீங்கள் கோடியில் ஒருவர்' என்றேன். அவர் விளக்கம் கேட்டபோது, 'இந்தியாவில் நூறுகோடி பேர் இருப்பார்கள். சுமார் நூறு பேருக்குதான் 'பத்ம' விருது அளிப்பது வழக்கம். அந்த விதத்தில் நீங்கள் கோடியில் ஒருவர்' என்று நான் கூறிய விளக்கத்தை மிகவும் ரசித்தார்.

அவர் ஆங்கிலத்தில் என்னிடம் கூறிய தமிழாக்கம் இது.

'என்னை விடச் சிறந்தவர்களை நான் சந்திக்க நேர்ந்தால், அவர்களை உன்னிப்பாகக் கவனிப்பேன். அவர்களது செயல்பாடுகளைக் கற்றுக் கொள்வேன். அவர்களை எனக்கு முன்னுதாரணமாகக் கொண்டு பின்பற்றுவேன். ஒரு கணமும் அப்படிப்பட்டவர்களைப் பொறாமைக் கண்ணுடனோ, அகங்காரத்துடனோ பார்ப்பதில்லை.

அவர் குறித்த சிறப்பான சுய விமர்சனம் இது!

பேட்டி, கட்டுரைகள்: **ஜி.எஸ்.எஸ்.**

அட்டை மற்றும் படங்கள் : **ஸ்ரீஹரி**


Nalli
80
Nalli
பைரவி
கலெக்ஷன்
2009
Code No.BH09005
பனகல் பார்க், தி.நகர், சென்னை-17 தொ. பே. : 24344115 / 42604567. Fax : (044) 24343062
Email : inquiry@nalli.com | Website : www.nalli.com

Registered with the Registrar of Newspaper of India under No. 1041/57 * Registered No. TN / CC (S) DN / 144 / 09 -11 * Licensed to post without prepayment under PMG's Licence No. WPP TN / CC (S) DN / 70 / 09 - 11* Registered as a Newspaper in Srilanka.





Registered with the Registrar of Newspaper of India under No. 10417/57 * Registered No. TN / CC (S) DN / 144 / 09 - 11 * Licensed to post without prepayment under PMG's Licence No. WPP TN / CC (S) DN / 70 / 09 - 11* Registered as a Newspaper in Srilanka.